# காவேரி

பார்த்திப - ஐப்பசி



October - 1945

As. 6

# தீபாவளி நெருங்கிவிட்டது!

தீப ஒளியுடன் மன ஒளியும் வீடுகளில் பிரகாசிக்கவேண்டுமல்லவா?

**புகழ்பெற்ற**

## ராதா ஸில்க் எம்போரியம்

உங்கள் மகிழ்ச்சிக்குகந்த விருப்பத்திற்கேற்ற பலரகப் பட்டு, நூல் நாகரீக புடவைகள் வேஷ்டி தினுசுகள் உள்ள பெரிய கடை

**ஏராளமான ஸ்டாக்குகள் உள்ளன**

அனைவரும் வந்து தங்களுக்குத் தேவையானவைகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்ளலாம்

**விலை நயத்திற்கு நிகரற்ற ஷாப்**

# ராதா ஸில்க் எம்போரியம்

**போன் நெ. 8016**
**மைலாப்பூர்**

—

பெரிய தெரு,
**கும்பகோணம்**



★




**Mfg. தி ஜெனரல் ட்ரேடர்ஸ்**
**கும்பகோணம்**

நீங்கள் இன்று—

## A. 1 ஐவரி பற்பொடியைக்

கொண்டு பல் துலக்கினீர்களா?

துலக்கினேன்!

பல்லிலுள்ள துர்நாற்றத்தையும் புகையிலைகாவியையும் போக்கி, ஸகலவித தந்த ரோகங்களையும் அகற்றி முத்து போன்ற தூய்மையான வெண்மையாக்கிவிட்டது.

## A. 1 காயசஞ்சீவி தைலம்

எப்படி?

மிகவும் குளிர்ச்சி உள்ளது. தினந்தோறும் காலையில் ஸ்நானம்செய்யுமுன் ஒரு டீஸ்பூன் அளவு தலையில் தேய்த்து ஸ்நானம் செய்ய உஷ்ணம் நீங்கி நேத்திர ரோகங்களைப் போக்கி தலைமயிரை வளரச்செய்கிறது.

**எல்லா இடங்களிலும் கிடைக்கும்**

இந்திய மக்களிடையே
புகழ்பெற்று விளங்கும் நமது
வாசனைத் திரவியங்கள் சுமார் அரை
நூற்றாண்டுகளாக வினியோகிக்
கப்பட்டு வருகின்றன.



விஜயபுரம்

# கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி தைலங்கள், கிருஷ்ணா அகர்பத்தி, ராஜா பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும் பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

**K·T·R**

**சந்தனாதி தைலம்**




...SOLE DISTRIBUTORS...

**GIRISON & Co...MADRAS**

*Calcutta Agent* :— **A. NATARAJAN,**
118 Rash Behari Avenue, Calcutta.

*Guntur District Agent*:— **A. SRINIVASA IYER,**
Madras Club, Narasaraopet, Guntur Dist.

வடஇந்தியாவிலுள்ள மற்ற பாகங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.


ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A.ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"



# பழுதுபார்த்து உபயோகியுங்கள்...

## சிக்கனப்படுத்துவதால் லாபமுண்டு !

உங்களுக்கு ஒவ்வொரு தேவையையும் குறைத்துக் கொள்ளுவதால் கையில் பணம் மிச்சமாகிறது. வாரக் கணக்காகவும் மாதக் கணக்காகவும். இப்படிச் செய்வதால் இந்தச் சிற சிற சேமிப்புக்கள் எவ்வளவு பெருந்தொகை யாகிறது !

தேவைப் பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியாலும் ஏழைகளின் தேவைகளை உத்தேசித்தும், இப்போது நீங்கள் சிக்கனத்தைக் கையாளுவது உங்கள் கடமை. இந்த அவசியமான நிலைமையை ஒரு உயர்ந்த சிறப்பாகக் கொண்டு காரியங்களை செய்வதன் மூலம் நீங்கள் உங்கள் நாட்டிற்கும் உங்களுக்கும் பண உதவி செய்து கொண்டவர்களாவீர்கள்.



## பொருட்களை மிதமாகச் செலவிட்டு அவை, தாரளமாகக் கிடைக்கும்படிச் செய்யுங்கள்



கிழிந்த துண்டுகள், படுக்கை விரிப்புக்கள், மேஜை விரிப்புக்கள் ஆகியவற்றையும் இழை ஒட்டி வெகு நாட்கள் வரை உழைக்கச் செய்யுங்கள்.



பழைய ஷர்ட், ஜிஜார், பைஜாமா, வேஷ்டி எல்லாவற்றிற்கும் ஒட்டுப்போடுங்கள். புதியவற்றை வாங்காதீர்கள்.



தாயார் தகப்பனாரின் பழைய துணிகளிலிருந்து குழந்தைகளுக்குத் துணிகளைத் தைத்துக் கொடுங்கள்.

அவைகள் கேடுநேவாகத் தெரியமாட்டா.



பழைய ஜோடுகளை ஒட்டுப் போட்டுத் தைக்கும்படி அனுப்புங்கள். அவைகளை எறியாதீர்கள்.



புதுக் குடைகள் வாங்காதீர்கள். உங்கள் பழைய குடையைப் பழுதுபார்த்துக் கொள்ளுங்கள்.



பழையட் 'டிரங்கு,' 'சூட்கேஸ்,' 'ஹோல்டால்' எல்லாவற்றையும் பழுதுபார்த்து வைத்துக் கொள்ளுங்கள். புதியவற்றின் விலை அதிகம்.

## உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்

இந்திய சர்க்கார் இ. & பி. இலாகா வெளியீடு.

AAA 3



# எதிர்பாராத விருந்து

மிக்க தயாரிப்புக்களுடன் நாம் எதிர்பார்க்கும் விருந்தைக் காட்டிலும் திடீரென வரும் ஓர் விருந்தாளிக்கே அதிக வரவேற்பு.

வீட்டிலோ வேலை செய்யுமிடத்திலோ, கோடையிலானாலும் சரி, குளிரிலானாலும் சரி, புத்தப்புதிய ஒரு கோப்பை தேனீரே அந்த விருந்தினர்க்கு நல்ல வரவேற்பு.

இந்தியா பூராவுமுள்ள எங்கள் டெப்போக்களிலிருந்து ப்ரூக் பாண்ட் தேயிலையை எங்கள் சொந்த விற்பனையாளர்கள் இடைவிடாமல் விநியோகிக்கிறார்கள்.

நீங்கள் எங்கேயிருந்தாலென்ன ? பறித்த போதுள்ள மணத் தோடேயே எங்கள் தேயிலை உங்களை வந்து சேருகிறது.



தோட்டத்திலிருந்து தொண்டைவரை— சதா புதுமணம்

# ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

# சந்தனம் —

## குளிர்ந்த மணம்

ஆதிகாலந்தொட்டு சந்தனத்தின் விலையற்ற குணங்களில் ஒன்று அதன் குளிர்ச்சியளிக்கும் தன்மையே. ஜுரத்தாலேற்படும் தாபத்தை தணிப்பதற்குரிய ஔஷதமாகவன்றி சோர்வுற்ற அவயவங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கும் உபயோகப்படுகின்றது. குறைவற்ற தன்மையை முன்னோர்கள் சந்தனத்திற்கு ஒப்பிடுவார்கள். அதே சந்தனம் இன்று மைசூர் சந்தன சோப் என்னும் நாகரீக உருவத்தில் சரீரத்தின் குளிர்ச்சிக்கும், சோர்வையகற்றுவதற்கும் பயன்பட்டு வருகிறது.

# மைசூர்
# சந்தன சோப்

சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே

தென் இந்தியாவுக்கு ஸோல் ஏஜண்டுகள்:- பெஸ்ட் & கம்பெனி, லிமிடெட், சென்னை

B-I-Tm

★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★




## இன்றுவரை நிகரற்றது.

கிடைக்கக்கூடிய சந்தன அத்தர்களில் மைசூர் சந்தன அத்தர்தான் மிக உயர்ந்ததும் சுத்தமானதும் ஆகும். வைத்திய உபயோகத்திற்கோ அல்லது சோப், இதர வாசனை திரவியங்கள் தயார் செய்யவோ 'மைசூர்' பெயர் கொண்ட சந்தன அத்தருக்கு மிஞ்சியது ஒன்றுமில்லை.

## மைசூர்
## சந்தன அத்தர்

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு. MSK-8-TM

---

# ஜீவாம்ருதம்

## ஆண்மைக்கும் ஆரோக்கியத்திற்கும்



ஆண்மைக்கும் ஆரோக்கியத்திற்கும் நிகரற்ற இந்த டானிக் 1898 வருஷம் முதல் பிரசித்தி பெற்றது. இது நரம்புகளுக்கு வலுவை யூட்டி எக்காலத்திலும் எதையும் எதிர்த்து நின்று ஜெயிக்கக்கூடிய சக்தியை அளிக்கிறது.

## ஆயுர் வேதாஸ்ரமம், மதருஸ்



இன்றைய கர்நாடக சங்கீத உலகில் இணையற்று பிரகாசித்து எல்லோரது ஆசியும் ஆதரவையும் பெற்று வரும்

**கர்னுடக சங்கீத வித்வான்**

கும்பகோணம்

# இசை ஒளி A.D. சுல்தான்

இவரது கச்சேரிகள் சமீபத்தில் நடைபெறும் விபரம்

| | | |
|---|---|---|
| 13—10—'45 | - | புதுக்கோட்டை |
| 15—10—'45 | - | சென்னை |
| 20—10—'45 | - | சித்தோடு |
| 1—11—'45 | - | பவானி |
| 17—11—'45 | - | திருச்சி ரேடியோ |



**காதலியை வெல்ல "சாது" வேடங்கொண்டவனின் சித்திரம்**

**ராஜரிஷி வேடங்கொண்டு அர்ஜுனனின் காதல் வேட்டை**

மகோன்னத காதல், மாபெரும் காக்ஷியின் சித்திர வர்ணனை கொண்டது

# ★ சுபத்ரா ★

**K. L. V.** வஸந்தா முதலிய தமிழ்நாட்டு "உயர் ரக" நக்ஷத் — திரங்கள் நடித்தது —

விபரங்களுக்கு

**மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்**

**சேலம் — மதுரை**

# லாக்ஸாமிண்ட்

**தித்திக்கும் பேதி மிட்டாய்**

**லாக்ஸாமிண்ட்:** வெகுகால ஆராய்ச்சிக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டு மிகவும் ருசிகரமான மிட்டாய் ரூபத்தில் வெளிவந்துள்ள மருந்து. இயற்கை முறையில் மலத்தை இளக்கிக் கழித்து உடம்பிலுள்ள அதிக பித்தநீர், வாதநீர் முதலியவற்றைக் கழிக்கும் இதர கடுமையான பேதி மருந்துகளைப்போல வயிற்றுவலி போன்ற துர்க்குணம் ஒன்றும் செய்யாது.

**சாப்பிடும் முறை:** இரவு படுக்கைக்குப் போகும்பொழுது வில்லையை வாயில்போட்டு நன்றாய் மென்று சாப்பிட்டு ஒரு டம்ளர் தண்ணீர் சாப்பிடவும். பெரியவர்கள் ஒரு பாகம் முதல் இரண்டு பாகம் வரையில் சாப்பிடலாம். குழந்தைகள் கால்பாகம் முதல் ஒருபாகம் வரையில் கொடுக்கவும்.

**செல்ட்டோனு பர்மாகல்ஸ் கம்பெனி தயாரிப்பு**

**கிடைக்குமிடம்:**

## கும்பகோணம் டிரக் ஸ்டோர்ஸ்

**நாகேஸ்வரன் வடக்கு வீதி — கும்பகோணம்**

**தீபாவளி** **ஜவுளி**

தீபாவளிப் பண்டிகை நெருங்குகிறது. எல்லோரும் புது ஆடை அணிந்து குதூகலமாய் இருக்கவேண்டிய காலம். தேவைக்கான ஜவுளி கிடைக்குமா என்ற உங்கள் கவலையை விடுங்கள். உங்கள் தேவையை பூர்த்திசெய்ய எல்லாவிதமான ஜவுளி தினுசுகளும் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். புத்தம் புதிய ஜவுளிகள். நாகரீகமும், — நாணயமும் உள்ளது. விலை நயம். —

# நியூ பனாரிஸ் ஹால்

**பெரியதெரு :: கும்பகோணம்**




# பொருளடக்கம்

பார்த்திப மலர் 5 | ஐப்பசி இதழ் 3

வாழ்க மஹாத்மா ... 11

சொல்லும் செயலும் ... 13
கே. சந்தானம்

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 18
ராமய்யா

"ஆனே—ஐயா" ... 26
டாக்டர் வெ. ராகவன்

அம்பாச்சாரி ... 33
கே. சுந்தரப்மாள்

'தெய்வமே! கண் இல்லையா" 45
ஜி. எஸ். மணி

ஆடிப்பாவை ... 57
எம். அனந்தநாராயணன்

ஹெலென் கெல்லர் ... 62
யோகி சுத்தானந்த பாரதியார்

அழகாயி ... 67
"புனர் ஜன்மி"

நாதநாயகன் சொன்ன கதை 74
பெரியகுளம் சிப்பாய்

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.



ஒரு புராதன வைத்யம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. வுட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது.




# WOODWARD'S GRIPE WATER

*keeps baby well*

J-WW111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

**Agent:— T. T. KRISHNAMACHARI,**

12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

2 25595


# காவேரி

பார்த்திப மலர் 5 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—"பாரதியார் | ஐப்பசி இதழ் 3


## வாழ்க மஹாத்மா!

கிராமங்களில் காணப்படும் குடியானவன்போல் உடையணிந்து, ஸிம்லாவிலுள்ள வைஸிராய் மாளிகைக்குச் செல்கிறார் மஹாத்மா காந்தி அடிகள். நமது அட்டைப்படத்தில் காணப்படுவது இவர்தான் என்றால் நம்பமாட்டீர்கள். கிராம வாழ்க்கையில் ஈடுபட்டு உழைத்துவரும் எளிய ஹரிஜனன் எந்த உடை தரித்துக் காலங் கழிக்கிறானோ அதே கோலத்தில் தான் தாமும் எங்கும் காணப்படவேண்டுமென்பது மஹாத்மா கட்டிக்கொண்ட கங்கணம். இங்கிலாந்து சென்றாலும் சரி இதே உடைதான்.

எளிய வாழ்க்கை, ஆடை, பேச்சு, எழுத்து, இவைதான் மஹாத்மாவின் லக்ஷியம். அடாமிக் குண்டு வீசப்படும் இக்காலத்திலும் அஹிம்ஸை, உண்மை இவ்விரண்டையும் விடாது உபதேசித்து வருகிறார்.

நாடெங்கும் அவருடைய எழுபத்து ஏழாவது ஜயந்தி கொண்டாடப்படுகிறது. இந்திய மக்களின் துயரை உலகிற்கு எடுத்துக் காட்டி, அவர்கள் சுதந்திர தாகத்தைத் தீர்க்க வழிகாட்டியவர் மஹாத்மா. தள்ளாத வயதிலும், அவர் மக்களின் நலத்தைப்பற்றிதான் சிந்தித்து வருகிறார்.

கொஞ்சகாலமாக இவர் அரசியல் விஷயத்தில் ஒன்றும் பேசவில்லை. பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும் கலந்துகொள்ளவில்லை. ஏதோ அஹிம்ஸா அடாமிக் பாம் ஒன்றைத் தயாரிக்கிறார் என்று வதந்தி. அதை விடுத்தால் அது பிரிட்டிஷாரை இந்தியாவை விட்டு வெளியேறச் செய்யும் என்று கூறப்படுகிறது.

இவர் இந்தியர்களின் பொக்கிஷம். நாம் இவரை இழக்கலாகாது. இவர் நம்முடன் நெடுநாள் இருந்து கிடைக்கப்போகும் சுயராஜ்யத்தைக் கண்டு களிப்பார் என்பது நமது திடநம்பிக்கை.

### இந்திய தேசியப் படை

இந்திய தேசியப் படையைச் சார்ந்த சில முக்கியஸ்தர்களை நவம்பர் 5உ. இந்தியா கவர்மெண்டார் ராணுவக் கோர்ட்டின்முன் ராஜத்துரோகத்திற்காக விசாரணைக்குக் கொண்டுவருகிறார்கள்.

இந்திய தேசியப் படை என்பது சுமார் 30,000 தேசபக்தர்கள் கொண்ட ஸ்தாபனம்; 1942-ல் இந்தியாவில் தேசியக் கிளர்ச்சியை அடக்கிச் சுட்டு வீழ்த்திய பிறகு, ஜப்பானியர் உதவியைக்கொண்டு பர்மாவில் எழுப்பப்பட்ட படை இது. இதன் நோக்கம் இந்திய விடுதலையே. இப்படையினரின் முயற்சிக்குத் தேசாபிமானம்தான் அடிப்படை. ஜப்பான் வீழ்ச்சியடைந்து மலேயா, பர்மா முதலிய நாடுகள் பிரிட்டிஷ் வசம் திரும்பவே, இப்படையினரைக் கைது செய்து இந்தியாவில் விசாரணைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இவர்களுக்குச் சாதாரண சட்டப்படி தண்டனை அளிப்பது அநீதியாகும். அப்படிச் செய்தால் இந்திய மக்களின்

நீண்ட மனக்கசப்பையும் பகைமையையும் பிரிட்டிஷார் பெற வேறுவழி தேட வேண்டியதில்லை என்று நாடெங்கும் மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

இது இந்தியா கவர்மெண்டார் நடத்தும் விசாரணை. இதில் இந்திய மக்களின் அபிப்பிராயம் பிரதிபலிக்காது என்பது யாவரும் அறிந்த விஷயம். நாட்டில் ஒரு சட்டசபையாவது உயிருடனில்லை. ஆகையினால் அன்னிய அரசாங்கம் இவ்விசாரணையை நடத்துவதிலும் சரி, விதிக்கப்படும் தண்டனையை நிறைவேற்றுவதிலும் சரி, பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். இந்தியாவைப் பொறுத்த வரையில் இத்தேசத்திற்கு அவர்கள் செயல் ஹானி விளைவிக்கக் கூடியதல்ல. தீவிர தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு செய்யப்பட்ட குற்றம் என்று ஏற்பட்டால் அவர்களைச் சிக்ஷை செய்வது தேசத்துரோகமாகும்.

இச் சிக்கலான பிரச்னையைக் கையாளுவதில் அரசியல் ஞானத்தையும் தீர்க்க திருஷ்டியையும் உபயோகிக்கவேண்டும். இது சட்டபூர்வமாக முடிவுசெய்யவேண்டிய பிரச்னையல்ல; பிரிட்டிஷ் கவர்மெண்டாரின் கொள்கையைப் பொறுத்தது. இங்கிலேயில் இந்தியாவை மற்றொரு அயர்லாந்தாகச் செய்துகொள்ள வேண்டாமென்று குறிப்பிடுவது பொருத்தமாகும்.



மௌலானா அபுல்கலாம் அஸாத்
பத்திரிகை நிருபருக்கு பேட்டி அளிக்கிறார்

# சொல்லும் செயலும்

கே. சந்தானம்

சொல்லுக்கும் செயலுக்கும் முழு ஒற்றுமை இருப்பது அபூர்வம். சாத்தியமில்லை என்றுகூடக் கூறலாம். சொல் அறிவையும், ஆவலையும், ஆத்திரத்தையும் பொறுத்திருக்கிறது. செயலோ சக்தியையும், சாதனத்தையும் சந்தர்ப்பத்தையும் அனுசரிக்கும். சொல்லுக்கும் செயலுக்குமுள்ள வித்தியாசம் மதத்திலும், அரசியலிலும் இதரத் துறைகளிலிருப்பதைவிட அதிகம். எல்லா ஜீவன்களிலும் ஒரே பரமாத்மா வியாபித்திருக்கிறதென்ற வேதாந்தத்தை வாயால் உபதேசிக்கும் ஹிந்து ஆயிரக்கணக்கான அல்ப பேதங்களைப் பிடிவாதமாகப் பற்றிக்கொண்டு தன் சொந்த நாட்டில் பிறருக்கடிமையாகவில்லையா? 'தன் சகோதரனான மனிதனை எக்காரணத்தாலும் கொல்லலாகாது. தீமைக்குப்பதில் நன்மைசெய்' என்று போதித்த ஏசு கிறிஸ்துவின் மதத்தார் போர்த்தொழிலில் போட்டி போட்டு, கோடிக்கணக்கில் கொலை புரிந்து பகையைப் பெருமையுடன் பாராட்டுவது விபரீதமல்லவா? ஆயினும் பிரம்மத்தின் பரமதத்துவத்தைக் கூடுமானால் இப்பிறவிலேயே, இல்லாவிடின் அடுத்த பிறவியிலாவது, அடையவேண்டுமென்பது ஹிந்துவின் உண்மையான லக்ஷ்யம். ஏசுவின் அன்பை உலகின் மூலதர்மமாகச் செய்யவேண்டுமென்பது உண்மையான கிறிஸ்தவர்களின் ஒப்பற்ற நோக்கமென்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் தனி மனிதன் பிர்மாண்டமான சமூகத் தேரின் சிறிய சக்கரமாவான். அவனுடைய போக்கினால் சமூகத்தின் போக்கு அணுவளவே மாறும். பெரும்பாலும் சமூகத்தின் போக்கை அவன்தான் அனுசரிக்கவேண்டும். பெருவாரியான சக்கரங்கள் எத்திசை நோக்கிச் சுழலுகின்றனவோ அப்பக்கம்தான் சமூகமும் செல்லும்.

சொல்லுக்கும் செயலுக்கும் பூர்ண ஒற்றுமை சாத்தியமில்லை. ஆனால் எவ்வளவு தூரம் அவ்விரண்டும் ஒத்திருக்குமோ அவ்வளவுதான் வாழ்க்கையில் உண்மையிருக்கும். நமது அரசியல் வாழ்க்கையில் இருக்கும் திகைப்புக்கும் குழப்பத்திற்கும், தளர்ச்சிக்கும் மூலகாரணம் இதுவே. நமது சொல்லுக்கும் செயலுக்கும் நடுவில் உள்ள அருவி ஆறாகிப் பெருங்கடலாகிவிடும் போலிருக்கிறது. இதைத் தடுத்து நமது ஆசைக்கும் சக்திக்கும் ஒரு பாலம்போட வேண்டும். இல்லாவிடில் சுதந்திரதாகம் ஒருபுறம் பெருக, அதனைத் தணிக்கும் ஊற்று வற்றி விடும்.

நமது நாடு பூர்ண சுதந்திரம் அடைய வேண்டும். பிரான்சை ஆளுவதற்கு எவ்வாறு ஜெர்மனிக்கு அதிகாரமில்லையோ, சீனாவை ஆள ஜப்பானுக்கு எவ்வாறு உரிமையில்லையோ, அவ்வாறே ஆங்கிலேயருக்கும் இந்தியாவின் மீது ஆட்சி புரிவது நியாயமில்லை. "அன்னிய ஆட்சி ஒழியும் வரையில் இந்தியாவில் வறுமை ஒழியாது, ஒற்றுமை கூடாது, அறிவு வளராது, ஆண்மை ஓங்காது; ஆதலால் பிரிட்டிஷாரே! உடனே இந்நாட்டை விட்டு வெளியேறுங்கள்" என்கிறோம்.

இவ்வாதத்தில் எள்ளளவும் பிசகில்லை. ஆனால் இது வெறும் வாதம் இதை நமது சக்தி, சாதனம், சந்தர்ப்பத்தோடு இணைத்து ஒரு சுதந்திர மார்க்கமாகச் செய்தாலொழிய நாம் என்ன கூக்குரலிட்டாலும் காரியத்தில் மாறுதலுண்டாகாது.

பிரிட்டிஷார் ஏன் இந்தியாவை விட்டுப் போகவேண்டும்? இந்நாட்டில் இருப்பது அடியோடு சாத்தியமில்லை என்ற நிலைமை வரவேண்டும்; அல்லது அரசாங்கத்தை இந்தியமக்களிடம் ஒப்புவிப்பது நல்ல ராஜதந்திரம், தர்மம், லாபமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நினைக்கவேண்டும். யுத்தகாலத்தில் முதல் கூறிய நிலைமையை உண்டாக்க ஓரளவு சந்தர்ப்பமிருந்தது. 1942ல் அவ்வழிச் செல்லலாமாவென்று நமது தலைவர்கள் சிந்திக்கலானார்கள். ஆனால் அவர்கள் முடிவுசெய்யுமுன் புரட்சி இயக்கம் அடக்கப்பட்டுவிட்டது. எவ்வித திட்டமுமின்றி, இந்தியமக்கள் ஆங்காங்கு சர்க்காரை எதிர்த்து, தங்களுடைய தேசபக்தியையும் தியாக சக்தியை

காந்தி ஜயந்தி வெளியீடு

# என் சரிதம்

சுருக்கம்

## மகாத்மா காந்தி

•

காந்தியடிகளின் தூய வாழ்க்கை, அவருடைய கபடமற்ற எளிமை, அளவற்ற அன்பு, இவை ஆத்ம சரித்திரத்தில் மிளிர்கின்றன. **மகாதேவ தேசாய்** இந்த நீண்ட சரித்திரத்தைச் சுருக்கித் தக்கபடி பதிப்பித்திருக்கிறார். ஒவ்வொருவரும் படித்து வாழ்க்கையில் கைக்கொள்ளவேண்டிய அரிய தத்துவங்கள் அடங்கிய அழகிய நூல். ஸஸ்தா ஸாஹித்ய மண்டலத்தாரின் அனுமதி பெற்று வெளியிடப்பட்டது.

விலை ரூ. 3—8—0

(31—10—1945-க்குள் ஆர்டர் செய்பவர்களுக்குத் தபாற் செலவு இனாம்)

## கதைக் கோவை

4-ஆம் தொகுதி

75 எழுத்தாளரின் கதைகள் 75

விலை ரூ. 10—8—0

**அல்லயன்ஸ் கம்பெனி,**
மயிலாப்பூர் — சென்னை.

யும் தெரிவித்தனர். அந்நாட்களின் சம்பவங்களின் முழு வரலாறு இன்னும் நமக்குத்தெரியாது. அவைகளைப்பற்றி வீண் வாதம் செய்வதில் பிரயோசனமில்லை. 1939ல் இருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் அப்படியே இன்றுமிருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது.

இப்பொழுது நாம் செய்யவேண்டியதென்ன என்பதே முக்கியமான பிரச்னை. சாத்வீகமாவோ, பலாத்காரமாகவோ உடனே புரட்சி செய்ய நாட்டில் இப்பொழுது சக்தியில்லை. மக்களிடம் மனப்போக்குமில்லை. சமாதான முறையில் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு பூர்ண சுதந்திரமில்லாவிடினும், அதற்கு அருகிலாவது செல்ல முடியுமாவென்று முயற்சி செய்வதே சாத்தியமான வழி. இதற்கு நம் அதிர்ஷ்டவசமாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நமது சுதந்திரத்திற்குப்பரமவிரோதிகளாகவிருக்கும் கன்செர்வடிவ் கக்ஷியார் தோல்வியுற்றுவிட்டனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சிறிதும் தளரவிடமாட்டேன் என்று அகம்பாவத்துடன் பறையடித்த சர்ச்சில் பதவி இழந்துவிட்டார். இப்பொழுது அரசுபுரியும் தொழிற்கட்சித் தலைவர்கள் இந்திய சுதந்திரத்தில் பேராவல்கொண்டவர்கள் அல்ல, ஆயினும் நம்மை அடக்கி ஆளவேண்டுமென்று சபதம் செய்தவர்களுமல்ல. இரு கக்ஷியாரும் இந்தியாவைப் பொறுத்தவரையில் ஒன்றே, நமக்கு எவருடைய தாக்ஷண்யமும் வேண்டாம், நாமே நம்முடைய நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவோம் என்று கூறுவது பிரசங்க மேடையில் பிரகாசிக்கும். காரியத்தில் பயன்படாத உபதேசமாகும்.

வரப்போகும் தேர்தல்களில் நாடெங்கும் தீவிரப் பிரசாரம் நடக்கும். அதில் நமது லக்ஷ்யங்களும், ஆசைகளும் பெரும்பாலும் வற்புறுத்தப்படுவது சகஜம். ஆனால் தேர்தலின்முடிவால்நடக்கக்கூடிய காரியங்களையும் போதிய அளவில் சேர்த்துப் பிரசாரம் செய்தால்தான் பொது மக்களின் அரசியல் அறிவும் சக்தியும் விருத்தியாகும். இதைப்பற்றித் தெளிவாகச் சிந்திப்பதற்கு இரண்டு வழிகளுண்டு. இந்தியாவிலிருக்கும் எல்லா ஓட்டர்களும் காங்கிரஸ் அபேட்சகர்

களுக்கே ஓட்டுக் கொடுத்து எல்லாச் சட்ட சபைகளையும் முற்றிலும் காங்கிரஸ் மயமாக்கி விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது என்னவாகும்? இரண்டாவதாக எல்லா முஸ்லிம் ஓட்டர்களும் முஸ்லிம் லீக் அபேட்சகர்களுக்கே வாக்களிப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது என்ன நடக்கும்?

ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவ எல்லாத் தொகுதிகளும் ஏகோபித்து, காங்கிரஸ் அபேட்சர்களுக்கு வாக்களித்தால், காங்கிரஸ் மகாசபையின் செல்வாக்குப் பெருகும். அதனோடு சமாதானம் செய்து கொள்ளப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் அக்கறை அதிகரிக்கும். வெளியுலகிற்கு இந்நாட்டின் தேசிய உணர்ச்சியின் தன்மை விளங்கும். ஆனால் இந்திய அரசியல் நிலையிலேயோ, மத்திய மாகாண அரசாங்கங்களின் போக்கிலோ தானாக எம்மாறுதலும் ஏற்படாது. மாகாணங்களில் காங்கிரஸ் தலைவர்கள் பதவி ஏற்று மந்திரி சபைகள் அமைத்தாலொழிய, செக்ஷன் 93 ஆட்சி நீடிக்கும். மத்திய அரசாங்கத்தில் அவர்கள் நிர்வாக அங்கத்தினர்கள் ஆனாலன்றி, தற்போதைய மெம்பர்கள் இருந்துகொண்டு இஷ்டப்படி செய்துவருவார்கள். கிரிப்ஸ் திட்டத்தின் மூலமாகவோ, வேறு வழியிலோ புதியதோர் அரசியல் அமைப்பு ஏற்படும் வரையில் இப்பொழுது அமுலிலிருக்கும் அரசாங்க முறைதான் இருந்துவரும். பூர்ண ஜனநாயக ஆட்சியுள்ள நாட்டில் ஓட்டுக் கொடுப்பது ஓர் அரசியல் கொள்கையாகும். அதன் மூலமாகவே அரசாங்க நிர்வாகமும், சட்டதிட்டங்களும், வரிவிதிகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்தியாவிலோ தேர்தலில் கொடுக்கப்படும் வாக்கு பெரும்பாலும் பொதுக்கூட்டங்களில் கைதட்டி ஆமோதிப்பதற்குச் சமானமாகும். மாகாணங்களில் மந்திரிசபை ஏற்படுத்துவதால், அதைச் சிறிதளவு உண்மையான அரசியல் கொள்கையாக மாற்றிக்கொள்ளலாம். மத்திய சர்க்காரில் புதிய நிர்வாக சபை அமைப்பதற்கு அது பயன்பட்டால், அதன் கவுரவம் அதிகமாகும். அதன் மூலமாகப் புதிய அரசியல் அமைப்பு நிர்மாணிக்க ஒரு பிரதிநிதி சபை பிறக்குமாயின், வரப்போகும் தேர்தலின் முழுப் பிரயோசனத்தை நாம் அடையமுடியும். இம்மூன்று பலன்களையும் நாம் விரும்பாவிட்டால், தேர்தல் முயற்சி வீண் தமாஷாவாகவே முடியும்.

எல்லா முஸ்லிம் தொகுதிகளிலும் முஸ்லிம் லீக் அபேட்சகரே தேர்ந்தெடுக்கப்பட்டால், லீக்கின் செல்வாக்கு ஊர்ஜிதமாகும். முஸ்லிம் சமூகத்திற்கு அது தனி பிரதிநிதி ஸ்தாபனமாகும். ஆனால் அதன் அரசியல் பலன் என்ன? முஸ்லிம்கள் மைனாரிட்டியாக இருக்கும் மாகாணங்களில் மெஜாரிட்டிக் கக்ஷிகளுடன் சேர்ந்து சில மந்திரி பதவிகள் பெறலாம். அல்லது கோபித்துக்கொண்டு அவைகளை எதிர்க்கலாம். சிந்து, எல்லைப்புற மாகாணம் இரண்டிலும் முழு லீக் மந்திரிசபைகள் ஏற்படுத்தி நடத்தலாம். பஞ்சாப், வங்காள மாகாணங்களில் அரைகுறையான லீக் மந்திரிசபைகள் அமைக்கலாம். மத்திய அரசாங்க நிர்வாக சபையில் முஸ்லிம் ஸ்தானங்களுக்கு லீக் பிரதிநிதிகளை அனுப்பலாம். பாகிஸ்தானுக்கு முன்ன


**மாதவிடாய் நின்றிருந்தால்**



குமாரி (TABS) உபயோகித்தால் மீண்டும் ஏற்படுவதுடன் பிற்காலத்திலும் தொந்தரவு ஏற்படாது. தீங்கற்றது. விரைவில் பலன் தரும். விலை ரூ. 3. கடுமையானதற்கு ரூ. 5. கர்ப்பத்தடை 6 மாதங்களுக்கு ரூ. 4. (வி. பி. அணா 12 பிரத்யேகம்)

**Mrs. P. DEVEE, F. D. S., (C. M.)**
Tollygunge, Calcutta.

*Available also from:—*

(1) HARRY & SON, 93, China Bazar Road, Madras.
(2) RAJA MEDICAL HALL, 31, Dharmaraja St., Bangalore Contt.
(3) NATHAM & CO. Mattancheri, Cochin
(4) K. C. MATHEW & Co., Kozhancheri, Travancore.

தாகவே ஒப்புக்கொண்டாலொழிய, அரசியல் நிர்மாண சபையில் கலந்துகொள்ள மறுக்கலாம். ஆனால் பிரிட்டிஷ்அரசாங்கத்தோடும், காங்கிரஸ் மகாசபையோடும் சமாதானத்திற்கு வந்தாலொழிய, பாகிஸ்தான் ஏற்படுத்தமுடியாது. பஞ்சாப், வங்காளத்தைக் கூறுபோடச் சம்மதித்தாலொழிய அவ்விதச் சம்மதம் கிடைக்காது. ஒன்று பாகிஸ்தானை விட்டுவிட்டு இந்திய ஐக்கிய அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு ஒரு கவுரவமான ஸ்தானத்தைத் தேடலாம். அல்லது முஸ்லிம் ஓட்டர்களின் மனதை மதப்பற்றால் மயக்கி இந்திய சுதேச சமஸ்தானங்கள் போன்ற இரண்டு சிறிய பிரதேசங்களைப் பெறலாம். ஆனால் 4 கோடி இந்துக்களையும் சிக்கியர்களையும் கொண்ட பாகிஸ்தானைச் சமாதான முறையில் என்றும் அடைய முடியாது. தற்போதைய நிலைமையில் பலாத்காரத்தைக் கைக்கொண்டால் முஸ்லிம்களுக்கு நஷ்டமே உண்டாகும்.

இப்பொழுதுள்ள அரசியல் அமைப்பில், எல்லாத் தொகுதிகளிலும் காங்கிரஸ் அபேட்சகர்களே தேர்ந்தெடுக்கப்படுவது சாத்தியமல்ல. முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் எல்லா முஸ்லிம் லீக் தொகுதிகளையும் கைப்பற்ற வசதி இருந்தபோதிலும் அவ்வளவு சக்தி முஸ்லிம் லீக்குக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை. தேசத்தில் காங்கிரஸுக்குப் பெருவாரியான பிரதிநிதித்துவமும் முஸ்லிம்களுக்குள் லீக்குக்குப் பெருவாரியான பிரதிநிதித்துவமுமே கிடைக்கக்கூடும். அதைக் கொண்டு எவ்வித மந்திர வித்தையும் செய்துவிடமுடியாது.

மாகாணங்களில் பொறுப்பு வாய்ந்த மந்திரி சபைகள், மத்திய அரசாங்கத்தில் பொதுஜன ஆதரவுள்ள நிர்வாக சபை, எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அரசியல் நிர்மாண சபை இம்மூன்றுமே அடுத்த இரண்டு மூன்று வருஷங்களுக்குள் இந்தியத் தலைவர்கள் செய்யக்கூடிய காரியங்கள். இம்மூன்றிலும் நியாய தோரணையில் நம் தலைவர்களுடன் ஒத்துழைப்பதாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கூறியிருக்கிறார்கள். அவர்கள் இதை நமக்கு நம்பிக்கையும் உற்சாகமும் உண்டாக்குமாறு கூறியிருக்கலாம்; துரிதமாக ஏற்பாடுகள் செய்திருக்கலாம்; ஒரு கால அட்டவணை நிர்ணயத்திருக்கலாம். நாங்கள் குடியரசு நாட்டுப் பதவி கொடுக்கிறோம்; அதை வேண்டுமானால் பூர்ண சுதந்திரமாக்கிக்கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு என்று சொல்லுவதற்குப் பதிலாக, பூர்ண சுதந்திரத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று பெருந்தன்மையுடன் கூறியிருக்கலாம். இவ்வுலகில், பிற மனிதர்களின் சுபாவங்களும், செய்கைகளும் முழுதும் நம்மிஷ்டப்படி இருப்பது அரிது. அவர்களுடைய திட்டம் சிறிதேனும் நம் நாட்டுக்குப் பிரயோசனமாக விருப்பின் அதை ஒப்புக்கொண்டு பரீக்ஷை பார்க்கவேண்டும். அப்படியேதான் காங்கிரஸ் தலைவர்கள் செய்யப்போகிறார்களென்பதில் சந்தேகமில்லை. லீக் தலைவர்களைப்பற்றிச் சொல்லமுடியாது, வெறும் முட்டுக்கட்டைபோடுவது சுலபம். அதனால் எவ்விதபிரயோசனமுமில்லை என்று முஸ்லிம்கள் சீக்கிரம் கண்டுகொள்வார்கள். யுத்தகோஷங்களில் பெரும்போதையுள்ளது. அது நீங்கியதும், மனத்தளர்ச்சி நிச்சயம். இவ்விரண்டையும் அகற்றி, சொல்லை அடக்கிச் செயலைப் பெருக்கி, மக்களுக்கு அறிவும் ஆற்றலும் ஊட்டுவது பொது ஊழியர்களின் கடமையாகும்.

**கறுப்பு மேனியை வெளுக்கச்செய்யுங்கள்**

வாலட்டா பியூடி கிரீம்: கறுப்பு நிறத்தை நிரந்தரமாக வெளுக்கச்செய்கிறது. பருக்களையும் சுருக்கங்களையும் அகற்றி, தோலை மிருதுவாக்குகிறது. இந்த ஆக்ஸிஜன் கிரீமை இன்றே உபயோகிக்க ஆரம்பித்து உங்கள் இளமை மேனியை வரவழைத்துக் கொள்ளுங்கள். ஜாடி ஒன்று விலை ரூ. 2/

**நீண்ட அழகிய கேசத்தை அடைய**

டைபாயிட் முதலிய ஜ்வரங்கள், மனக் கிலேசம் முதலிய தொல்லைகளினால் அழகிய கூந்தல் உதிர்ந்துவிடுவது சகஜம். பால்டைன் கூந்தல் தைலம் மயிர்க்கால்களை உயிர்ப்பித்து வளரச்செய்கிறது.

பெரிய பாட்டில் ரூ. 3/ சிறியது ரூ. 2/

இவைகளுக்கு ஏஜண்டுகள் **அப்பா & கோ.,**
கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேடு, மதராஸ்.



டில்லியில் காந்தி ஜயந்தி விழாவில் அஸப் ஆலி பேசுகிருர்.



பம்பாயில். காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு, தலைவர்கள் செல்லுகிருர்கள். பண்டிட் பந்த், ஜவாஹர், அஸப் ஆலி, எல்லைப்புற காந்தி முதலியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

இந்த வியாசத்துக்கு எனக்குப் பொருள் சிரமமில்லாமல் கிடைத்துவிட்டது. அம்மாஞ்சிவெளியூருக்குப்போயிருக்கிறான்; அங்கிருந்து ஒரு பெரிய கடிதம் எனக்கு எழுதியனுப்பியிருக்கிறான். அதைப் பார்த்ததும் எனக்கு ஆச்சர்யமும் பயமும் ஏற்பட்டன. ஆச்சர்யம் ஏன் என்றால் எப்பொழுதும் கடிதமே எழுதாத அம்மாஞ்சி-அப்படி எழுதினாலும் இரண்டு மூன்று வாக்கியங்களுடன் நிறுத்திக்கொள்ளப்பட்டவன்-ஒரு விஸ்தாரமான கடிதமாக எழுதிவிட்டானே என்பது. பயம் எதனால் என்றால் கடிதத்தில் என்ன எழுதிவிட்டானோ, யாரையெல்லாம் வைதிருக்கிறானோ என்பதுதான். ஆனால் கடிதத்தைப் படித்த பிறகு எனக்கு இரண்டுவித சந்தோஷங்கள் உண்டாயின. ஒன்று கடிதம் பிரசுரிக்கத் தகுந்ததாயிருக்கிறது என்பது; இரண்டு இந்த வியாசத்தில் அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களை அவனுடைய வாக்குக்களாலேயே நிரப்பிவிடலாம் என்பது. ஆதலால் கடிதத்தைப் பூர்த்தியாக வெளிப்படுத்துகிறேன்.

—— இடம் ——
அக்டோபர் 7. ஞாயிறு

சிரஞ்சீவி ராமையாவுக்கு அநேக ஆசீர்வாதம். க்ஷேமம். நேற்றையதினம் நீ எழுதிய கடிதம் இன்று கிடைத்தது. அதில் அதற்குமுன் இரண்டு கடிதங்கள் எழுதியதாகக் கூறுகிறாய். அந்தக் கடிதங்கள் எனக்குக் கிடைக்கவில்லை-எழுதாத கடிதங்கள் எப்படிக் கிடைக்கும்? நான் அங்கிருந்து புறப்படுவதற்குமுன் உன்னுடைய லெட்டர் பேப்பர் கட்டில் உள்ள காகிதங்களின் பின்புறத்தில், பென்ஸிலினால், மேல் காகிதத்திலிருந்து பத்துக்காகிதங்கள் வரையில், மெல்லியதாக ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக்கைகள் எழுதி வைத்துவிட்டு வந்தேன். எதற்காகவென்பாயோ? நீ சிறிய பொய்கள் சொல்லி ஜயித்துக்கொண்டு போகப் பார்ப்பாய், உன்னை வபையாகப் பிடித்துவிடலாம் என்பதற்காகவே! நான் நினைத்தபடியே நீ அகப்பட்டுக்கொண்டாய். நேற்றையதினம் கிடைத்த கடிதத்தில் முதல் நம்பர் காகிதமே காண்கிறது. ஆதலால் நீ அதற்குமுன் இரண்டு கடிதங்ள்க எழுதியிருக்கமுடியாது. இனியாவது சிறிய விஷயங்களில் பொய் சொல்லாமல் இருக்கக் கற்றுக்கொள்ளவும். "கொடிது வறுமை கொடிது, அதனிலும் கொடிது இளமையில் வறுமை" என்பதுபோல் "அசடுஅசடு பொய்சொல்லும் அசடு, அதிலும் அசடு சிறிய பொய் அசடு" எனலாம். (குறிப்பு: அம்மாஞ்சியிடம் பொய் சொல்லி அகப்பட்டுக் கொண்டதற்காக நான் வருந்தவில்லை. இது எனக்குச் சகஜம் என்றே சொல்லலாம். ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டரிடம் குழந்தைக்கு நிஜமான வயது யாராவது சொல்வதுண்டா? டிக்கெட் வாங்காமலிருப்பதற்காக நான்கு வயது ஆன பிறகும் மூன்று வயதுக்குக் குறைவுதான் என்றும், அரை டிக்கட் வாங்குவதற்காகப் பதினைந்து வயதுவரையில் குழந்தைக்குப் பன்னிரண்டுக்கு மேலில்லை என்றும் சொல்வதுதான் சகஜம். அதுபோலவே இன்கம் டாக்ஸ்காரரிடம் வரும்படியை யதார்த்தமாகச் சொல்லும் ஆட்கள் எந்தத் தேசத்திலாவது உண்டா? அல்லது பாங்க் மானேஜரிடம் போய் "எனக்கு மூச்சு அடைக்கும் போலிருக்கிறது, நீர் கடன்கொடாவிட்டால் உயிர் போய்விடும்; வேறு யாரைக் கேட்டாலும் பணம் கிடைக்கவில்லை" என்று எந்த வியாபாரியாவது சொல்லுவானா? "ஏதோ உங்க பாங்கியிலும் கணக்கு வைத்துக் கொள்ளலாமென்று வந்தேன். அப்படியொன்றும் எனக்குப் பணம் முடையில்லை. ஒரு நண்பர் கொஞ்சம் உபகாரம் பண்ணச் சொன்னார். ஒன்றரை லக்ஷம் வரையில் எனக்கு வரவேண்டியிருக்கிறது. கொடுக்க வேண்டியவர்களும் கேட்டவுடனேயே கொடுத்துவிடுவார்கள். ஆனாலும் அவர்களைப்போய் கேட்பானேன்! உம்மிடம் வாங்கி அந்த நண்பருக்குக் கொடுத்துவிட்டு இன்னும் பத்து நாளிலே என் பணம் வந்தவுடன் புரட்டிக் கொள்ளலாமேயென்று யோசனை செய்தேன்" என்று சொல்வதுதான் சகஜம். ஆதலால் நான் மாத்திரம் லஜ்ஜைப் படுவானேன், சிறிய பொய் சொன்னதற்கு? ராமையா)

இது நிற்க, சென்ற நான்கு தினங்களாக நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் தெரியுமா? ஆழ்ந்த யோசனையில் இருக்கிறேன்! யுத்தம் ஆரம்பித்தது முதல் நம் தேசத்தில், அதுவும் தமிழ் நாட்டில், ஏற்பட்டிருக்கும் புதிய கொள்கைகளைப் பற்றியும், பழைய வழக்கங்களும் சம்பிரதாயங்களும் எவ்வெப்படி எல்லாம் மாறியிருக்கின்றனவென்பதைப் பற்றியும், மாற்றங்

களில் உள்ள நன்மைகள் நிலைநிற்குமா, அவைகளில் உள்ள கொடுமைகள் நீங்குமா, மொத்தத்தில் நமக்கு விமோசனமுண்டா வென்றும், ஏக்கம் பிடித்ததுபோல் யோசனைகளில் மூழ்கியிருக்கிறேன். இப்பொழுது நீ இங்கு இல்லாதது சில வேளைகளில் கையொடிந்த மாதிரிதானிருக்கிறது! நீ இருந்தால் அசட்டுப் பிசட்டு என்றும் "தேங்காய்க்கு மஞ்சள் பூசவில்லையென்றும்" அடிக்கடி உளறிக்கொண்டிருப்பாய்! கொதிக்கும் சோற்றில் கரண்டியை இட்டதுபோல், என் மனத்தோற்றங்களின் தீவிரம் குறைந்து, என்னுடைய அபிப்பிராயங்களின் பாகம் என்னவென்று காணும். இந்த வசதியில்லாமல் நான் கஷ்டப்படுகிறேன் என்பதைக் கேட்க நீ சந்தோஷப்படுவாய் அல்லவா? (குறிப்பு: வெகு நன்றாயிருக்கிறது! ஓங்கி ஓர் அறை அறைந்துவிட்டு உச்சி முகர்வது போலிருக்கிறது இது! ராமையா)

முதலாவது, பணப்பெருக்கை எடுத்துக்கொள். வியாபாரி என்ற பெயரை வைத்துக்கொண்டவன் எவனிடத்திலும் முன்னைவிட இப்பொழுது பத்துபங்கு பணப்பெருக்கு அதிகமாய் விட்டது. அரிசி, உப்பு, புளி, நவதான்யங்களையும் விற்றுப் பணம் பண்ணினது மாத்திரம் அல்ல; ஐவுளி, பட்டு, வெள்ளி, தங்கம், வைரம் மாத்திரமும் அல்ல; கோணியில் பணம், கொட்டாங்கச்சியில் பணம்; கற்பூரத்தில் பணம்; கந்தல் துணியில் பணம்; காகிதத்தில் பணம்; தோலில் பணம்; மலையை யுடைத்த கல்லில் பணம்; குண்டூசிக்குப்பதிலாக வந்த முள்ளிலும் பணம்; திருப்பதியில் பிரார்த்தனைக்கு இறக்கின மூடியை விற்றும் ஏராளமான பணம் பெருகியிருக்கிறது. கட்டடங்களைக் கட்டிப் பணம் பண்ணினவர், கட்டடங்களை இடித்தும் பணம் பண்ணினார்கள். இப்படிச் சம்பாதித்தவர்கள் பரம்பரை வியாபாரிகள் மாத்திரம் அல்ல; வக்கீல்களும், உபாத்தியாயர்களும் தத்தம் தொழில்களையும்விட்டு வியாபாரத்திலிறங்கினர். ஜமீந்தார்கள், மிராசுதார்கள், மாஜி கவர்மென்ட் உத்தியோகஸ்தர்கள், வெட்டியாட்கள், வம்புப் பேர்வழிகள், சகலரும் பணப்பெருக்கைத் திரட்டி, தம் வசப்படுத்தினார்கள். இதனால் நமக்கு வாய்த்த லாபம் என்ன? சாமான்ய ஜனங்கள் யாவருக்கும் ரூபாய் என்கிற நாணயத்துக்கு மதிப்பு முற்றும் தொலைந்துவிட்டது. பணக்காரர்கள் இன்னும் கொழுத்த பணக்காரர் ஆயினர்; செல்வாக்கு உள்ளவர்கள் கையில் அரைக்காசு இல்லாமல் போனாலும் காண்ட்ராக்டிலும் லேவா தேவியிலும் லட்ச


வாழையடி வாழையாக வந்த நம் கூந்தல் வளர்ப்புக் கலையின் ★ பொக்கிஷம் ★




ஜாப்கோ
ஹேர்குரோயர்

இளவயதில் ஏற்படும் நரையைப் போக்கி, உதிரும் கேசத்தை நிறுத்தி கூந்தலை - நீண்டு வளரச்செய்யும் -

ஜயபாரதம் கம்பெனி
மல்லேஸ்வரம் - பேங்களூர்

லட்சங்களாய்ச் செல்வம்குவித்தனர். ஆனால் ஏழைகளும் நடுத்தரமாய் இருந்தவர்களும் "யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி" என்று இருக்கின்றனர். இவர்களுக்குக் கிடைக்கும் கூலிகளிலும் சம்பளங்களிலும் சிறிது பெருக்கல் வாய்த்தபோதிலும், உணவுக்கும் துணிமணிகளுக்கும்விலைவாசி அபரிமிதமாய் ஏறிவிட்டபடியால் சேர்மானம் என்பதே இல்லாமல் போய்விட்டது. பத்து ரூபாயில் செலவை அடக்கக்கூடியவர் நாற்பதுருபாய் எடுத்து விசவேண்டிவந்தால் அவர்களுக்கு விமோசனம் எங்கே? இந்த யுத்தமானது பொதுஜன சங்கத்தை ஒரு கிளறு கிளறி விட்டது; மேலிருந்தவர்கள் பொங்கிவழிந்து ஓட, அடியிலுள்ள வண்டல்கள் மேலே வந்துவிட, நடுவிலுள்ள சாதுக்கள் வயிற்றின்மேல் ஈரத் துணியைப் போட்டுக் கொண்டு உடலில் மல் ஜிப்பாவை அணிந்து கொண்டு உலாவி வருகிறார்கள்.

இரண்டாவது, பொதுஜன சங்கத்தின் நிலைமையைக் கவனிப்போம். சங்கத்தில் மூன்று வகைகள். முதலாவது நுரைகள், அதாவது எபபொழுதும் மேலே கொந்தளித்துக்கொண்டு இருக்கும் வகைகள். இரண்டாவது வண்டல்கள், அதாவது அடியில் இருக்கவேண்டிய வஸ்துக்கள், ஆனால் குழப்பத்தில் மேலுக்குவந்து நுரைகளுடன் கலந்து சப்தம் செய்யும் வகைகள். மூன்றாவது நடுத்தன்மையாய் இருந்துவரும் நாடோடிகள், குழப்பங்களில் வண்டல்களுக்கு இடங்கொடுக்கும் சாதுக்கள். தற்காலத்தில் எந்தவித இயக்கத்திலும், பத்து நுரைகள் கூடும் இடத்தில் நூறுவண்டல்களும் சேர்ந்து செய்யும் மர்த்தனம்தான் சகிக்கமுடியவில்லை! எந்தவித பொதுக்கூட்டத்தை வேணுமென்றாலும் கவனித்துவா, நான் சொல்வது நன்கு விளங்கும்! ரயில் வண்டிகள், சினிமாக்கள், சங்கீதக்கச்சேரிகள், மீட்டிங்குகள், புதிது புதிதாய் முன்னுக்குவரும் கம்பெனிகள், வியாபாரிகளின் கூட்டங்கள், கலியாணங்கள், இழவுகள் எல்லாவற்றிலும் நுரைகளும் வண்டல்களுமாகவே காணப்படுகின்றன. வண்டல்களின் மேன்மைக்காகவும் அவர்களின்மீது இருக்கும் துருவை எடுத்து மெருகாக்கவே பாடுபடும் நுரைகள் அநேகர் பெருகிவிட்டனர். ஆனால் நாடோடிகளுக்காகப் பாடுபடும் பெருமான் ஒருவனையும் காணோம்!

இதற்கு ருஜு¬வேண்டுமா? கவனி! பட்டணத்தில் சினிமா தியேட்டர்கள் உள்ளனவே,அவைகளின் நடத்தையை எடுத்துக் கொள்ளுவோம்; முக்கியமாக இந்தியப் படங்கள் காண்பிக்கிறார்களே அவைகளைப் பற்றிக் கவனிப்போம்! தமிழ்ப் படங்களும் தெலுங்குப்படங்களும் அநேகமாகப் பண்டைக்காலத்துப் புராணக் கதைகளைப்பற்றியே எடுத்துள்ளவை யென்றும், அப்படிப் பட்ட படங்களையே பாமர ஜனங்கள் அனுபவிக்கத் தயாராய் இருக்கின்றனர் என்றும் நவீன சம்பிரதாயத்தையொட்டிய படங்களை அவர்கள் திரஸ்கரிக்கிறார்கள் என்றும் சினிமா படம் தயாரிப்பவர்களில் பிரபலமான பிரமுகர்கள் பலருடைய அபிப்பிராயம். ஆதலால்தான் பேசும் படங்களுக்கு 12000 அடிக்குமேல் 14000 அடிக்குள் பிலிம் 'கோட்டா' வேண்டுமென்றும், அதற்குக் குறைந்தால் படங்கள் தயாரிக்கப்படுவது கஷ்டம் என்றும் கூறியிருக்கிறார்கள். "மூன்றுமணி நேரம் எங்களைக் கூட்டி வைத்து ஏன் வதைக்கவேண்டும், இரண்டு மணி நேரத்தில் பார்க்கக்கூடிய படங்களை 8000 அடி நீளமுள்ள பிலிம்களில் தயாரிக்கக்கூடாதா" என்று என்னைப்போல் ஒரு விஷமன் கேட்டால் அதற்குப்பதில் "உம்மைப்போல் ரசிகாக்ரசிரோமணிகள்தானா எமது படங்களுக்குப் பணம் கொடுக்கிறார்கள்? $4\frac{1}{2}$ அணாவும் 9 அணாவும் கொடுத்துவிட்டுப் பார்க்கும் பாமர ஜனங்கள் தானே எமக்கு முக்கிய ஆட்கள். அவர்களுடைய குதூகலத்துக்காகவன்றோ யாம் படங்களைத் தயாரிக்கிறோம்" என்கிறார்கள். நிரம்பவும் சரியென்று இதை ஒப்புக்கொள்வோம்! சினிமா கூட்டத்தில் இந்த $4\frac{1}{2}$ அணா 9 அணா ஆட்களுக்கு நடக்கும் உபசாரத்தைக் கவனி. மூன்றுமணி ஆட்டத்துக்கு ஒரு மணிக்கே அவர்கள் வந்து "க்யூ"வில் நிற்க வேண்டும்; ஆறுமணி ஆட்டத்துக்கு நான்கு மணிக்கே வரவேண்டும். "க்யூ"வின் எல்லையைப் பார்ப்பாயோ, இரண்டு பர்லாங்கு வரையில் இருக்கும். இதிலிருந்து தப்பி ஒருவன் டிக்கட்வாங்கி உள்ளே போய், காற்றுமில்லாமல் புகைச்சுருட்டின் புகையும் சூழ்ந்த மேடையில் அமர்ந்து நான்கு மணி நேரம் படத்தைப் பார்த்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பிவந்த பிறகு அவனுடைய தேகஸ்திதி எவ்வித மிருக்கும் என்று யோசிக்கவே வேண்டாம்! சினிமாவை நடத்துபவர்கள் காலையிலிருந்து வேலை செய்யக் கூடாதா? பொது ஜனங்களிடமிருந்து ஏராளமான பணம் சம்பாதிக்கிறார்களே, அவர்களுடைய சிப்பந்திகள் காலை 9மணியிலிருந்து டிக்கட் ஆபீஸைத் திறந்துவைத்துக்கொண்டு, முதல் ஆட்டத்துக்கோ, இரண்டாவது ஆட்டத்துக்கோ, நம்பர் போட்ட டிக்கட்டுகளை விற்பனைசெய்து, நம்பர் பிரகாரம் அவரவர் தத்தம் இடத்தில் உட்காரலாம் என்ற ஏற்பாடு செய்ய

லாகாதா? இரண்டரை ரூபாய் டிக்கட்டு வாங்கும் ஆட்களுக்கு இந்த வசதி கொடுக்கவில்லையா? அவர்களுக்கு ஏற்பாடு செய்ததுபோல் "பிளான்" வேண்டாமைய்யா! முதல் வந்தவனுக்கு முதல் டிக்கட் இரண்டாவது வந்தவனுக்கு இரண்டாவது டிக்கட் என்றெல்லாம் ஏற்படுத்தலாகாதா? அப்படிச் செய்தால் சௌகரியமுள்ளவர்கள் முன்னதாகவேவந்து டிக்கட்டுகளை வாங்கிக் கொள்ளவோ, அல்லது மற்றவர்கள் மூலமாகவாவது வாங்கி வரச்சொல்லவோ அவகாசம் உண்டாகுமே! உத்தியோகத்துக்குப் போகிறவர்களும், கூலி வேலை செய்பவர்களும், சிறிய சம்பளக்காரர்களும் 'க்யூ'வில் வந்துதான் சாகவேண்டும் என்று ஏன் கட்டாயப்படுத்த வேண்டும். நம்பர்கள் உள்ள இடங்கள் சிறிய கட்டணங்கள் உள்ள டிக்கட்டுகளுக்குத் தோதுப்படாதென்று எந்தச் சாஸ்திரத்திலுள்ளது? ஆகவே இதனால் விளங்குவது என்ன? சினிமா படங்களின் செல்வாக்கை விருத்தி செய்பவர்கள் நடுத்தர நாடோடிகள். ஆனால் அவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டுக் கஷ்டப்படவேண்டும். அதிகமாகப் பணம் வீசி எறியக்கூடிய நுரைகளும் வண்டல்களும் சகலவித சௌகரியங்களையும் அனுபவிக்கலாம். படிப்பது ராமாயணம் இடிப்பது பிள்ளையார்கோவில் என்பது போலல்லவோ இருக்கிறது!

மேலும் ருஜு வேண்டுமா? சங்கீதக் கச்சேரிகளைக் கவனி! சென்ற மூன்று நான்கு வருஷங்களாகக் கர்னாடக சங்கீதம் பட்டபாடு நாயும் படாது! ஜனநாயக சங்கீத இயக்கம் என்று ஒரு கொழுத்த பெண் பூனை முன்னுக்கு வந்தது! அது போட்ட குட்டிகள் கணக்கற்ற சபைகளாய்விட்டன. இந்தக் குட்டிகளின் பசியையும் விளையாட்டையும் தீர்க்க, சங்கீதத்தில் ஈடுபட்ட எலிகள் போன்ற பாடகர்களும் பரதநாட்டியத்தில் ஈடுபட்ட மூஞ்சுறுகளும் ஏராளமாய்ப் பெருகிவிட்டன. சபைகளின் காரியதரிசிகளிடமும் கமிட்டி மெம்பர்களிடமும்போய் "எலிகளின் ரொஷ்டு அதிகமாய்விட்டதே" என்றாலோ "என்ன சார் செய்கிறது? கேட்கலெக்ஷனை அனுசரித்துத்தானே நாங்கள் சபையை நடத்தலாம்! உங்களைப்போலே பத்துப் பேர் வந்து கேட்டால் எங்களுக்குப் போதுமா? நாடோடி ஜனங்களுடைய மனப்பான்மையைக் கவனித்தல்லவோ பாடகர்களை ஏற்பாடுசெய்யலாம்!" என்பார்கள்! எலிகளிடம்போய் "நீங்கள் அனாவசியமாகக் காலால் பிராண்டாமல், வாயால் சப்தம் செய்தால் நன்றாயிருக்கும்" என்றாலோ, அவைகள் "உங்கள்




அபிப்பிராயப்படி நாங்கள் செய்தால் "காலரி அப்ளாஸ்" கிடைக்காதே. அதற்கு என்ன செய்வது. பிருண்டினால்தானே காலரி அனுபவிக்கிறார்கள்" என்கிறார்கள். இந்தக் காலரி என்பது ஒரு அநந்தரமான வஸ்து. பரப்பிரும்மஸ்வரூபம் என்றே சொல்லலாம்! சபாநாயகர்களைக் கேட்டால் அவர்கள்தான் சாமான்ய ஜனக்கூட்டம் என்பார்கள்! நாடோடிகளையே அவர்கள் சுட்டிக்காட்டுவதாக நாம் வைத்துக் கொள்ளலாம். நிஜமாக யோசித்தால் நாடோடிகள் அரசிகர்கள் அல்ல; அவர்கள்தான் நல்ல ரசிகர்கள். அவர்களுக்குச் செல்வாக்கு இல்லாததால் அவர்களுடைய யதார்த்த அபிப்பிராயம் வெளிக் கிளம்பாமல் போகிறது! நுரைகளும் வண்டல்களும் கூடி, கூப்பாடு போட்டு, தங்களுடைய அபிப்பிராயங்களை நாடோடிகளுடைய அபிப்பிராயங்களாகக் காற்றில் வீசிவிடுகிறார்கள். இது நிற்க, நாடோடிகளுக்காக இவ்வளவு மனமிரங்கும் சபா நாயகர்கள் அவர்களுடைய சௌகரியங்களுக்காக என்ன செய்கிறார்கள். "சிற்றப்பன் சீராட்டிக் கண்ணில் சுட்டானாம்" என்பதுபோல் செய்கிறார்களல்லவா! சினிமாக்களில் என்ன நடக்கிறதோ அதுதான் இங்கும்; அதைவிட இன்னும் மோசம்! சினிமாக்களில் முதல் வகுப்புக்கு ரூபாய் 2/6/- மாத்திரமே கட்டணமாகவிருக்க, சபைகளில் முதல் கட்டணங்கள் ஐந்தும் ஏழுமாய் விட்டன. நாடோடிகளுக்கு எட்டவே முடியாமல் போய்விட்டன. நுரைகளும், வண்டல்களும் ஐந்து இடங்களும் பத்து இடங்களுமாக ரிஸர்வ் செய்துவிடுகின்றன. பணக்கார நுரைகள் சில; படாடோப நுரைகள் பல; பல பட்டடை வண்டல்கள் பாக்கி இடங்களில், இப்படிச் சுகமான இடங்களெல்லாம் அடைபடும். பெரிய நுரைகளுக்குச் சிறிய நுரைகளும், பெரிய வண்டல்களுக்குச் சிறிய வண்டல்களும் நடுநடுவே தாம்பூலம் கொணர்ந்து கொடுப்பதும், குசுகுசுவென்றும் இரகசியம் சொல்லுவதும், இடையிடையே சங்கீத சஞ்சார சர்ச்சை செய்வதும், சரச சல்லாபம் கொண்டாடுவதும், கேட்பானேன்—இதையெல்லாம் கேட்டும் கண்டும் சகித்துக்கொண்டு, எண் சாண் உடம்பை ஒரு சாணில் அடக்கிக்கொண்டு, வாயில் எச்சிலையும், மூக்கில் ஜலுப்பையும், வயிற்றில் பலவித சங்கடங்களையும் அடக்கிக்கொண்டு நம் நாடோடி நான்கு மணி நேரம் இந்தச் சங்கீதக் கச்சேரியை "அனுபவித்து" விட்டு, வீட்டுக்குத் திரும்பும்போது அவன் "இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு இந்தக் கச்சேரியைத் தயாரித்த சபாநாயகர்கள் எல்லாம் என்னுடைய நன்மைக்காக வல்லவோ" என்று தானே சொல்லிக்கொண்டு போவான்? அல்லது "காலிப்பயல்கள்! சங்கீதக் கச்சேரியில்தானா இவர்களுடைய காலித்தனமெல்லாம்! நிஸ்ஸப்தமாகக் கேட்கவிடமாட்டானா? அக்கம்பக்கத்திலே திரும்பமுடியாமல் கையும் காலும் ஸ்தம்பித்துப் போயின! இந்தப் பயல்களா முள்ளம்பன்னிகள் மாதிரி முன்னுக்கும் பின்னுக்கும் போயிண்டிருக்கான்களே" என்பானோ? நீயே சொல்லு!

ஆகக்கூடி நீ கவனித்துப் பார்த்தாயானால், நமதுநாட்டில் பொதுமக்களுடைய நோக்கத்தில் ஒரு பெரிய பிரளயம் ஏற்பட்டிருப்பதாகவே ஒப்புக்கொள்ளுவாய்! கல்வி, கலை, கௌரவம், முன்னேற்றம் எல்லாம் பணப்பெருக்கிலேயே ஈடுபட்டிருக்கிறது! இதை எப்படித் தணிப்பது என்பதே ஒரு பெரிய விசாரமாயிருக்கிறது. "கல்லானேயானாலும் கைப்பொருள்ஒன்று உண்டாயின் எல்லாரும் சென்று அங்கு எதிர் கொள்வர்" என்பது இந்த 1945-ஆம் வருஷத்துக்காகவே கூறப்பட்டதுபோல் இருக்கிறது. நேற்றையதினம் ஒரு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார். "என்ன அம்மாஞ்சி! நம்ம வித்வான்களெல்லாம் மதராஸ் ரேடியோவிலே பாடினா ஒருமாதிரி இருக்கு; திருச்சி ரேடியோவிலே பாடினா வேறொரு மாதிரி இருக்கு; மதராஸிலே கச்சேரி பண்ணினா ஒரு தினுசு, மதுரையிலே கச்சேரிபண்ணினா வேறொரு தினுசு; இன்னும் பாரு, திருவனந்தபுரத்திலே ராஜசபையிலே கச்சேரி பண்ணினால் ஒரே கிருக்கியடிதான்; வாலைச்சுருட்டி மடியிலேவைத்துக்கொண்டு பாடிவிட்டு வருகிறார்கள், இதுக்கு என்ன சொல்லுகிறாய்" என்றார், அப்பொழுது பக்கத்திலே இருந்த குடியானவன் ஒருவன் சொல்லுகிறான் "நீங்க என்ன இப்படி ஆச்சரியப்படுகிறீர்களே! சந்தையிலே நேற்று ஒரு பசுமாட்டைப் பார்த்தேன். பால்காரன் அதைக் கறக்கும்போது ஒரு ரூபாய் எதிரே வைத்துவிட்டுக் கறந்தால் அப்பட்டமாகப் பால் கறந்தது—அந்த ஒரு ரூபாயை எடுத்துவிட்டு, எட்டணா காசு ஒன்றை வைத்தான்; உடனே பால் பாதி பாலும் பாதி ஜலமுமாய் கறந்தது—பசுமாட்டுக்கே அவ்வளவு சூசனை வந்துவிட்டதே இந்தக் காலத்திலே" என்று விழுந்து விழுந்து சிரிக்கிறான். அந்தக் குடியானவனுடைய கல்பனா சக்தி எவ்வளவு உயர்ந்தாயிருக்கிறது பார்த்தாயா?"

இப்பொழுது மணி இரவு பன்னிரண்டாய் விட்டது. இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன். சமீபத்தில் முடிகொண்டான் வெங்கடராமய்யருடைய பாட்டைக் கேட்டேன். தர்பார் ராகம்பாடி "முந்துவெனுக' என்ற கீர்த்தனையைப் பாடினார். வழியும் நடையும், கல்பனைகளும் மிகவும் மெச்சத் தக்கவையாயிருந்தன. நமது நண்பர் த்வாரம் வெங்கடசாமியையும் கேட்டேன். விஷமம் ரொம்பவும் ஜாஸ்தியாயிருக்குடாப்பா ரொம்ப ஜாஸ்தி. பேஷான வாத்யம்தான், நல்ல சாதகம்தான், காதுக்கு இனிமைதான், ஆனால் சேஷ்டை! இந்த நவராத்திரிக்காகப் பிரபலமான வித்வான்களைக் கச்சேரி பண்ணச் செய்கிறார்கள் போலிருக்கிறது. ரேடியோ அதிகாரிகள்! இருக்கட்டும்! நவராத்திரி கொலு வைத்திருக்கும் வீடுகளிலெல்லாம் நம்முடைய "லேடீஸ்" கூடும்போது "ஒரு பாட்டு பாடு, ஒன்னுமாத்திரம், பரவாயில்லை, வெக்கப்படாதே. ஒத்தரும் கேட்க மாட்டா, அதெல்லாம் பரியாசம் பண்ண மாட்டா, பயப்படாதே" என்றெல்லாம் தாஜா பண்ணாமல், ரேடியோவைத் திருப்பி வைத்துவிட்டு, புடவைகளைப் பற்றியும், செல்லாராம், ராதா ஸில்க் எம்போரியம், எஸ். ஆர். பாலுசாமி அய்யர். சிவராம் கம்பெனி இவைகளைப்பற்றியெல்லாம் தைரியமாய்ப் பேசலாமே! அதைச் சொல்லு!

பழைய மணி திரும்பவும் வந்துவிடும் என்பதாகப் பேப்பரில் பார்த்தேன். அது வந்ததினம் என் பெயரைச்சொல்லி வரசித்தி விநாயகர் கோவில் வாசலில் ஆறு தேங்காய் சூறை விட்டுவிட்டுக் கிரயத்துக்கு என் கணக்கில் பைத்து எழுதவும்.


விலைகள் குறைந்துவிட்டது! உடை நயம்!! கருர் விலை!!!

எங்கள் மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

தீபாவளி! கல்யாணம்!! மற்றும்!!!

யாவத் விசேஷங்களுக்கும் அவரவர்கள் மனதிற்குகந்த தாய் நவீன பார்டர்களில் நூதன ஜவுளி தினுசுகள் யாவும்

நம்பிக்கையாய் வாங்கக்கூடியதற்கு

M. N. நாகேந்திரம் சன்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

மலைவாசல் உள்மண்டபம்

தெப்பக்குளம் P. O. - திருச்சினுப்பள்ளி



ஸோப்பு கண்டுபிடிப்பதற்கு முன்பு ஜனங்கள் தேய்த்துக் குளிக்க இயற்கை பொருள்களையே உபயோகித்துவர நேர்ந்தது. அவற்றிலொன்று சீனிக்காய்ப் பொடி. சீனிக்காய் மரத்தின் பழுத்த காய்களைப் பறித்து வெயிலில் உலர்த்திப் பொடியாக்கி, அந்தப் பொடியை ஜலத்திற் குழைத்து தேய்த்து வந்தனர். இன்றும் சிலர் சீனிக்காய்ப் பொடி உபயோகித்து வருவதுண்டு. ஆனால் ஹமாம் ஸோப்பு வந்ததோடு இதுபோன்ற பழய வழிகள் மறைந்து வருகின்றன. ஏனெனில், பழயகால பொருள்களின் சிறந்த அம்சங்களனைத்தும் கூடுதல் சௌகரியமும், சுகமும் அளிக்கும் விதத்தில், நறுமணங்கமழ்வதும் எளிதில் நுரையளிப்பதுமான ஹமாமில் நன்கு பொருந்தி யமைந்திருக்கின்றன.

# ஹமாம்




உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

டாம்கோ விற்பனை இலாகா:
19 A. வாணியர் தெரு, P.B. NO. 31 மதருஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்

உங்கள் சௌந்தர்யத்தைக்
காப்பாற்றிக் கொள்ளுங்கள்




ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், லிமிடெட், பம்பாய் 15

# "ஆனை - ஐயா"

டாக்டர் வே. ராகவன்

நாத நாமக்ரியையில் 'இந்த பராகா' என்ற கீர்த்தனத்தை நம் தலைமுறையில் இன்றும் கேட்டுவருகிறோம்; சென்ற தலைமுறையில் கேதாரத்தில் 'பஜன சாயவே' என்ற உருப்படியொன்று நடைமுறையில் இருந்து வந்தது. இக்கிருதிகளில் 'உமாதாஸ' என்ற முத்திரை காணப்படுகிறது. இவ்வங்கிதத்துடன் இவ்வுருப்படிகளை இயற்றியவர் ஆனை—ஐயா என்ற தேவீ பக்தர்.

'அவர் சாரீரம் விவரமாய்ப் பேசும் வேகத்தில் நம்மால் உளறக்கூட முடியாது' என்று ரஸிகரால் வர்ணிக்கப்பட்ட ஒப்புயர்வில்லாத சாரீர ஸம்பத்துடன் கர்னாடக ஸங்கீதத்தை விளங்கவைத்த மஹா வைத்யநாத அய்யருடைய (1844–1893) பெயருடன் தொடர்பு கொண்டது இந்த ஆனை—ஐயா என்ற பெயர். மஹா வைத்யநாத சிவன் தோன்றிய வையச்சேரியிலேயே தோன்றியவர் ஆனை—ஐயா. வையச்சேரி தஞ்சைக்கு வெகு ஸமீபத்திலுள்ள ஒரு கிராமம். 1903ஆம் வருஷம் மஹா வைத்யநாத அய்யரின் மைந்தர் விச்வநாத அய்யர் தம் தந்தையின் 72 மேள ராகமாலிகா ஸாஹித்யத்தைத் தெலுங்கு லிபியில் வெளியிட்டார்; அந்த நூலின் முடிவில் சில ஆனை—ஐயாவின் தமிழ்க் கீர்த்தனங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன; அவ்விடத்தில் 'ஆனை—ஐயா' மஹாவைத்யநாத ஐயரவர்களின் 'பரமகுரு;' அதாவது குருவின் குரு என்று கண்டிருக்கிறது. காலஞ்சென்ற மஹா மஹோபாத்யாய டாக்டர் உ. வே. ஸ்வாமிநாத அய்யரவர்கள் தம் கட்டுரைகளிலும் மஹா வைத்யநாத அய்யரவர்கள் சரித்திரத்திலும் ஆனை—ஐயாவைப்பற்றிய சில குறிப்புகளை எழுதியிருக்கிறார்; மஹா வைத்யநாத அய்யரின் சிஷ்யர் ஸங்கீத கலாநிதி ஸபேச அய்யர், தாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைக்கல்லூரியின் தலைவராய் இருந்தபோது, திருச்சி ரேடியோவில் ஒரு பிரஸங்கத்தின் மூலம், ஆனை—ஐயாவைப்பற்றிய இரண்டொரு செய்திகளைத் தெரிவித்தார்; தஞ்சை அப்ரகாம் பண்டிதர் தொகுத்த கருணாமிருத ஸாகரத்திலும் இவருடைய பெயரும் சுருக்கமாய் நாலைந்து வரிகளும் காணப்படுகின்றன.

கடைசியில் சொன்ன நூலில் (பக்கங்கள் 178, 210) 'ஆனை ஐயர், ஐயாவையர் என்று இவர் இரண்டு ஸகோதரர்கள், இவர்களை ஆனை—ஐயா என்று கூப்பிடுவார்கள், தஞ்சை சரபோஜி மஹாராஜா காலத்தில் (1800—1832) சமஸ்தான வித்வான்களாயிருந்தார்கள், தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம், ஸங்கீதம் முதலியவற்றில் மிகத் தேர்ந்தவர், தமிழில் அனேக கீர்த்தனங்களைச் செய்திருக்கிறார், வையச்சேரி துரஸ்வாமி அய்யர் என்ற மஹா வைத்யநாத அய்யரின் தந்தை இவ்வானை ஐயாவின் மாணகர், துரஸ்வாமி அய்யரும் ஆனை—ஐயாவும் ஒன்றுவிட்ட பாட்டன் பிள்ளைகள்' என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் ம. ம. உ. வே. ஸ்வாமிநாத அய்யர் தாம் எழுதிய கட்டுரைகளில் மஹா வைத்யநாத அய்யரின் தாய் ஆனை ஐயா குடும்பத்திலுதித்தவள் என்று சொல்லியிருக்கிறார்.

ஆனை—ஐயா ஸ்மார்த்த ப்ரஹச்சரண ப்ராம்மணர். இரு ஸஹோதரரும் சேர்ந்து பாடுவார்கள். இதில் இருவரும் ஸாஹித்யங்கள் இயற்றினார்களா, ஒருவர்தான் இயற்றினாரா என்ற ஸந்தேகம் தீர வழியொன்றுமில்லை. சில உருப்படிகளில் வையச்சேரியில் கோயில்கொண்டிருக்கும் மங்களாம்பிகையையும் அகஸ்தீச்வரரையும், வேறு சிலவற்றில் திருவையாறு ப்ராணதார்த்திஹரரையும், மற்றும் சில ஸாஹித்யங்களில் ஞானவைராக்யங்களையும் போற்றி, தெலுங்கிலும், தமிழிலும் பாடியிருக்கிறார்கள். இரண்டொரு உருப்படிகளில் கடவுள் பெயர் அகஸ்தீச்வரன் என்றும், ஐயாறன் என்றும் கலந்து வருவதால் இவ்விரட்டையர்கள் வையச்சேரியிலும் திருவையாற்றிலும் ஸமபற்றுடன் இருந்துவந்தனர் என்று தெரிகிறது.

திருவையாற்றில் ஒரு ஸப்தஸ்தானத்தின்போது இவர்கள் பாடிய வராளி ஸ்ரீ தியாகய்யரையும் அவருடைய சிஷ்யக் கூட்டத்தையும் இழுத்துவிட்டதாய் ஒரு கதையை வித்வான் சபேச அய்யர் சொல்லுகிறார். மற்றுமோர் கதை ஆனை ஐயா இயற்றிய தமிழ்ப் பாட்டுகளில் ஒன்றின் வரலாறாகும். இப்பாட்டுப் புன்னாக வராளியில், ஆதியில், உள்ளது; "போதும் போதும் ஐயா, தலைமுறைக்கும் போதும் போதும் ஐயா" என்று தொடங்குவது. இதன் வரலாற்றை மஹா வைத்யநாத அய்யரிடம் நான் கேட்டு எழுதுகிறேன் என்று ம. ம. உ. வே. அய்யர் கலைமகளில் (தொகுதி உ, ஆங்கிரஸ-ஸூ பக்கம் 798-800)ஒருவிதமாய் எழுதியிருக்கிறார். மஹா வைத்யநாதய்யரின் தமயனார் ராமஸ்வாமி சிவனிடம்தாம் இந்தப் பாட்டைப் படிக்கும்போது அவர் சொன்ன கதை என்று வித்வான் சபேச அய்யர் வேறுவிதமாய்ச் சொல்லியிருக்கிறார். வேளாண்மையில் அதிகம் ஈடுபட்டு, கலைச்சுவையற்ற அந்தணப்ரபு ஒருவர் வீட்டில் ஆனை ஐயா பாடும்படி நேர்ந்ததாம்; வெகு இனிமையாய் ராகத்தை இரு பாடகர்களும் விஸ்தரித்துக்கொண்டு போகும்போது, திடீரென நீரஸரான ப்ரபு 'என்னய்யா! சொன்னத்தையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்' என்றாராம். அதன்மேல் தமக்கெழுந்த துயரத்தை வைத்து இப்பாட்டை அவ்வூர் கடவுளின்முன் பாடினார்கள் என்று ஸ்ரீ ஸ்வாமிநாத அய்யர் கொடுக்கும் வரலாறு. ஸ்ரீ சபேச அய்யரின் கதையோ: இவ்வுருப்படியில் வரகாபுரி வேங்கடாசலபதியை நோக்கி ஸாஹித்ய கர்த்தா முறையிட்டுக்கொள்ளுகிறார். இவ்வரஹாபுரி என்பது திருக்காட்டுப்பள்ளிக்கு ஸமீபமான வரகூர் என்ற கிராமம்; தீர்த்த நாராயண ஸ்வாமிகளால் தரங்கங்கள் பாடப்பட்டு இன்றும் வழங்கிவரும் ஸ்தலம்; வரகூர் கோபால பாகவதர் முதலிய பக்தர்கள் இருந்த இடம். இவ்வூருக்கு ஓர் உறியடி உத்ஸவத்திற்கு வந்து ஆனை ஐயா சங்கராபாணம் ஆலாபனஞ்செய்து தம் 'மஹிம தெலிய தரமா' என்ற ஸாகித்யத்தைப் பாடினபோது, ஸபையில் அரஸிகன் ஒருவன் 'என்ன, சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறாரே' என்று சொன்னதன்மேல் பாடிய பாட்டிது; ஆனால் இது நிச்சயமில்லை; வரகூருக்கு உத்ஸவத்திற்குப் போய்ப்பாட, சரபோஜி உத்தரவு கொடுக்காததினால் எழுந்த பாட்டிது என்றும் சொல்லப்படுகிறது; உசிதப்படி ரஸிகர்கள் அனுபவித்துக்கொள்ளலாம் என்றும் ஸ்ரீ சபேச அய்யர் தெரிவிக்கிறார். மற்றும் பல உருப்படிகளில் காணப்படும் வைராக்யத்தைத் தவிர இப்பாட்டின் கடைசி சரணத்தில் அறியாதவருக்குத் தாம் பாடவேண்டியிருக்கும் நிலைமையை ஆனை ஐயா நொந்துகொள்ளுகிறார் என்பதை மட்டும் குறிக்கலாம். இப்பாட்டின் முழு ஸாஹித்யமும் பின்னால் கொடுக்கப்படும்.

ஆனை ஐயாவின் ஸாஹித்யங்கள் அதிகமாய் வெளியாகவில்லை. இவர்களுடைய இரண்டு மூன்று தெலுங்கு உருப்படிகளைத் தவிர மற்றவை தெலுங்கோ, தமிழோ, பிரசாரத்திற்குக் கொண்டுவரப்படவில்லைபோலும். தமிழில் இவர்கள் நூல்நடை, பேச்சுநடை இவ்விரண்டையும் கையாண்டிருக்கின்றனர். தாளங்களில் பெரும்பாலும் ரூபகத்தையே கையாண்டிருக்கிறார்கள். வரலாற்றுடன் கூடிய 'போதும் போதும்' என்றதைத் தவிர, வேறு 8 தமிழ் உருப்படிகள், முன் சொன்னதுபோல், 1903-ல் வெளியாகிய 72 மேள ராகமாலிகை நூலின் கடைசியில் அச்சாயிருக்கின்றன. சில ஆண்டுகளுக்குமுன் நான் நாட்டியப் பித்தால் சூலமங்கலம் முதலிய கிராமங்களில் அலைந்து கொண்டிருக்கும்போது, வையச்சேரி சென்று பெரியோர்கள் இருந்த இடங்களைத் தரிசித்துவிட்டு வந்தேன்; அப்போது ஆனை—ஐயா இருந்த அகத்திற்குள்ளும் நுழைந்து, அங்கிருந்த பெண் வார்ஸுகள் சிலரைச் சந்தித்து, அவர்களுடைய நன் மனதால் நான்கு ஸங்கீத நோட்டுப் புத்தகங்களை வாங்கிக்கொண்டு வந்தேன். அந்த நோட்டுப் புத்தகங்களில் பல வித்வான்களின் ஸாஹித்யங்களிருப்பதோடு, விசேஷமாய் வையச்சேரி வித்வான்களின் கிருதிகள் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. முக்யமாய் "ஆனை ஐயாவாள்" தெலுங்கிலும் தமிழிலும் இயற்றிய கீர்த்தனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் தெலுங்கு ஸாஹித்யங்களின் அட்டவணையைமட்டும் இங்கே கொடுத்துவிட்டு, தமிழ்ப் பாட்டுக்களை முழுதும் கொடுக்கிறேன்.

## தெலுங்கு ஸாஹித்யங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கேதாரம் | ரூபகம் | பஜன சாயவே ஓ மனஸா | திருவையாறு பிரண தார்த்திஹரர் |
| 2. | சங்கராபரணம் | ,, | மஹிமதெலிய தரமா | திருவையாறு தர்மஸம் வர்த்தனி |
| 3. | நாத நாமக்ரியை | ,, | இந்த பராகா | ,, |
| 4. | கௌளை | ,, | பராக்யால பாலா | ,, |
| 5. | தோடி | ,, | அம்ப நநுப்ரோவவே | அம்பாள் |
| 6. | கல்யாணி | ,, | கன்ன தல்லிநநு ப்ரோவவே | தர்மஸம்வர்த்தனி |
| 7. | சுருட்டி | ,, | திரிபுரஸுந்தரி நிந்நே | அம்பாள் |
| 8. | பியாகட | ,, | எந்த நேர்சிநு ஸபலமேமி | ப்ரண தார்த்திஹரன் |
| 9. | கௌரி | ,, | நெநேநநிபலிக் மனஸா யௌயா நிஜமெருககநேஓமனஸா | தர்மஸம்வர்த்தனி |
| 10. | ஸௌராஷ்ட்ரம் | சாபு | சம்போயன ராதா | ப்ரண தார்த்திஹரன் |
| 11. | பைரவி | ரூபகம் | எந்துகு பலுமாரு | ,, |




# வின்ஸென்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.

வின்ஸென்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி, குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய், பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்ருய் அடைந்திருக்கும் **வின்ஸென்ட் கம்பெனியாரால்** தயார் செய்யப்பட்டவை. மேலும் ஷை சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழாக் காலங்களிலும் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

## தமிழ்ப் பாட்டுகள்

**I.** சங்கராபரணம் — ரூபகம்

பல்லவி

கனவிலுமுனை நினைந்திடவெனக்
காலன் வாராது காத்திடுவாய் (கன)

அனுபல்லவி

மனமகிழ் மங்கள நாயகி யோடு
வையையில் வாழும கத்தியேசனே (கன)

சரணங்கள்

1. மனைவி மக்களை வருந்திடுமோ
மண்ணாசையிற் பொருந்திடுமோ
மனதெங்ஙனே திரிந்திடுமோ (கன)

2. பாவமென்ன போட்டிடுமோ
பவநோயால் வாட்டிடுமோ
பாவனையெங் கோட்டிடுமோ
பாதமலரிற் கூட்டிடுமோ (கன)

3. கஞ்சாசனன் புகழ்பாதா
காமனை எரித் தவினோதா
பஞ்சாக்ஷர விக்யாதா
பகருமாதா சனுக்கருள்தாதா (கன)

(அகத்தியேசன்—வையச்சேரியிலுள்ள சிவனின் பெயர்; கஞ்சாசனன்—பிரம்மா; தாதா—கொடுப்பவன்.)

---

**II.** கமாசு* — ரூபகம்

பல்லவி

ஆசைக்குள்ளாகாதே ஆவதென்ன பொல்லாதே

அனுபல்லவி

வாசவன் புகழ் அகத்தியேசனை†
வணங்கி யிணங்கிக் குணங்களாக (ஆசை)

---

(வாசவன்—இந்திரன்; தீரத்துவம் தைரியம்; அஞ்செழுத்து—சிவ பஞ்சாக்ஷரம்.)

* இதன் ராகம் நிச்சயமில்லை; இரண்டாவது சுவடியில் 'காம்போதி' போட்டு அடித்து, மறுபடியும் 'சங்கராபரணம்' போட்டு அடித்து,' பியாகடை' போட்டிருக்கிறது.

† இரண்டாம் சுவடியில் 'அகத்தியேசன்' 'ஐயாறன்' ஆக மாறி, உருப்படி வையச்சேரியிலிருந்து திருவையாற்றிற்குப் போய்விட்டது.

சரணங்கள்

1. தீராத வினைவந்தாலும் தீரத்துவமிருந்தாலும்
சீராளர் பிறந்தாலும் சிறப்பில்லா திருந்தாலும் (ஆசை)

2. கப்பலோடுதின்றாலும் காசற்றவனென்றாலும்
கப்பரை கையிற்கொண்டாலும் கனதனவானென்றாலும் (ஆசை)

3. மன்னர் பதவிகொண்டாலும் வரையோட்டருந் துண்டாலும்
அன்னை யுமாதாசனென்றாலும் அஞ்சேழுத்துப் பொருள்கொண்டாலும் (ஆசை)

---

III. கானடா — ரூபகம்

பல்லவி

ஆருக்காருமிலே மனதே — அறியாமலலேயாதே (ஆரு)

அனுபல்லவி

தீரா பவத்திரை தனைத்தாண்ட நீ
திருவையை வாழுகத்தியேசனைத்துதித்திடு (ஆரு)

சரணங்கள்

1. மலஜலமாமிசம் நிறைந்ததோர் கூடு
மாய வேடர் ஐவர் இருந்திடும் காடு — சஞ்
சலஞ்செய்யாதேச தமோ இந்த வீடு
சச்சிதானந்தப்ப தவியைத் தேடு (ஆரு)

2, நிலையில்லாதநில மாய்கைதனிற் சிக்கி
நிலவரமென்றெண்ணி றற்பலநோக்கி
கலவிசெய்த பெண்டிரு மக்களும் நீக்கிக்
காயம் விழுந்தபிறகு ஆருமே தூக்கி (ஆரு)

3. எள்ளிலெண்ணெய்போ லெங்கும் நிறைந்து
ஏழையடியரை என்றுமே காத்து
உள்ள மகிழ்ந்துமா தாசனைப் பார்த்து
தெள்ளுதமிழுதவும் தேவனைப் போத்து (ஆரு)

---

IV. சாரங்கா — ரூபகம்

பல்லவி

அருமைபெருமை தெரியார்தனை அனுதினங் காத்தலையாமல்
ஆதரித்தென்னைக் காத்தருளு மகஸ்த்தியேசா (அரு)

அனுபல்லவி

ஒருமையாய் மங்கள நாயகிக்குவந்த ஜகதீசா
உனதுமகிமை உரைப்போர்க்கு உள்ளமுருக்குமுபதேசா (அரு)

சரணங்கள்

1. சிந்தை மகிழ்ந்து விந்தை வீணை தம்புருச்ருதிகூடி
செந்தமிழ் வண்ணஞ்* சீர்பெருகப்பாடி
இந்தப்புவியிலுமக்கிணை யார் என்று புகழ்ந்தோடி
இந்திர சந்திரனெனவே இரவும் பகலும் நாடி (அரு)

2. கற்பகம் போலுதவியசெங் கையனே என்றெடுத்துக்
கற்பனையோ டொப்பினதமிழ் கனிவாயவர்க்குத் தொடுத்து
அற்பரை யாம்துதியோமென் றனந்த விதம் படித்து
அற்ப மனிதனுகிவெகு ஆசையெனும் பேய்பிடித்து (அரு)

3. உமாதாசன் தன்னைக்காக்க உவந்த நமச்சிவாயா
உமையாள் மங்களநாயகிக் குள்ளமறிந்த நேயா
உமைப் பூசித்த மார்க்கண்டனுக் குண்மைதரும் சகாயா
ஊமையர் மொழிகேட்டுவெகு உணர்வை யுரைக்குமுபாயா † (அரு)

---

*சுவடியில் இவ்விடத்தில் சில எழுத்துக்கள் திருத்திச் சேர்க்கப்பட்டிருக்கின்றன; அவை விளங்கவில்லை.

†இங்கு முதலில் நான்காம் அடி "பிரணு...லாது போற்றுவோர்க்கு புகழளிக்குமுபாயா" என்றெழுதியிருக்கிறது; அது பிராஸ இலக்கணத்திற்குப் பொருந்தாததாய் இருக்கிறது.

---

V. தன்னியாசி — ரூபகம்

பல்லவி

பருவம் பார்க்க நியாயமா பராத்பரியே பக்தரிடத்தில்

அனுபல்லவி

மருவுமிந்த வையையூரில் வாழவந்த நாயகி (பரு)

சரணங்கள்

1. பாதிமதியைச் சூடிச் சபையிலாடு மகஸ்தீசர்தன்னுட்
பாதியிலமர்ந்த பாக்கிய முன்பாக்கியம்
ஆதிமுதல் உன்பாதமலர் ஒன்றே கதியென்றோது மெனைய-
னுதியாய்ச் செய்யாமலினி நாதி கிருபாநிதி நாதரூபி (பரு)

2. பிறவாதிருக்கப் புவியிலுனது பெருமைகள் தன்னைப்புகழ்ந்து
திறமில்லாக் கும்பி‡க்கிரை தேடிடும்நாளுந் பாதகமும் தீவினைகளுந்தீர
மறவாமலே நானுனது இருபதம் எனதுமன மதனிலேகரைந்து
சிறுவயதிலடிமை யானவெனைச் சிறுமைசெய்யவும் பெருமையோசொல் (பரு)

3. மனமலரினில் அனமேனவளர் மரகதவடிவமிகு மயிலே
மனேவியர்மையல்வலே யகற்றிட மருந்துநீயென்று சிறந்தேன்
தனமிகு தரணியோர் புகழுமாதாச னுக்கிப் போதேயருளித்
தனபதிமுதற் பணியுமுனது தாளடிக்கீழ் ஆளாக்காது இன்னம் (பரு)

‡கும்பி—வயிறு.

---

VI. தோடி — ரூபகம்

பல்லவி

மெய்யென்றிராதே மனதே
யிந்த மெய்தனே§ (மெய்யென்று)

அனுபல்லவி

ஐவரும்$ கைவிடுமுன் அகஸ்தீசனே த்துதித்து வந்திரு (மெய்)

சரணங்கள்

1. மலமுஞ்ஜலமுங் கிருமிகள் நிறைந்த கூட்டைக்கண்டு
மலேயாதே மறலி|| யொடுக்குங்கட்டை
பலரோகத்திற்கிடமா மிந்த வீட்டைப்பிரமன்
படைத்தான் அதனில் ஒன்ப தோட்டை (மெய்)

2. பரத்தயர் மோகவாழ்வு பொம்மை யாட்டமறிந்துநீ
பரவுபகாரம் செய்வதே சிரேஷ்டம்
பெருத்திடை நடுவிருப்பவனுட ஆட்டமடங்கினுற் பிணமாஞ்சுடுகாட்டுப்
பெருந்தீதனில் இடும்காட்டம்° (மெய்)

3. மாமறை துதிக்குந் தத்துவத்தைதேடு நீ
மாநிலத்து நல்லோர்தம்மை நிதம்நிதம் நாடு
தாமரை முகத்தாள் உமாதாசன் பதத்தைப் பாடு
தயாநிதியான ஐயாறனே த்தானே கொண்டாடு (மெய்)

---

§மெய்—உண்மை, உடல். $ஐவர்—ஐம்புலன்கள். ||மறலி—யமன்.
°காட்டம்—கட்டை

---

மஹா வைத்யநாதய்யரின் புதல்வர் விசுவநாதய்யர் 1903-ல் பதிப்பித்த 72 மேள ராகமாலிகைப் பதிப்பின் இறுதியில் உள்ள 'ஆனேயா'வின் 8-தமிழ் உருப்படிகளில் இவ்வுருப்படி தரப்பட்டிருக்கிறது. ஆனல் அப்பதிப்பில் பல்லவியில் இரண்டாவது வரியே இல்லே; அனுபல்லவியிலும் 'அகஸ்தீசனே' என்றவிடத்தில் 'ஐயாறனே' என்றே இருக்கிறது. சரணங்களில் முதல் சரணம் ஒன்றே காணப்படுகிறது. அதிலும் 'மறலிதரிக்கும் காட்டை' என்று இரண்டாவது வரி படிக்கப் பட்டிருக்கிறது.

(தொடரும்)

தொடர் கதை

# அம்பாச்சாரி

கே. சுந்தரம்மாள்

— 4 —

'டிங் டிங் டிங்' என்ற மணியோசையுடன் ஒரு தெருவின் மூலை திரும்பினது ஸைக்கிள். அதே மணியோசையுடன் எதிர்ப்புறத்திலிருந்து மற்றொரு ஸைக்கிள் வந்து இரண்டும் நேருக்கு நேர் சந்தித்தன.

"ஹல்லோ குட்ஈவினிங் விமல்"

"ஹல்லோ குட்ஈவினிங் குந்தளம்" என்று ஏககாலத்தில் கூறிக்கொண்டு ஸைக்கிளை விட்டு இறங்கினார்கள்.

"விமல், எப்பொழுது வந்தாய்? நாளைக்குக் காலேஜ் திறக்கிறார்களே; வந்து விட்டாயா என்று பார்ப்போம் என்று உன் வீட்டிற்குத்தான் வந்து கொண்டிருந்தேன்"

"இன்று காலையில்தான் வந்தேன். நானும் உன்னைப் பார்க்கவே உன் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தேன்"

"நமது நட்பின் உண்மை எப்படிப்பட்டது பார்த்தாயா? சரி இப்பொழுது நடுவில் நாம் சந்தித்துவிட்டோம்; யார் வீட்டிற்குச் செல்லலாம் சொல்."

"ஒருவர் வீட்டிற்கும் வேண்டாம். அம்பாச்சாரிக்குச் செல்லுவோம். சற்றுநேரம் நாம் பேசிக்கொண்டிருந்தால் சரத்சந்தரும் வந்துவிடுவார்" என்றாள் விமலா.

"அவர் ஊரிலில்லை, அவர் சித்தியின் தம்பி பெண்ணுக்குக் கல்யாணமென்று நேற்றே அவர் சித்தியுடன் சென்றிருக்கிறார். வருவதற்கு இரண்டு நாட்களாகும் என நினைக்கிறேன்."

"அவர் இல்லாவிட்டால் என்ன? நாம் போவோம் வா"

லல்ல லல்ல லல்லா பாட்டுடன் அம்பாச்சாரி வந்து சேர்ந்தார்கள்.

விமலா "ஸைக்கிளைச் சோக்ராவிடம் ஒப்புவித்துவிட்டுப் போவோம். இன்று ஒரு ஹேமசந்தர் வந்து காப்பாற்றும்படி ஆகிவிடப்போகிறது" என்று சிரித்தாள். பிறகு தோட்டத்தில் புகுந்து ஊஞ்சலின் பக்கத்தில் வந்தார்கள்.

"குந்தளம் இன்றுவது வீசி ஊஞ்சலாடுவோம். எவ்வளவு தாராளமாகப் பழகினாலும், அவர் முன்னால் ஊஞ்சலாடக் கூச்சமாகவே இருக்கிறது" என்றாள். இருவரும் உட்கார்ந்து வீசி வீசி மனம் போனபடி ஆடினார்கள்.

"காதல், காதல், காதல், அருகிலிருந்தால் பரமானந்தமே; பிரிந்திடிலோ அனல்போல் சுடுமே" என்று பாடினாள் விமலா.

"என்ன காதல் பித்து தலைக்கேறிவிட்டதா? இடம் காலமில்லாமல் பாடுகிறாய்?" என்றாள் குந்தளம்.

"காதல் பித்து யாருக்கென்று, காதலின் ஜோதியைக் கண்டவருக்குத் தெரியும். எனக்கெப்படிக் காதல் பித்து ஏற்படும்" என்றாள் கண்களைச் சிமிட்டிச் சிரித்தவாறே.

"என்ன விமலா ஏதேதோ சொல்லுகிறாயே. உன்னையறியாமல் காதலின் ஜோதியைத் தனியாகக் கண்டுபிடிக்கமுடியுமா?" என்றாள் சிரித்தவாறு.

"இதுவரை அப்படித்தான். ஆனால் ஒரு சில தினங்களுக்குள் தனி ரகசியம் ஏற்பட்டிருக்கிறது. நெஞ்சைத் தொட்டுப்பார் தெரியும்"

"நமது சந்திப்பு" எனத் திடுக்கிட்டுச் சிந்தித்தாள். சற்று ஆழ்ந்து நோக்கியதும் விஷயம் கொஞ்சம் உதயமாயிற்று.

"அம்மாடீ சம்சயமில்லை. அதற்குள் குற்றம் சாட்டுகிறாயே. அக்கடிதமும் படமும், நீ புறப்படும் முதல்நாள் சாயங்காலம் கிடைத்தன. எதிர்பாராத இச்சம்பவமே அன்று இரவு தூக்கமில்லாமல் செய்தது. உனக்கும் இதுமாதிரி கிடைத்திருக்கும், நீ முதலில் சொல்லுவாய் என்று எதிர்பார்த்தேன். நீ மறைத்தாய்; நானும் அதையே செய்தேன்"

"எனக்கு வந்தால்தானே நான் மறைப்பதற்கு"

"உனக்கு வரவில்லை? இருவரையும் பரீக்ஷை செய்ய, விளையாட்டான விஷயம் என்றல்லவா நினைத்தேன்!"

"அன்று நீ தூங்காவிட்டால் இதைப்பற்றியே பேச்சே இருக்காது. ஏதேச்சையாக ட்ராயரைத் திறந்தேன். புஸ்தகத்தின் வர்ணம் மனதைக் கவர்ந்தது. எடுத்துப் பிரித்தேன், பார்த்தேன்"

"பார்த்தாயா, என்ன பழகினால் என்ன? தன் இனம் என்றால் உயர்வுதான். 'மதராசிப் பெண்' என்ற இழிவான நினைப்பினால் தானே இவ்விதம் செய்தார். வரட்டும் கேட்போம்"

"ஆனால் இதுவரை இதைப்பற்றி உங்களுக்குள் பேச்சு நடக்கவில்லையா?"

"சந்திப்பே இரண்டொரு நாள்தான். நானும் கேட்கவில்லை; அவரும் இதைப்பற்றிப் பேசவில்லை"

"குந்தளம், அப்படியானால் அவசரப்பட்டு ஒன்றையும் கேட்டுவிடாதே. சரத் சந்தரின் போக்கே தனி. உண்மையில் உன்மீது மனம் சென்றிருந்தால் இது வியப்பல்லவே"

"அதெப்படி முடியும்? கனவிலும் நடக்கக் கூடாத விஷயம் எனத் தெரிந்தும் மனம் அதை விரும்புமா?"

"செய்யுளைக் கவனி. காதலுக்கு ஜாதி, மதம், கௌரவம், பணம் இவையெல்லாம் கிடையாது"

"அதற்கு நீ இல்லாமல் நான்மட்டும் இருப்பதானால் சிந்திக்க இடமுண்டு. ஒரே விதமான இருகனி. உச்சியில் எட்டாத தூரத்திலிருக்கும் கனியைவிடக் கையினால் எட்டிப்பறிக்கும் கனியை அடைய எண்ணுவார்களா, எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விடுவார்களா?"

"உலகத்தில் அநேகமாக எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விடுவதே சர்வ சகஜமாக இருக்கிறது"

"அப்படி இருக்குமானால் இந்த ஆபத்தினின்றும் என்னை நீ காப்பாற்றவேண்டும். உங்களவர் சம்மதித்தாலும், எங்களவர் அடியுடன் தொலைத்து விடுவார்கள்" என்றாள்.

"நான் என்ன செய்யமுடியும்?"

"உண்மையாகச் சொல்லு; அவர்மீது உன்மனம் செல்லவில்லையா?"

"அதே கேள்வியை நான் திருப்புகிறேன்"

"இல்லை, மலைக்கும் மடுவிற்கும் வித்யாசமில்லையா. அவர்மீது சஹோதர உணர்ச்சியே தோன்றுகிறது"

"குந்தளம்! இதுவரை என் மனமும் ஒன்றையும் நாடவில்லை" என்றாள். இப்படிச் சற்றுநேரம் ஒருவரை ஒருவர் ஏமாற்றும் நோக்கத்துடன் பேசினார்கள்.

கடைசியாக விமலா தனது அபிப்பிராயத்தைச் சொன்னதாவது:

"குந்தளம்! இச்சமயம் என் மனம் மாங்கனி நல்லதா, விளாங்கனி நல்லதா? என்ற முடிவை அறியும் ஆராய்ச்சியில் இருக்கிறது. இன்னும் முடிவுகாண முடியவில்லை. சாதாரண மனப்பான்மையில், சுரேஷ் சிமைசெல்லும் தருணம் ஒரு சிந்தனையும் இல்லை. சரத்சந்தரை சிறுவயது முதல் பார்த்ததுண்டு. சமீப காலமாக நமது உணர்ச்சிகள் மாறும் தருணம் சரத்சந்தரின் மீது என்மனம் சென்றது. வீட்டிலும் எங்களைத் தம்பதிகளாக்கும் விஷயமாகவே பேசி வந்தார்கள். தற்சமயம் சுரேஷ் நான் சிறுவயதாக இருக்கும்பொழுதே என்னை வரித்து விட்டதாகச் சொல்லுகிறார். அழகு, குணம், கல்வி, இவைகளில் இருவரும் சமமே, இருந்தாலும், சரத்சந்தர் ரஸிகர். கவி இயற்றும் ஆற்றல் படைத்தவர். மனத்தராசில் எடை போடும்பொழுது, முள் சரத்சந்தர் பக்கமே சாய்கிறது. வீட்டிலும் இருகக்ஷி. அம்மா சுரேஷ் பக்கம். அப்பா சரத்சந்தர் பக்கம். ஆனால் எனது இஷ்டத்திற்கு விரோதம் செய்யமாட்டார்கள். சுரேஷ் என்னை அடையத் தவம்கிடக்கிறார். சரத்சந்தரின் மனதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அவர் போக்கு விசித்திரமானது. அவர் என்னை ஏற்கச்சித்தமாக இருக்கும் பக்ஷத்தில் அவரே என் தெய்வம். அவரை அடையும் பாக்யம் கிடைத்தால் என்னைப்போல் பாக்யசாலி இனிமேல் பிறந்துதானாக வேண்டும். ஆனால் அவர் மனம் வேறுபக்கம் சென்றிருந்தால் இவ்விஷயம் என் மனதிற்குள்ளேயே புதைந்துவிடும். நான் இப்படி நினைத்தேன் என்று கூட அவர் அறியக்கூடாது. எனது அந்தரங்க சகியாகையால் உன்னிடம் மனம்விட்டுச் சொல்லிவிட்டேன். பிறகு சுரேஷ் மனமாவது திருப்தியுறும்படி நடக்க வேண்டியதே. இது விஷயத்திற்கும் நமது சுதந்திரத்தைச் சில சமயம் நாமே விட்டுக்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதற்கு யாரைப் பொறுப்பாளியாக்க முடியும்? என் உள்ளத்தைச்சொல்லிவிட்டேன். அதுபோல் உன் உத்தேசத்தை

யும் சொல்லு பார்ப்போம். சரத்சந்தருக்கு உன்மீது காதல் ஏற்படுவது ஆச்சரியமல்ல. கவிஞனுக்கேற்ற காதலியே. ஆனால் பொருந்தாத விதமாக ஏற்பட்டு விட்டபடியால் விவேகியான அவர் காலத்தை யொட்டிநடப்பார்; மனதைத் தம்மிஷ்டப்படி ஆட்டும் ஆற்றல் படைத்தவர்.'' என்று முடித்தாள்.

''என் விஷயத்தில் சொல்லும் அளவு விசேஷமில்லை. என்படிப்பு முடிந்தபின்பு தான் கல்யாணப்பேச்சு என்று என் சித்தி கேள்விக்கு அப்பா பதில் சொல்லிவருகிறார். நானாகத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் வாய்க்காது. தற்சமயம் ஒரு விஷயம் மட்டும் அச்சத்தை விளைவிக்கிறது. சரத்சந்தர் உயர்ந்த நோக்கமுடையவரென்ற நம்பிக்கையில் அவருடன் நெருங்கிய நட்பு ஏற்படுத்திக் கொண்டேன். பழக்கத்திலோ பேச்சிலோ, ஒன்றும் மாறுதல் தெரியவில்லை. ஆனால் கடிதம் படம் இரண்டும் சற்றுச் சிந்தனை செய்யவேண்டிய விஷயம். நம் இருவருக்கும் இதுமாதிரி அனுப்பியிருந்தால் ஒரு விளையாட்டாக எண்ணலாம். மதராசிப் பெண்தானே, தமாஷிற்கு முகர்ந்துவிட்டுக் கசக்கியெறியும் புஷ்பத்திற்கு சமமாகச் செய்துவிட்டால் போகிறது என்ற நோக்கம் போலும். நாங்கள் அவ்வளவு கேவலமல்ல என்பதை அறியட்டும். இனிமேல் அம்பாச்சாரியின் சந்திப்பில் நான் கலந்துகொள்ள விரும்பவில்லை. நீ சந்திப்பதால் நன்மை ஏற்படும். இது விஷயத்தை நீ தெரிவித்து விடு, என்ன?''

''குந்தளம்! அவசரப்பட்டுப் பேசிவிடாதே. அவர் அவ்வளவு கேவலமான மனப்பான்மையுடையவரல்ல. ஏதோ உயர்ந்த நோக்கத்துடன் கேட்டிருக்கலாம். ஒருசமயம் என் விருப்பம் கைகூடாவிடில் அவரின் லக்ஷயப் பெண் உன்னையன்றி வேறு ஒருவரும் அமையமுடியாது. ஆனால் தகப்பனாரை மிஞ்சும் பிள்ளையாக இருக்கமாட்டாராதலால் நீ பயப்பட வேண்டிய அவசியமில்லை''

''சரி, அதெல்லாம் எப்படியாவது போகட்டும். நான் அம்பாச்சாரிக்கு வருவதை நிறுத்திக்கொள்கிறேன்''

''திடீரென்று நீ அவ்விதம் செயவது உசிதமல்ல. வாரத்தைப் மாற்றி, பக்ஷக்கணக்கில் வை. பிறகு சமயம்போல் மாதக்கணக்கில் மாற்றிக்கொள்ளலாம்''

''சரிஅப்படியே செய்கிறேன். கிருஷ்ண பரமாத்மா உன் விருப்பத்தைப் பூர்த்தி





பிராஞ்சு:

பெரிய தெரு,

கும்பகோணம்.

செய்துவைக்கட்டும்; எனக்கு நிம்மதியான வாழ்க்கையைக் கொடுக்கட்டும்" என்ருள்.

— 5 —

"யாரங்கே" என்ருன் தோட்டக்கார விபுல்.

"என்னப்பா! நான்தான்" என்ருன் வந்தவன்.

"அருகில் வந்து பார்த்துவிட்டு யார் மூகர்ஜி மகனு?" என்று ஆச்சர்யத்துடன் வாயைப் பிளந்தவண்ணம் நின்ருன்.

"ஆம், இப்பொழுது தோட்டத்தில் யார் இருக்கிருர்கள்?"

"சின்னம்மா குந்தளம் மட்டும் மல்லிகைப் பந்தலின் கீழ் உட்கார்ந்திருக்குதுங்க"

"இதைப் பார் விபுல்! நான் ஓர் அவசர காரியமாகக் குந்தளத்தைப் பார்க்கவேண்டும். வீட்டிற்குள் தெரிந்தால் நான்வந்தது பற்றிப் பிரமாதமாக எண்ணுவார்கள். அதனல் நான் வந்து போனது பற்றி வெளியிடக்கூடாது. இந்தா இதை வைத்துக் கொள்" என்று பத்து ரூபாய் நோட்டு ஒன்றை அவன் கையில் வைத்துவிட்டு, 'விர்' என்று தோட்டத்தினுள் சென்றுவிட்டான்.

வான வீதியில் பூர்ண அம்சத்துடன், ரோகிணியுடன் கொஞ்சும் காதலனின் குளிர்ச்சிகரமான ஜோதியில் தன்னை மறந்தவளாக உற்று நோக்கிய வண்ணம் மல்லிகைப்பந்தலின் கீழுள்ள பளிங்குமேடையில் உட்கார்ந்திருந்த குந்தளம் தன் கண்களை இரு மிருதுவான கரங்கள் மூடுவதாலுண்டான உணர்ச்சியினல் சிந்தனை கலந்து "விமலா! இன்று அம்பாச்சாரிக்குப் போகவில்லையா? அவரைச் சந்திக்கவில்லையா? அல்லது போய்விட்டுத்தான் வருகிருயா? என்னைப்பற்றி ஏதாகிலும் சொன்ஞரா" என்ருள் தன் கண்ணைப் பொத்திய கரங்களை எடுக்காமலே.

"உன்னைப்பற்றிக் கேட்டு விட்டால் மட்டும் மனச் சாந்தி ஏற்பட்டு விடுமா" என்று சொல்லியவாறு, அவள் நெற்றியில் முத்தமிட்டுப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான்.

குரலைக்கேட்டே பதறிப்போனுள். அவன் உட்கார்ந்ததும், "நீங்கள் எப்படி வந்தீர்கள்" என்ருள்.

"காதலின் பாதையால்" எனச்சிரித்தான்,

"ஐயோ! இதென்ன பரீசைஷ? தோட்டக்காரன் பார்க்கவில்லையா?"

"பார்த்தான். ஸலாம் செய்து உள்ளே அனுப்பினுன்."

"ஐயோ! இது சரியல்ல. இருவருக்கும் ஆபத்து. உங்கள் கௌரவத்திற்குப் பங்கம் வர நான் சம்மதியேன்"

"ஏனிப்படிப் பயந்து சாகிருய்? என்னைக் காதலன் என்று நினைத்தாயா? காதகன் என்று நினைத்தாயா? உன்னையும் என்னையும் இழிவு படுத்தும் வகையில் நடப்பேனு? பத்து ரூபாய் நோட்டு விபுலை என்னிஷ்டப்படி ஆடச் சொல்லிற்று. அவன் எங்கள் இனம். தட்டாமல் பணம் கிடைக்கும். என்னை உன் தகப்பனுரிடம் ஒரு பொழுதும் காட்டிக் கொடுக்கமாட்டான். ஒரு மாதமாக என்னை ஏமாற்றிச் சித்ரவதை செய்தாயல்லவா? ஸ்திரீஸாகஸத்தினல் மறைந்து கொண்டால், புருஷ ஸாகஸத்தினல் கண்டு பிடித்தேன். மூன்று நாட்களாகச் சிந்தனை செய்து துணிவுகொண்டேன். இந்த வழியினல் தினம் இதே இடத்தில் இதே வேளையில் உன்னைச் சந்திப்பேன். இது நிச்சயம். நிலவானுலும் இருட்டானுலும், நீ இவ்விடத்தில் எனக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டும்"

"எதற்காகவோ? அதெல்லாம் நடக்காத விஷயம்"

"நடக்கும் விஷயம் தான். எதற்காக வென்ருல் உலகை, விமலாவை, உன் அப்பாவை ஏமாற்றிக் காரியத்தில் வெற்றி பெற"

"விமலாவை எதற்காக ஏமாற்றுவது? விஷயம் விளங்கவில்லை யென்ருலும், நான் சொல்லப் போவதைத் தாங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும். விமலா உங்களையே நினைந்து உருகுகிருள். அது நியாயம். நமது காதல் ஹ்ருதயத்துடன் நிற்கட்டும். நான் இனி வேறு ஒருவன் கையைப் பிடிப்பது என்பது இந்த ஜன்மத்திலில்லை. அப்பா படிக்க வசதி அளிப்பார். டாக்டராகி வந்து, உலகத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவேன். தாங்கள் விமலாவுடன் வாழ்க்கை நடத்துவதை ஆனந்தமாகக் கண்டுகளிப்பேன். எனது காதல் தெய்வீக அம்சம். என்னுல் உங்களை நேர்மையான வழியில் நடக்கும்படி செய்வதாகும். இனி நாம் நேசர்களைப்போல் சந்தித்துப் பேசுவோம். விமலா எனது ஆருயிர்த்தோழி. நியாயமாக அவள் அடையவேண்டிய

சுகத்தை, அநியாயமாக நான் அபகரிக்க என் மனச்சாக்ஷி இடமளிக்காது. உங்களது அளவுகடந்த அன்பே நான் ஆயுளில் அடையும் சந்தோஷத்திற்கு ஆதாரம்'' என்றாள்,

''சரி, நீ சொல்லவேண்டியவைகளைச் சொல்லியாகிவிட்டதல்லவா? இனி நான் சொல்லப்போவதைக்கேள். பிறகு நியாயப்படி நடப்போம். முதலாவதாக, நமது காதல் நன்மையானதல்லவென்றால் அதை ஏன் அந்த விதி ஏற்படும்படி செய்தது? அதனால் அதுவே அவைகளை நிறைவேற்றி வைக்கக் கடமைப்பட்டது. விமலாவின் மனம் உறுதியில் உரம்பெற்றதல்ல. சஞ்சல சுபாவம். என்னை நெருங்கும்பொழுது மனம் என்மீதில் பாயும், சுரேஷை நெருங்கும்பொழுது அவன் மீதில் செல்லும், இருவரும் அந்நியமாக இருக்கும் நிலைமையில். ஆனால் கொழுகொம்பைப்பற்றிவிட்டால், விமலக்கொடி பின் வேறு பக்கம் திரும்பாது. அக்கொழுகொம்பை அன்பு மலர்களால் விகஸித்துப் பிரகாசிக்கச்செய்யும் என்பது நிச்சயம். என்றாலும் குந்தளத்தைப் போல் உரம்பெற்ற கொடியல்ல நான் என் சுகத்தைத் தியாகம் செய்ய''

''தாங்கள் மனதிற்குள் புகுந்து பார்த்தீர்களோ?''

''கவிஞன் உலகத்தைத் தன் கவிக்கண்களால் கண்டு காவ்ய மனோசக்தியால் அளந்து நிறுத்திவிடுகிறான்''

''எல்லாம் பேனாமுனையிலும் மனோராஜ்யத்திலும் மட்டும் நடக்கக்கூடிய விஷயம். கவிஞனுக்கு வெளியுலகமாந்தர்களைப் பற்றிய சிந்தனையேது?''

''இல்லை. சாதாரண மனிதரைவிடக் கவிஞனே மாந்தரின் ஹ்ருதயத்தை உள்ளபடி ஒளியாமல் கண்டுபிடித்து உரைப்பவன்.''

''சரி, அப்படியே இருக்கட்டும், கவிஞரே! விமலா தங்களிடம் ஒன்றும் கேட்கவில்லையா?''

''அதைச் சொல்லத்தான் வந்தேன். அதற்குள் என்னைப் பேசவொட்டாமல் திணற அடித்துவிட்டாய். தேடிவந்தவனை நல்வரவு கூறிவிட்டாலும், இனிமேல் வராதே என்று முகமன் கூறிவிட்டாய்'' என்று நிறுத்தினான். சற்று நேரம் இருவர் கண்களும் மனமும், தாரையின் காதலனின் தோற்றத்தில் லயித்தன.

''சந்தர்''

''ஏன்?''

''என் மீது கோபமா?''

''எதற்காக?''

''நல்வரவு கூறாததற்காக மன்னிக்க வேண்டுகிறேன்.''

''கோபமானால் இப்படி உட்காரமுடியுமா?''

''பின் சொல்லவந்ததைப் பாதியில் நிறுத்திவிட்டீர்களே?''

''விமலாவைப்பற்றி அறிய ஆவல்; அதற்கு இந்தக் கேள்வி. இது எந்தத் தந்திரத்தில் சேர்ந்தது.''

''கவிஞரின் ஹ்ருதய வசீகர தந்திரம். நேரமாய்விட்டது. என்னைத்தேடி வருமுன் நான் செல்லவேண்டும். இஷ்டமிருந்தால் சொல்லுங்கள். இல்லையானால் எனக்கு அதைத் தெரிந்து ஆகவேண்டியது ஒன்றுமில்லை.''

''ஆஹா! கோபமே வராத குந்தளம்'' என்று அவள் கையை அழுத்திப் பிடித்துக்கொண்டு, ''சொல்லுகிறேன் கேள். தினம் தவறாமல் சந்தித்தோம், கண்களினாலும் ஜாடைகளினாலும் தனது எண்ணத்தை வெளியிட்டு வந்தாள். நான் ஒன்றுமறியாதவன் போல் நடந்துவந்தேன். சில நாட்கள் சுரேஷ் வருவான். மூன்றுபேரும் பேசுவோம். ஆனால் சுரேஷ் விமலாவை அளவுகடந்து புகழ்வான். அவளைத் தனியே சந்திக்கப் பிரயத்தனப்படுவான். இதையறிந்த நானும் சிலநாள் அவசர ஜோலி என்று அவர்கள் இருவரையும் தனிக்கவிட்டுச் சென்றுவிடுவேன், சுரேஷ் வராத ஒருநாள், உன்னை அழைத்துச் சென்ற அதே தனியிடத்திற்கு அவளை அழைத்துச் சென்றேன்.''

''எதற்காக.''

''அந்த இடவிசேஷமாவது அவள் மீது எனக்குக் காதலை உண்டாக்குமா என்று நினைப்புடன்தான். அதே பௌர்ணமி சந்திரனும் தோன்றினான். 'காதல் காதல்' என்று ஜபித்தேன், அது வரவில்லை. சற்று நேரம் இயற்கை வர்ணனையில் இறங்கினோம். பிறகு குந்தளம் வராத உண்மைக் காரணம் என்னவென்று உனக்குத் தெரியுமா?'' என்றேன்.

"அவள் தகப்பனார், இஷ்டப்படி செல்லக் கூடாது என்று சொல்லிவிட்டாராம். அதனால் அடிக்கடி வெளியில் செல்லுவதை நிறுத்திக்கொண்டாள் என்று நினைக்கிறேன். அவள் இல்லாததால் அம்பாச்சாரி உலவல் சோபிக்கவேயில்லை அல்லவா?" என்றாள்.

"எதையேனும் சொல்லிப் பேச்சில் மாட்டிக்கொள்ளக்கூடாது என்ற நினைப்பில், மௌனத்தைக் கடைப்பிடித்தேன். அவளும் சொல்லமுடியாத விசனத்தினால் தத்தளித்ததை முகம் தெள்ளெனக்காட்டிற்று. ஐயோ பாவம் எனத் தோன்றிற்று. ஆனாலும் குடிலகுந்தளம் மனதைவிட்டு அகன்றால்தானே ஏதாவது சொல்லவோ செய்யவோ முடியும். இருந்தாலும் அவளது பெண்மையின் பொறுமையை அளவு கடந்து சோதிப்பது சரியல்லவென்ற முடிவுடன், "விமலா!" என்றேன்,

"ஏன்" என்று நிமிர்ந்தாள். அவள் சோகம் முழுவதும் கண்களில் பிரதிபலித்தது. "இன்று ஏன் சுரேஷ் வரவில்லை" என்றேன்.

"நான் இங்கு வருவதாகச் சொல்லவில்லை."

"ஏன்?" என்றேன்.

"காரணம் ஒன்றுமில்லை. ஏதோ நினைத்தேன் வந்தேன்."

"அப்படிச் செய்யலாமா? அவன் உன் மீதில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறான். நாளை உனக்கு உரியவனாக வரக்கூடியவனை ............என்று முடிக்குமுன்"

"யார் அப்படிச் சொன்னது" என்றாள்.

"ஒருவர் சொல்லவேண்டுமா? இயற்கையாக நடக்கக்கூடிய விஷயந்தானே. அவன் உன்னை விரும்புகிறான் என்ற விஷயம் உள்ளங்கை நெல்லிக்கனி" என்றேன்.

"அவர் விரும்பினால் மட்டும் போதுமா?"

"ஆனால் நீ, அவனை ..................." என்று இழுத்தேன்.

"என் மனம் வேறு இடத்தில் சென்றிருந்தால்?"


# ஆச்சரியமான பாதுகாப்பு — — மற்றும் பந்தோபஸ்து

நேற்றைய கனவு........

இன்றைய வாழ்க்கை........

நாளைய நம்பிக்கை........

இவ்விதமாக வாழ்நாள் சென்றுகொண்டிருக்கின்றது.

வாழ்க்கையின் பிரயாணத்தில் உங்களுக்கு நாங்கள் உதவி புரிகிறோம்.

**மொத்த ஆஸ்தி சுமார் 3 கோடிகள்**

## லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கோ, லிட்., (லாகூர்)

மதராஸ் பிராஞ்ச்:
4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி.

ஸி. ஆர். சேஷன், M. A.,
பிராஞ்ச் மானேஜர்.

ஹைதராபாத் பிராஞ்ச்:
அபித் ரோட், (டெக்கான்)

"சுரேஷைவிட எல்லா அம்சத்திலும் சிறந்தவன் இருக்கமுடியாது என்று நினைக்கிறேன்" என்றேன்.

"ஏன் முடியாது?"

"நானறிந்தமட்டில் சொன்னேன். உன் மனதிற்கு எது மேன்மையாகத் தோன்றுகிறதோ? உலகில் எதற்கும் மனம்தான் காரணமாகிறது" என்றேன்.

"உண்மை. மனமே காரணம். உலகின் கண் தாழ்வாகத் தோன்றும் ஒரு விஷயம், தனிப்பட்ட ஒருவருக்கு மேன்மையாகத் தோன்றும். என்மனம் நாடும் பொருள் கிடைத்தால் அதுவே கிடைப்பதற்கு அரிய நிதி என்று மகிழ்வேன்" என்றாள்.

"நீ நாடும் பொருள் வேறொன்றை நாடியிருக்குமானால்? எதற்கும் மனமே முக்யமென்று நீயே சொல்லுகிறாய். அப்படியானால்?"

"சந்தர்!" என்றாள் அந்தச் சப்தமும் தோற்றமும் மறப்பது கஷ்டமே.

"விமலா! மன்னித்துக்கொள். என்ன செய்வேன்" என்றேன்.

"நீண்ட மூச்சிற்குப்பின் நான் அறியமுடியுமா" என்றாள்.

"காலப்போக்கில் வலியத் தெரிந்துகொள்ளலாம்" என்றேன். "பிறகு அவள் என்ன செய்திருப்பாள்! என்ன சொல்லியிருப்பாள், என்பதை நீ சொல்லு பார்க்கலாம். உன் உயிர் நேசியாயிற்றே. அவள் மனதைத் தெரிந்துகொண்டிருப்பாயல்லவா?"

"ஆண்மையின் செருக்கில் விடும் சொல்லம்புகளுக்கு விலகிப்போக வழியுண்டு. எதிர்த்துத் திருப்பவும் சக்தியுண்டு. ஆனால், விமலாவின் வாயில் இவைகளே வந்திருக்க முடியும்: 'சந்தர்! மன்னிப்பு என்ற பதத்திற்கு இவ்விஷயத்தில் யாதொரு மதிப்புமில்லை. நாம் அன்றும், இன்றும், என்றும் ஒன்றுபோலவே; காதல் ராஜ்யத்தில் முதலில் காலை வைக்கும்பொழுது, உண்டாகும் புதுமையினால் அந்த க்ஷணத்தின் ஞாபகம் மனிதர்களுக்கு இருப்பது இயல்பு; அந்த க்ஷணத்தில் ஒரு மந்திர சக்தி இருக்கிறதென்பது உண்மை. ஆனால் உலகம் க்ஷண நேரத்து மாயா வித்தையல்ல, ஸஹாரா வைப் போன்ற பாலைவனத்தில் வருஷக்கணக்காகச் செய்யும் பிரயாணம் அது. அதனால் எந்த விஷயத்திலும் தீவிர முயற்சியொன்றும் நான் எடுக்கப்போவதில்லை. விதியானது காட்டும் பாதையில் ஆனந்தமாகப் பிரயாணம் செய்வேன்' என்பதே. பிறகு யாதொரு மாறுதலுமின்றி வழக்கம் போலவே விடைபெற்றுச் சென்றிருப்பாள்"

"என்ன இருவரும் இவ்விஷயத்தைப் பாடம் செய்து வைத்திருக்கிறீர்களோ? கூட இருந்ததுபோல் சொல்லுகிறாயே. கூட அவள் சொன்ன விஷயத்தை அவசியம் உன்னிடம் தெரிவிக்க வேண்டுவதே. கடைசியில் பிரியும்பொழுது, '"சந்தர்! ஒரு விஷயம் உங்களுக்குத் தெளிவு படுத்துகிறேன். நானும், குந்தளமும், எந்த விஷயமானாலும் ஒருவருக்காக மற்றொருவர் விட்டுக் கொடுக்கப் பின்வாங்கமாட்டோம். இது உண்மை? என்றாள். இதன் அர்த்தமென்ன?"

"உங்கள் மனதிற்குத் தெரியும். வீண் கேள்வி எதற்கு? என்னமோ எனக்கு ஒன்றும் சரியாகத்தோன்றவில்லை. நடப்பது நடக்கட்டும். தாங்கள் வருத்தப் படக்கூடாது. நாம் விடை பெற்றுக்கொள்ளலாமல்லவா?"

"போவென்று கல்த்தா கொடுக்கிறாய்! போகிறேன். தாங்களா இப்படி வீணாகப் பயந்து சாகிறது. பிறகு எங்கள் சுதந்திரத்தைப் பிடுங்குகிறீர்கள் என்று, குற்றச் சாட்டு, எங்கள் மீது. தைரியமாக நடப்பது. கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லுவது"

"சரி, அதைப்பற்றிய வாதங்களை எடுத்தோமானால் பொழுதுமில்லை. நாமிருவரும் மனஸ்தாபத்துடன்தான் [பிரிய] நேரிட்டாலும் நேரிடும். தயவுசெய்து விட்டுவிடுங்கள்"

"விவாதத்தில் மனஸ்தாபம் உண்டாக்குவது யாராக இருக்கலாம்?"

"அது சொல்லமுடியாது. ஆனாலும் சமயத்தில் பொறுமையிழப்பவர்களே அதற்குப் பொறுப்பாளியாகக் கூடும்"

'பொறுமை இழப்பவர் எந்தப்பார்ட்டி?'

"பார்த்தீர்களா! என்னைச் சண்டைக்கு இழுக்கவே வழிதேடுகிறீர்கள். பொறுமையை இழப்பவர் ஆண் சிங்கமே"

"ஏனம்மா, பெண் சிங்கம் பொறுமை இழக்காது என்பது என்ன நிச்சயம்?

சொல்லு, இன்று அதைக்கேட்டு முடிவு செய்யவேண்டும்.''

''இல்லே. ஏதோ தவறிச் சொல்லிவிட்டேன். இருவரும் சமயத்தில் காரணமாகலாம். தயவுசெய்து இத்துடன் விட்டுவிடுங்கள். மறுபடி சந்திக்கும்பொழுது பார்த்துக்கொள்ளலாம். என் அன்பல்லவா, தாங்கள்! சீக்கிரம் இவ்விடம் விட்டுச் செல்லுவது இருவருக்கும் நன்மை'',

''சரி, உன்னிஷ்டப்படி இப்பொழுது சென்றுவிடுகிறேன்; தினம் இதே நேரத்தில்.........'' என்று முடிக்கு முன்,

''ஐயோ! வேண்டாம்!''

''பின் அம்பாச்சாரிக்கு வருகிருயா?''

சற்றுநேரம் சிந்தனையில் சென்றது அவள் மனம். பிறகு ''முன்போல் மூவரும் அம்பாச்சாரியில் சந்திப்போம். வெள்ளிக்கிழமை இரவு மட்டும் இவ்விடம் இதே நேரம் சந்திப்போம். மாறுதல் எதுவும் தெரியக்கூடாது. இம்மல்லிகைப் பந்தல் என் தாயின் மடிமேல் சயனிப்பது போன்ற உணர்ச்சி தருகிறது. நாங்கள் ரங்கூனிலிருக்கும்பொழுது என் அம்மா இது போன்ற மல்லிகைப்பந்தரை அன்புடன் போற்றி வளர்த்து, வேலேநேரம் போக மற்றப் பொழுதை மல்லிகைப் பந்தலின் கீழ் உள்ள மேடைமீது கழிப்பாள். நான் நிலவில் எவ்வளவோ நாட்கள் குதித்து விளையாடியிருப்பேன் தெரியுமா? அந்த ஒரு காரணத்தினுல் நான் இவ்விடம் எந்த நேரத்தில் வந்தாலும் அப்பா ஒன்றும் சொல்லுவதில்லே. என் தாயின் ஞாபகம் வருத்தும் பொழுதும், சித்தியின் ஜாடைச்சொற்கள் புறப்படும் சமயமும், இவ்விடமே எனக்கு ஆறுதலளிக்கும். அதனுல் தாங்கள் வாரத்தில் ஒருநாள் வருவதால் யாதொரு தீங்கும் ஏற்படாது. அப்பாவின் நம்பிக்கைக்கும் பாத்ரமாகலாம்'' என்ருள்.

''எதற்காகப் பயப்பட வேண்டுமோ தெரியவில்லே. நம் இஷ்டம் என்று உறுதியுடன் சொன்னுல் என்ன?''

''சுவாமி! தாங்கள் ஆண்சிங்கம் உலகமும் சமூகமும், என்னேப் போன்றவர்களேச் சமூகத்திற்குப் புறம்பான விஷயம் என்ருல், எவ்வழியாலும் முன்னேற வகையில்லாமல் செய்துவிடும். பெண் சுதந்தரமற்றவள். தலே குனியவேண்டியதே அவளின் முடிவு''

''அப்படிச் செய்வதும் சொல்வதும் ஆண் இனமென்பது உன் தீர்மானமா? அதுதான் இல்லே. என்போன்ற வருங்கால வாலிபர்கள், உங்கள் சுதந்தரத்தில் குறுக்கிட மாட்டோம். உங்கள் இஷ்டப்படி நடப்பதை எந்தவிதத்திலும் தடை செய்யோம்''

''நீங்கள் அப்படிச் செய்யலாம். ஆனுல் சமூகப் பழக்க வழக்கங்களினுலேயே, 'தான் சுதந்தரமற்றவள்' என்ற உணர்ச்சி' இரத்தத்திலேயே ஊறிவிடுகின்றது. தைரியமாக முன்னேக்கினுல், பிறகு சமூகத்தில் தனிப்பட்டவளே. அதனுல் நமக்கென்ன, நாமேன் இந்தத்தொல்லேயில் விழவேண்டும் என்ற சோர்வு நிரந்தரமாகி விடுகின்றது. உங்கள் சொற்கள் எங்கள் சுதந்தரத்தைப் பாதிக்கமாட்டா. ஆனுல், மௌனச்செய்கையே எங்களே நிரந்தர அடிமைகளாக்கி விடுகின்றன. சற்றுமுன் ஓர் அற்பவிஷயம் விவாதம் என்று வரும்பொழுது 'இன்று முடிவு தெரிந்துதான்' என்று கூறின உறுதி வாக்யத்தால் என்னேக் கலகலக்கச்செய்து நீங்கள் சொல்லுவதே சரி என்று சொல்லும்படியாயிற்று.''

''கடைசியில் என் வார்த்தையைக்கொண்டே உன் கொள்கையை நிரூபித்து விட்டாய். மிகவும் சந்தோஷம். ஸ்திரீ சுதந்திரத்திற்காகப் பாடுபடும் பெரியவர்கள் அதைப் பற்றிச் சிந்திக்கட்டும். நான் வேண்டுவது உனது சந்திப்பு. நல்ல நிலவுநாளில் அம்பாச்சாரி சென்று அதன் பூர்ண ஸௌந்தர்யத்தை நாம் பூர்ணமனதுடன் அனுபவிக்க வேண்டும். அதற்கு ஒத்துக்கொண்டாயானுல் இவ்விடம் நீ கேட்டுக்கொண்டபிரகாரம் நடக்கிறேன்.''

''உங்கள் சித்தம் என் பாக்யம். ஆனுலும் சுந்தர்! இவை இராஜபாட்டையல்லவே. கடைசியில் முடிவு எந்த நிலேமையில் கொண்டுவிடுமோ? என்பதே எனது கவலே. விதியானது நம் விஷயத்தில் இவ்விதம் விளேயாடிவிட்டது. காரணம் யாதென்று எவ்வளவு சிந்தித்தும் புலப்படவில்லே''

''காதலுக்குக் காரணம் கண்டுபிடிப்பவர் இனிமேல் பிறக்கவேண்டும். குந்தளம் கவலேயை விட்டுவிடு. உன் அன்பு ஒன்றையே எதிர்பார்த்தேன். அது கிடைத்துவிட்டது. ஒருவருக்கும் விரோதமில்லாதவகையில் இராஜபாட்டையில் ஆனந்த தம்பதிகளாய் நடந்து செல்வோம். இது முக்காலும் உண்மை. நான் சென்று வரட்டுமா?'' என்று எழுந்து நின்று அவள் கைகளேப் பற்றியவண்ணம் கேட்டான்.

அவளும் எழுந்து நின்ருள். நிலாவின் ஒளியில் இருவர் மோஹன ரூபமும் இருவர்




வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்றோர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது பெரீஸ் பிஸ்கட்ஸ்

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுதும் வாங்குவது

# பெரீஸ்
## பிஸ்கட்ஸ்

**PERRY & CO., USILAMPATTI.** (Estd. 1917)

மனதையும் இவ்வுலகையே மறக்கும் இன்ப நிலையை அடைவித்தன. அணைத்து முத்த ................................அவன் தோளில் சாய்ந்தபொழுது, "பொருந்தாத காதல் என்ற எண்ணம் மறந்து இதுவே தனது ஜீவியத்தின் லக்ஷ்ய வாழ்வு" என்ற நிம்மதியை அடைந்தாள் குந்தளம்.

திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே மறைந்தான் சந்தர். அவனையே உற்று நோக்கியவண்ணம் சிலைபோல் நின்றிருந்த குந்தளம், ஒரு நீண்ட மூச்சுவிட்டுவிட்டு, "ஆஹா, என்ன அன்பு! என்ன நளின ஹ்ருதயம்! வேறுயாராக இருந்தாலும் நான் சொன்ன சொற்களில், என்னைத் திரும்பிப் பாராமல் சென்றுவிடுவார்கள். நம் இனத்தவர் என்றால் இது விஷயம் நிச்சயம். அவர்கள் குலத்தின் குணமோ, தேசத்தின் பழக்கமோ, அவரின் அளவுகடந்த பிரேமையோ? இவ்விதம் பச்சிளங்குழவிபோல் கள்ளமற்று, பயமற்றுப் பேசுகிறார். ஏ சந்திரா! நான் அவரை அடைவேனா?" என்ற கேள்வியுடன் உள்ளே சென்றாள்.

— 6 —

"வாருங்கள்! வாருங்கள்! அடே விபுல், அந்தச் சேரை இப்படிக் கொண்டுவா" என்று சொல்லிக்கொண்டே இன்னது செய்கிறோம் என்று விளங்காத நிலைமையில், வந்தவரை உட்காரும்படி உபசரித்துவிட்டு, சட்டென, 'புஷ்பா' என்று அழைத்து, காதோடு சேதிசொல்லி அனுப்பினார். பிறகு வந்தவருடன் தாமும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். டீயும், டிபனும் கொண்டுவந்து வைத்தான் சமயல்காரன். அதிக உபசாரம் செய்து கொள்ளாமல் சாப்பிட்டார் வந்த ஆசாமி. பிறகு, "தங்களுக்கு என்னால் ஆகவேண்டிய காரியம் ஏதேனுமிருந்தால் சொல்லி அனுப்பலாமே. தாங்கள் சிரமம் எடுத்துக் கொண்டிருக்கவேண்டாமே" என்றார்.

"அடடா! தாங்கள் இவ்விதம் கூறுவது உங்கள் உயர்ந்த நோக்கத்தைக் காட்டுகிறது. நான் வந்தது அவ்வளவு பிரமாதமான விஷயமல்ல. பத்துநாட்களாகக் குந்தளம் காலேஜ் வரவில்லையென்று புரொபஸர் அமலானந்தகோஷ் மத்தியானம் சொன்னார். விசாரித்ததில் சுகவீனமாக இருப்பதாக விமலா சொன்னாள். பார்த்துவிட்டு, என்னிடம் மிகவும் உயர்தரமான மருந்து ஒன்று இருக்கிறது அதையும் கொடுத்துவிட்டுச் செல்லலாமென்று தான் வந்தேன். காலேஜ் டென்னிஸ் கோர்ட்டில் நாங்கள் யாவரும் பழகினது. குந்தளத்தைப் பற்றி பிரின்ஸ்பால் முதல் எல்லோரும் வெகு உயர்வாகப்பேசுவார்கள்" என்று தான் நினைத்து வந்த காரியம் எளிதில் கைகூடுமென்ற தைரியத்துடன் சொன்னான் சந்தர்.

"ஆஹா! எவ்வளவு பெருந்தன்மை? உங்கள் தகப்பனாரையும் உங்களையும் பற்றி இந்த ஜில்லா முழுவதும் மிக்க கண்யமாகச் சொல்லுகிறார்கள். 'நிறைகுடம் தளும்பாது.? 'என்பது எவ்வளவு உண்மை' வாருங்கள், குந்தளம் அறைக்குப் போகலாம்" என்று எழுந்திருந்தார்.

காலடிச் சப்தம் கேட்டுத் திரும்பின குந்தளம் சந்தரைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். பிறகு சமாளித்துக்கொண்டு, 'வாருங்கள்' என்றாள் படுத்தபடியே.

கட்டிலருகில் வந்து, சட்டென அவள் நெற்றியில் கைவைத்துத் தொட்டுப் பார்த்துவிட்டு, கைநாடி பார்த்தான். குந்தளம் முகத்தைச் சுளித்தாள். அதைப்பார்த்த தந்தை, "குந்தளம் என்ன குணம் பார்த்தாயா? உன்னைப் பார்ப்பதற்கு நம் வீடு தேடி வந்திருக்கிறார். வைத்தியம் தெரியும் போலும். நோயாளி வைத்தியரிடம் லஜ்ஜையில்லாமல் இருக்கவேண்டும்"

"இப்பொழுதும் ஜ்வரமிருக்கிறது. கொஞ்சம் வென்னீரும் வெள்ளிப்பாத்திரம் ஒன்றும் கொண்டுவாருங்கள். நாளை முதல் ஜ்வரமே வராமல் செய்துவிடுகிறேன்" என்றான்.

அவர் உள்ளே சென்றதும், கட்டிலின் மீது உட்கார்ந்தான் சந்தர்.

"தாங்கள் ஏன் இவ்விடம் வந்தீர்கள்?"

"எப்பவந்தாலும் ஏன் வந்தாய் என்ற கேள்விதானா?"

"ஐயோ! கோபித்துக்கொள்ளக்கூடாது. உங்கள் நன்மைக்கே கேட்டுக்கொண்டேன். தாங்கள் இப்படி உட்காருவது தப்பு. தயவுசெய்து அந்த நாற்காலியில் உட்காருங்கள்" என்று சொல்லிவிட்டு, சுவர் ஓரமாக ஒட்டிப் படுத்துக்கொண்டாள்.

"எனக்கு எல்லாம் தெரியும். அதிகம் பேசினால் என் கைக்குள் நீ இருப்பாய் என்று" அவள் முகத்தில் தன் மூக்குப்படும்படி குனிந்து சொன்னான்.

"ஐயோ! என்னை இப்படி வதைப்பதில் ஒரு திருப்தியா!" என்று செல்லமாகக் கன்

னத்தில் தட்டினாள். காலடிச்சப்தம் கேட்கவே, நிமிர்ந்து உட்கார்ந்தான். பிறகு வெந்நீரை வாங்கி, தனது பைக்குள்ளிருந்து எதையோ எடுத்து அதனுள்ளிருந்த வெள்ளையான ஒரு பொடியை ஜலத்தில் கலக்கிய வண்ணம், "ஏன் பாபுஜி! நான் இப்படி உட்காருவது தப்பா?" என்றான்.

அவர்களில் இது அசம்பாவிதமல்ல என்ற நினைப்பில் "தப்பு ஒன்றுமில்லை, எங்களில் இது விஷயம் கொஞ்சம் பார்ப்பார்கள். ஆனால் நான் அவையொன்றையுமே கவனிக்கமாட்டேன். குந்தளம்! நான் இவ்விடமிருக்கும்பொழுது நீ பயப்பட வேண்டிய அவசியமே கிடையாது" என்றார்.

"சந்தருடைய துணிவான கேள்வியும், தனது தகப்பனாரின் பதிலும், அவளுக்கு அடங்காத நகைப்பை உண்டாக்கின. அவள் திரும்பி இருமுவதுபோல் சிரிப்பை அடக்கினாள். தான் தண்ணீரில் கரைத்ததைக் கையில் எடுத்துக்கொண்டு, "குந்தளம் வாயைத் திற" என்றான் சந்தர்.

"கையில் கொடுங்கள்" என்றாள்.

"காரமாக இருக்கும், நெடி அடிக்கும், நீ சாப்பிடமாட்டாய், வாயைத்திற" என்றான்.

"குந்தளம், அவர் சொன்னபடி கேள்" என்றார் கள்ளமறியாத தந்தை.

வாயில் வார்த்தான். அந்தச் சமயம், வாசலில் யாரோ கூப்பிட, "இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார் தந்தை.

"மருந்து மிகவும் காரம்தான். சந்தர்! இது என்ன தந்திரம், தாங்கள் அம்பாச்சாரியில் சாப்பிடக் கொடுப்பீர்களே! அந்தச் சர்பத்தைப் போலல்லவா இருக்கிறது. எங்கள் தகப்பனாரை இப்படியா ஏமாற்றுவது?" எனச் சிரித்தாள்.

"உஸ். பேசாமலிரு. முகர்ஜீவீட்டுப் பிள்ளையாதலினால் இந்த அனுமதி. வேறு யாரானாலும் நீ இருக்கும் திசையைக்கூடப் பார்க்க முடியுமா? பத்து நாள்களாக உன்னைப் பார்க்காமலிருப்பது என்னைச் சித்ரவதை செய்வது போலிருந்தது. உன் நிலைமையை முந்தாநாள் விபுல் சொன்னான். சிந்தனை செய்தேன். ஒரு வழியும் தோன்றவில்லை. கடைசியில் துணிவுடன் வந்தேன். எது நேர்ந்தாலும் ஏற்பதற்குச் சித்தமாகவே.... ஆனால் உன் தந்தையின் அன்பு என்னை ஆச்சரியத்தில் அமிழ்த்தி விட்டது."

"ஆஹா! உங்கள் அன்பை எவ்விதம் வெளியிடுவது என்பதற்கு வார்த்தையே அகப்படவில்லை. நான் பாத்திரவதியாகப் பிறந்திருக்கக் கூடாதா? என்றே என் மனம் ஏங்குகின்றது" என்று உணர்ச்சி மிகுதியினால் கண்களை மூடிக்கொண்டாள்.

"குந்தளம்! களைப்பாக இருக்கிறதா? ஏன் கண்ணை மூடுகிறாய்?"

"இல்லை. களைப்பில்லை. அன்பின் நெகிழ்ச்சி" என்றாள். அந்தச் சமயம் தந்தை வந்துவிடவே, சந்தர் எழுந்து நின்று, "பாபுஜீ! நான் சென்று வருகிறேன். வீட்டிற்குச் சென்று மற்றொரு மருந்து அனுப்புகிறேன், கொடுங்கள். குணமாகிவிடும். குந்தளம்! வரட்டுமா?" என்று விஷமச் சிரிப்புடன் சென்றான்.

சந்தரை வழியனுப்பிவிட்டுக் கூடத்துப் பக்கம் வந்தார் தந்தை. அந்தச் சமயம் முதல்நாள் எட்டு வருஷத்திற்குப் பின்பு அவ்விடம் வந்த அவரின் தங்கை லக்ஷ்மியும், மனைவி விசாலமும் ஏதோ பேசுவதைக் கேட்டுச் சற்று மறைவாக நின்றார்.

"இதைப் பாருங்கள் லக்ஷ்மி; நானும் 'கல்யாணத்தைப் பண்ணிவிடுங்கள்' என்று கரடியாகக் கத்துகிறேன். 'படிக்கட்டும் படிக்கட்டும்' என்று நாளை ஓட்டுகிறார். இப்படி ஆண்பிள்ளைகள் சிநேகிதம் நன்றாக இருக்கிறதா?" என்று, முடிக்குமுன்,

"கல்யாணமா? குந்தளத்திற்கா?" என்று ஆச்சரியத்துடன் கேட்கும் சமயம் அவ்விடம் வந்த தந்தை "இப்பொழுது என்ன முழுகிப் போய்விட்டது" என்று, "இப்பேச்சு" என்றார் கோபமாக.

"ஆமாம், என்மீது கோபப்படத்தான் தெரியும்? அருமை என்றால் அதற்கும் எல்லை வேண்டும். வயதுவந்த பெண், அதிகமாக வெளியில் போகவேண்டாமென்றால், உன்னை யார் கேட்டது, இந்த நாளில் இது சர்வ சகஜம். என் பெண்ணிற்குத் தன்னைக் காத்துக்கொள்ளும் சக்தி உண்டு. என்று சொல்லிவிடுவார். இன்று நீங்களே பார்த்தீர்களே. கட்டிலில் பக்கத்தில் உட்கார்ந்து, அவள் கையைப் பிடித்தவாறு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது?"

"சீச்சி! வாயை மூடு. கையைத் தொட்டுப் பேசிவிட்டதால் எல்லாம் கெட்டுவிட்ட

தாக்கும். அவர்கள் பழக்கம் தொடுவதால் தப்பிதம் என்பது கிடையாது. உங்களைப் போல், வினையில் முழுகும் மனிதர்களல்ல. கறந்த பாலும், அவர்கள் குணமும் சரி. இதைப்பற்றி ஏதாகிலும் தாறுமாறாகப் பேசினால் எனக்குக் கெட்ட கோபம் வரும்'' என்றார்.

''நன்னா கோபித்துக்கொள்ளுங்கள். என் கடமையைச் சொல்லத்தான் செய்வேன். லக்ஷ்மி நீங்கள் புறப்படுமுன் குந்தளத்திற்குக் கல்யாணத்தை முடித்துவிட்டுச் செல்லுங்கள்''

“என்ன அண்ணா! கல்யாணமா? எனக்கு ஒன்றும் புரியவில்லை. நீ என்ன செய்வதாகத் தீர்மானம் செய்திருக்கிறாய்?'' என்றாள்.

“நான் எதுவேண்டுமானாலும் செய்வேன். என்னிஷ்டம். அவள் என் குழந்தை. தாயற்ற என் செல்வத்தைக் கண்டபடி ஒருவரும் சொல்லவேண்டாம். விசாலம்! என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே. வாயை மூடிக்கொண்டு இருவரும் உள்ளே போங்கள்'' என்று கத்தினார்.

இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த குந்தளம் சந்தர் வரவினால் இதுமாதிரி விவாதங்கள் நடக்குமென்று எதிர்பார்த்தவளாகையினால், அதைப்பற்றி யாதொருவிதமான சஞ்சலமும் அடையாமல் சந்தரின் அன்பையும், அவன் அன்று வந்து தன் தந்தையைக் குழந்தைபோல் ஏமாற்றியதையும் நினைத்து அந்த ஆனந்தத்தில் மனதை லயிக்கவிட்டுக் கொண்டிருந்தாள். (தொடரும்)




Madras Stockists :—M/s. RAJAN DRUG STORES
155, Nyniappa Naick Street, MADRAS.

# "தெய்வமே! கண் இல்லையா"

**ஜி. எஸ். மணி**

கல்யாணமாகி ஏழு வருஷங்களாகியும் செல்லம் கர்ப்பம் தரிக்காமலே இருந்து வந்தது எவ்விதத்திலும் அவள் குற்றமல்ல; அவளது கணவன் டாக்டர் ஸுப்புரத்னத்தின் குற்றமுமல்ல. பாவம், அவர்கள் எப்படித் தவறுசெய்தவர்கள் ஆவார்கள்? வேறு ஒருவரையும் சொல்வதிலும் பயன் இல்லை. ஆயினும் தம்பதிகளுக்குப் 'பிள்ளை பிறக்கவேண்டும்' என்ற அபரிமிதமான ஆசை யென்னவோ இருக்கத்தான் செய்தது.

"இந்தக் காலத்திலே இன்று கல்யாணமென்றால் இன்றைக்குச் சரியாகப் பத்தாவது மாதத்திலே ஒரு குழந்தையைப் பெற்று வைத்துக்கொண்டு சீராட்டுகிறார்களே? கல்யாணமாகிறதும், உடனே வயிற்றில் பிள்ளையுண்டாகிறதும் எல்லோர் விஷயத்திலும் ஸர்வ ஸகஜமாயிருந்து வருகிறபோது நமக்குமட்டும்தானா அந்தப் பாக்கியம் இல்லை? அப்படி என்ன, மற்றப்பேர் செய்யாத பாவத்தை, நாம் மட்டும் செய்துவிட்டோம்? நினைவு தெரிந்தது முதல் உள்ளத்தாலும் ஒருவருக்கும் 'தீங்கு' எண்ணியது கிடையாதே? ஒரு வேளை ஜன்மாந்தர பாவம்தான் பின் தொடர்கிறதோ? இல்லாவிட்டால் அந்தப் பாழும் தெய்வத்திற்குத்தான் கண் அவிந்துவிட்டதோ?" நாள்தோறும் இதுதான் செல்லத்தின் தியானம்; இரவு பகலாக இதுவே அவள் ஆதங்கம்.

'பண்ணின பாவமோ' என்றெண்ணியதற்காகப் பிராயச்சித்தங்கள் பற்பலவும் செய்து பார்த்துவிட்டார்கள்; காசிக்குப் போனார்கள்; கங்காஸ்னானம் செய்தார்கள்! ராமேசுவரம் வந்தார்கள்; ஸேது ஸ்நானம் செய்தார்கள். பிள்ளைக் குழந்தையாகப் பிறந்தால் 'ராமநாதன்' என்று பெயர் வைப்பதாக வேண்டிக்கொண்டார்கள். இல்லாவிட்டால் பெண்ணாகவாவது வந்து பிறக்கட்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டார்கள். 'அன்னபூரணி' என்று நாமகரணம் செய்வதாக நினைத்துக்கொண்டார்கள்; 'பிதிர் சாப'மாயிருக்குமென்று யாரோ சொன்னதாகத் 'திலஹோமம்' செய்தார்கள்; ஸர்ப்ப சாபமாயிருக்கலாமோவென்று நினைத்து ஸர்ப்ப சாந்தி செய்து நாகப்பிரதிஷ்டையும் பண்ணினார்கள்—அவர்களது முன்னோர்களில் யாரோ போகும்வழியில், தெரியாமல் நல்லபாம்பின் வாலை மிதித்துவிட்டதாக, தெரிந்தவர் யாரோ கதை சொல்லியதின்பேரில்!

என்ன சாந்திசெய்தும் மனச்சாந்தி கிடைக்கவில்லை அவர்களுக்கு! ஏங்கித் தவம்கிடந்தார்கள் ஒரு குழந்தைக்காக.

இவ்வளவிற்கும் ஸுப்புரத்னம் ஒரு டாக்டர்தான்; சந்தேகமில்லை. ஆயிரம் பேர்களைக்கொன்றவன் அரை வைத்தியன் என்றால் ஸுப்புரத்னம் இரண்டாயிரம் பேர்களுக்கும் மேலாகவேகூட பிழைக்க வைத்திருக்கிறான்! அவனை 'டாக்டர்' இல்லை என்று எப்படிச் சொல்வது? 'அபார்ஷ'னுக்கென்றால் அவனுக்குச் சந்தேகமேயில்லாமல் மருந்து தெரியும்; ஆனால் பிள்ளையுண்டாகச் செய்வதற்கு மருந்து அவனுக்கு அவ்வளவாக நிச்சயமில்லாமல் இருந்தது; அவற்றின் பலாபலன்களில் நப்பிக்கையும் இல்லை. பெரிய 'ஆபரேஷனாகச்செய்து விஷப்பரீக்ஷை' பார்ப்பதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவேதான் அவனும் மருந்துகளின் உதவியைக் கைவிட்டுவிட்டு, தன்மனைவியுடன் சேர்ந்துகொண்டு, பிள்ளைவரத்திற்குத் தெய்வத்தின் சகாயத்தைத் தேடினான்.

என்ன பண்ணியும் பலன் கிடைக்காமலே போய்க்கொண்டிருந்தது. ஸுப்புரத்னம் செய்த சாந்திகள், ஜபங்கள் யாவும் பிரயோஜனமில்லாமல் போயின. அரசமரத்தைச்சுற்றிச் சுற்றி வந்த செல்லத்திற்கும் கால்களும், மனமும் ஒருங்கே ஓய்ந்தன.

எந்த விதமாகப் பிரார்த்தனைகள் செலுத்தப்பட்டுவந்தும் அந்தத்தெய்வம்தான் ஏமாறாமல் அந்தத் தம்பதிகளையே மேலும் ஏமாற்ற எண்ணியதோ என்னவோ!

— 2 —

"மலடி" என்ற சொல்லைக் கேட்கவே பயந்து நடுங்கினாள் செல்லம். வேறு யாரையாவது அப்படிக் குறிப்பிட்டால்கூட 'தன்னைத்தான் அவ்விதம் மறைமுகமாகச்

சொல்லுகிறார்களோ' வென்றெண்ணித் தனக்குள்ளாகவே மாய்ந்துபோவாள்.

"மாட்டுப் பெண் ஐந்து வருஷமாகியும் 'பிள்ளை யுண்டா'காமலே இருக்கிறாளே யென்று ரொம்பவும் அங்கலாய்ப்பாக இருந்தது. நல்ல வேளையாகப் பகவான் கண் திறந்து பார்த்தாரம்மா! அவள் வயிறும் திறந்தது" என்று யாராவது ஸாதாரணமாகப் பேசிக்கொண்டிருப்பதைச் செல்லம் அகஸ்மாத்தாகக் கேட்டுவிட்டால்கூட அப்படியே குன்றிப்போய் விடுவாள்; உள்ளத்தில் ஏக காலத்திலே, ஆயிரக் கணக்கான, கூர்மையுள்ள, ஈட்டிகள் சேர்ந்தாற்போல் செருகப்படுவதாக உணர்வாள். "மலடு" என்ற அச்சொல்லே அவளுக்கு, 'புத்' தென்று சொல்லப்படும் புத்திரப்பேறில்லாதவர்கள் போயடையும் அந்த நரகத்தை இந்த உலகத்திலேயே பிரத்தியக்ஷ பூர்வமாய், கைக்கு மெய்யாகக் காட்டிக்கொண்டு நின்றது. காலமாகிவிட்ட பிறகு போயடைவதாக நம்பப்படும் அந்தப் 'புத்'தென்ற நரகம் ஒருபுறம் கிடக்கட்டும்! இப்போது ஸாக்ஷாத்காரமாய் அவள் அனுபவித்துவரும் இந்தப் 'புத்'தைப் பற்றி என்ன சொல்ல?

அவளுடன் சேர்ந்துகொண்டு அவள் கணவனும்கூடக் குழந்தைக்காக ஏங்குவதை நினைத்துப் பார்த்ததும் செல்லத்திற்குப் 'புத்து' மனசாலும் நினைக்கவே முடியாத பெரிய 'மலை'யாகவே மாறிவிட்டது. செய்வதறியாமல் திகைத்துத் தவித்தாள். 'புத்'தினின்றும் மீள வழிதெரியாமல் விழித்தாள். வெகு நாளைய தீவ்ர யோசனைக்குப் பிறகு, ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பிறகு, தீர்க்கமான ஒரு முடிவிற்கு வந்தாள். ஸுப்புரத்னத்தின் ஜாதகத்திலே 'களத்திர தோஷம்' இருக்கிறதென்று யாரோ ஜோஸ்யன் எப்போதோ சொல்லியிருந்தது ஸமயத்திலே செல்லத்திற்கு ஞாபகம் வந்தது. அதையும் ஒரு மூலாதாரமாக வைத்துக்கொண்டு நன்றாக நிதானித்ததின்பேரில் அவள் ஒரு முடிவு கண்டாள்; கண்டதும் கொண்டாள். கிரியாம்சையில் கொண்டுவருவது அத்தனை எளிதல்ல என்பதையும் நன்றாய் அறிவாள்; ஆயினும் தெள்ளத் தெளிந்தாள். 'புத்'தியிருந்து மீளத் தனக்குத்தான் இனி வழியில்லை—அவனையாவது மீட்க எண்ணங் கொண்டாள்.........'களத்திர'மும் சேர்ந்து கொண்டது.........முடிவு செய்துகொண்டு விட்டாள். ஆயினும் அதுவரையில் வெறும் 'புத்'தாகக் காணப்பட்டது உண்மையில் ஸர்ப்பங்கள் மறைந்துகிடக்கும் விஷப்புற்றாக மாறிவிடாமல் இருக்கவேண்டுமே? அந்தக் கவலையும் செல்லத்திற்கு உள்ளூற இருக்கத்தான் செய்தது. ஆனாலும் காரண வேகத்திலே தான் செய்யும் காரியத்தை அறவே மறந்துவிட்டாள்.

— 3 —

ஸுப்புரத்னம் பிரமித்துப் போனான்.

"என்ன சொல்லுகிறாய் நீ செல்லா!" என்றான் தாங்கமுடியாத ஆச்சர்யத்தினால் வாயைப் பிளந்தபடி.

"என்ன இப்படி ஸ்தம்பித்துப் போய்விட்டீர்கள்! என் வார்த்தையை நன்றாக நம்புங்கள்!" என்றாள் செல்லம்.

"என்னால் நம்பவே முடியவில்லையே, செல்லா! வேறு யாரிடம் சொன்னாலும்கூட நம்பமாட்டார்கள். வாஸ்தவமாகக் கேட்கிறேன். விளையாடுகிறாயா? சோதனை செய்துபார்க்கிறாயா?"

"இல்லவே இல்லை. தெய்வம்தான் நம்மைச் சோதித்துக்கொண்டே இருக்கிறதே? இன்னம் என் பங்கிற்கு நான் வேறு உங்களைப் பரீக்ஷை பண்ணவேண்டுமா? நிஜமாகச் சொல்லுகிறேன். நான் இப்போது விளையாட வரவில்லை; நான் சொல்வது நிஜமே."

"நன்றாக யோசித்துத்தான் பேசுகிறாயா?"

"இனி யோசனைக்கே இடமில்லை."

"உன் வார்த்தைகளில் அடங்கியிருக்கும் ஆழ்ந்த அர்த்தத்தை அறிவாயா?"

"அந்த ஸந்தேகமே வேண்டாம் உங்களுக்கு"

"......................"

"மறுபடியும் ஒரு கல்யாணம் செய்துகொள்ளுங்கள்' என்று வாயால் வெகு சுலபமாகச் சொல்லிவிட்டாய்; அதிலுள்ள—அதனால் ஏற்படும்—கஷ்ட நிஷ்டூரங்களையெல்லாம்........."

"நன்றாய் உணர்வேன்! ஆனாலும் இப்போது நான் படும் அவஸ்தையைவிட வேறு எதுவும் எனக்குப் பெரியதே இல்லை. எதையும் நானே எப்படியாவது சஹித்துச் சமாளித்துக்கொண்டுவிடுவேன்."

"அப்படி யென்ன இப்போது உன் அவஸ்தை?"

"குழந்தையில்லாத குறைதான் பெரிய குறையாக இருக்கிறது; இதைவிட ஸ்திரீகளுக்கு வேறு அவஸ்தை என்னவேண்டும்?"

"குழந்தை ஜனிக்கும்போது படும் 'அவஸ்தை'கூடப் பெரிதில்லையாக்கும்!"

"அப்படியே நான் மறு கல்யாணம் செய்துகொள்வதானால் உன் குறை எவ்விதம் நிவிர்த்தியாகும்? உனக்குக் குழந்தை பிறந்துவிடுமா?"

"அவளுக்காவது பிறக்கட்டுமே? அதுமட்டும் என் குழந்தையாகாதா?

"இதெல்லாம் இப்போதைக்குப் பேசுகிற பேச்சு! வாய் வேதாந்தம்!"

"நான் அப்படியில்லை; எல்லாவற்றிற்கும் ஒரு விலக்கு உண்டு,"

"அப்படியா! ஆனாலும் நான் மறு கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை. அவ்விதத்திலாவது குழந்தை பிறக்க வேண்டும் என்கிற ஆசை எனக்கில்லை; அப்படிப் பிறக்கிற குழந்தை உன்னிடமேதான் பிறக்கட்டுமே!"

"பிறந்திருந்தால் இதற்குள் குறைந்த பக்ஷம் ஆறுவது பிறந்திருக்கவேண்டும்! இனிமேலும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் லாபமில்லை. அதனால்தான் சொல்லுகிறேன்."

"லாபம் வேண்டாமே! கிடைக்காத லாபத்தை எதிர்பார்த்து ஆசைப்பட்டுக் கொண்டு நஷ்டமடையவும், கஷ்டப்படவும் நான் விரும்பவில்லை."

"அப்படிச் சொல்லாதீர்கள், எனக்காக என் ஆசைக்காவது - நீங்கள் கட்டாயம் ..."

"இதென்ன பைத்தியமா உனக்கு, செல்லா? உலகத்தில் இல்லாத ஆசையாக இருக்கிறது உன் ஆசை; இப்படிப்பட்ட அபூர்வமான ஆசைகளெல்லாம், அநேகமாக, பூர்த்தியாகாமலே நின்றுவிடும் — முன்னே பின்னே தோன்றாத ஆசையல்லவா! எப்படியோ நிறைவேறுவதாக வைத்துக்கொண்டாலும் அதனால் ஆசைப்பட்டவர்களுக்குச் சந்தோஷம் கிட்டாமற் போய்விடும். மிஞ்சுவது ஆதங்கமும் அவல நிலையும்தான். வீண் பிரயாசைப்படாதே!"

"ஆசைப்படுவது நான்தானே? லாபமோ—நஷ்டமோ—அனுபவிக்க நான் தயார்!"




"அத்தகைய விஷப் பரீக்ஷைக்கு நான் தயாரில்லை. வேண்டாமென்றால் விட்டு விடேன்?"

ஆனால் செல்லம் அவனை விடவில்லை. அழுது, சிரித்து, எவ்விதமாகவோ ஸாஹஸம் செய்து கடைசியில் வெற்றியடைந்து விட்டாள்.

கடைசியில் மறு விவாஹம் செய்து கொள்ள ஸுப்புரத்னம் சம்மதித்தான். "பகவத் சித்தம் அப்படியானால் அதை ஒருவராலும் தடுக்கமுடியாது; நடக்கிறது நடக்கட்டும்" என்று சொல்லி மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டான்.

— 4 —

ஆனால்..............என்ன ஆச்சர்யம்!

ஸுப்புரத்னம் அந்த முடிவுக்கு வந்த மறு நிமிஷம் முதலே செல்லம், அதுகாறும் அவளுக்கிருந்த, மன அமைதியை இழந்து விட்டாளே! ஏன்? சிறுகச் சிறுக, அதி தீவிரமாயும், திடசங்கல்பத்துடனுமிருந்த அவள் உள்ளம், நிலைகுலையத்தொடங்கிவிட்டதே! ஏன்? ஸ்திரீ சுபாவம் தலை காட்டத் தொடங்கிவிட்டதோ?............

"ஏன் இப்படி அவசரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்துவிட்டோம்? இன்னும் கொஞ்சநாள் புத்தியை நிதானப் படுத்திக்கொண்டு அப்புறம் எது உசிதமென்று படுகிறதோ அப்படிச் செய்திருக்கலாகாதா?" என்று எண்ணலானாள். "அப்படித்தான் குழந்தையே நமக்குப் பிறக்காவிட்டால்தான் என்ன மோசம் போய்விட்டது? குடி முழுகினாலும்தான் முழுகிப் போகட்டுமே? நமக்குப் பிராரப்தம் எவ்வளவோ அவ்வளவுதானே கிடைக்கும்? 'அவர்' சொன்னதுபோல் அதிக ஆசை மோசம் செய்துவிட்டால்?" என்று நினைத்த பொழுது செல்லத்திற்கு அளவில்லாத துக்கமும் உண்டாயிற்று. "ஓர் உடலில் இரண்டு பாகமா! அதற்கும் நாமே சம்மதம் கொடுத்துப் பிரித்துக் கொடுப்பதா!" என்ற நினைவு 'பளிச்' சிட்டபொழுது மின்சாரத்தினால் தாக்கப்பட்டவள் போலே வெருண்டாள்; பேதை உள்ளம் சோர்ந்து போயிற்று......வாஸ்தவத்தில் இவற்றைப் பற்றியெல்லாம் அவள் ஏற்கனவே நன்றாக அலசி ஆராய்ந்த பின்னர்தான் அவனுடன் பேச்சை ஆரம்பித்தாளா?............ 'பாகம்! ஓர் உடலில் இரண்டு பங்கு!' என்கிற எண்ணம் அவளை அடுத்தடுத்துத் தாக்கி மனதைச் சொல்ல முடியாதபடி வாட்டவும் ஆரம்பித்துவிட்டது. இது என்ன மனோநிலை? இதில் என்ன தத்துவம் அடங்கியுள்ளது?.........

களத்திர தோஷ ஞாபகம் திடீரென்று வந்தது செல்லத்திற்கு.........

அதுமட்டும் உண்மையாகுமானால்?......... நிஜமாகவே பலிக்குமென்றால்.........?...... அப்போது செல்லம் செய்யும் காரியம் முற்றிலும் சரியே!......அவள் பூரண மன நிம்மதியுடன் சாவை எதிர்பார்க்கலாம்......சீ!... இதென்ன பிரமை!.........

எப்படியோ? 'சுக்லாம் பரதம்' குட்டிக் கொண்டு ஸங்கல்பமும் செய்துகொண்டாகி விட்டது; இனிப் பின் வாங்கலாமா?......... அதுவும் அவள்?......அதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு......?......வேண்டாம்!... ......ஆரம்பம் செய்தாகிவிட்டது; எப்படியும் முடித்துவிட்டுத்தான் மறு காரியம்; மறுயோசனை ஏதாவதிருந்தால்!......பலாபலன்களைப் பற்றி இனியேன் கவலை?...... 'பெண்புத்தி பின் புத்தி' என்பது புருஷர்களின் கற்பனைதானே. என்னவோ?......... அவள் விஷயத்தில் உண்மையாகிவிட்டது! .........எப்படியும் நல்லதை நினைத்துத்தான் அவள் அம்மாதிரி ஸங்கல்பித்துக்கொண்டாள்......தெய்வ ஸங்கல்பம் எவ்விதமோ ஆகட்டும்?.........அப்போதே 'வேண்டா'மென்று தடுத்துப் பலவிதத்தில் மறுத்தாரே?......பேசாமலிருக்கக் கூடாதா?...... ஈச்வரா! நீஎன்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறாயோ? உன் திருவுள்ளம் எப்படியோ?............

'இப்படித்தான்' என்பதுபோல் 'அவள்' வந்தாள்; ஸுப்புரத்னத்திற்கு குழந்தையில்லாக் குறையைத் தீர்க்கவென்று மறு தாரமாக வாழ்க்கைப்பட்டாள்! அவள் பெயர் ஸுந்தரி.

செல்லத்திற்குப் பேச வாயில்லாமற் போய்விட்டது. அழுகையும் ஆத்திரமும் சீறிக்கொண்டுவந்தன. ஆயினும் வெளிக்காட்ட வழியில்லாமல் அடக்கிக்கொண்டு தவித்தாள். யானை தன் தலையில் தானே மண்ணை வாரியிறைத்துக்கொண்ட கதையாகிவிடுமோவென்று பயந்து நடுங்கினாள். உள்ளம் பொருமிக்கொண்டு கிடந்தது; அலை பாய்ந்து கொந்தளித்தது. ஆயினும் என்ன செய்வாள்? பழைய உலகத்தைக் கடல் விழுங்குவதைக் கல்லுக்குள்ளே கிடந்து ஸாக்ஷி பூதமாகப் பார்த்துக் கொண்டு நின்ற கன்யாகுமாரியைப்போலே

நடப்பதெல்லாவற்றையும் வாய் பேச முடியாமல் எதிரில் நின்று கவனிக்கும் மௌன சாக்ஷியாக ஆனாள்.

— 5 —

ஸௌந்தரியின் சுந்தர ரூபத்திலே மனசைப் பறிகொடுத்தான் ஸௌப்புரத்னம். இளைய தாரத்தின் திருவிளையாடல்களிலே உள்ளத்தை நழுவவிட்டான். ஸகஜம்தானே?

புதுவெள்ளம் வந்து ஆற்று மணலில் படிந்துகிடக்கும் பழைய சுவடுகளையெல்லாம்கூட அடித்துக்கொண்டு போய் விடுவதுபோலே ஸௌந்தரியின் புது வரவு பழைய சம்பவங்களையெல்லாம் மறைத்தே விட்டது. எல்லாவற்றையும்—எல்லாரையும், அவள் தன் காலடிக்குள்ளே அமுத்திக் கொண்டாள். அவளது யதேச்சாதிகாரம் ஆரம்பமாகியது. எதிர்பார்த்ததுதானே?

ஸௌந்தரியின் சௌந்தர்யத்திலே தன்னையே மறந்தான் ஸௌப்புரத்னம்; சுற்றுப்புறத்தை எங்கே கவனிக்கப்போகிறான்? அவளது மோஹனச் சிரிப்பில் மயக்கம் கொண்டான்; செல்லத்தின் வாடிய வதனத்தை ஏன் பார்க்கப்போகிறான்? ஸௌந்தரியின் சரசப்பேச்சுக்களிலே 'ஸ்வர்க்கானுபவத்தை' அடைகிறான்! அவனது அந்த ஸந்தோஷத்திற்கெல்லாம் காரண பூதம் யார் என்பதை எப்போதாவது எண்ணிப் பார்ப்பானா? அவனது அத்தகைய ஆனந்தத்திற்கெல்லாம் காரணமாகி, தனது இஹலோக பாத்யங்களையும் சுக சௌக்யங்களையும்கூடக் கவனிக்காமல் தன்னலமற்று, தனது ஸர்வத்தையும் அவனுக்காகத் தியாகம்செய்யத் துணிந்த அந்தப் 'பதிவ்ரதா சிரோமணி'யைப்பற்றி அந்தக் குளிர்ந்த சமயங்களில் எள்ளளவாவது நினைத்துப் பார்த்திருப்பானா? இனி செல்லத்தின் நினைவு-அவளைப்பற்றிய சிந்தனை-இதெல்லாம் ஸௌப்புரத்னத்திற்கு ஏன் வரப்போகிறது? அவனுக்கென்ன பைத்தியமா! உலகம் அப்படித்தான். ஆம்; வாழ்க்கையின் போக்கே அதுதான்; இயற்கையின் நியதியும் வாழ்வை அனுசரித்ததே.

செல்லமும் இதையெல்லாம் நன்றாய் அறிவாள்; அறிவதென்ன? என்று ஸௌந்தரி ஸௌப்புரத்னத்திற்கு வாழ்க்கைப்பட்டாளோ—அதாவது அவள் வாழ்க்கைப்படுவதைச் செல்லம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு நின்றாளோ, அன்றே அவன் இனித் தன் கணவன் இல்லையென்று தனக்குள்ளாகவே தீர்மானம் செய்துகொண்டு விட்டாள். ஆகவே அப்புறம் நடந்த வாழ்க்கை நாடகங்கள் எல்லாம் அவள் ஏற்கனவே எதிர்பார்த்தவைதான்.........

இனி?.........இனி செல்லத்தின் கதி?......

ஸௌந்தரிக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்வதென்பது அவளால் ஒரு நிமிஷம்கூட முடியாத காரியம். அதே சமயம் ஸௌந்தரி இட்டதுதான் சட்டமென்று இருக்கக்கூடாதென்று சொல்லுவதும் நடக்காத காரியம். இருவருமே ஒருவருக்கொருவர் ஒத்துப்போகிறதாயிருந்தால் வாழ்க்கையை ஆனந்தமயமாகவே பார்த்துவிடலாம். ஆனால் அனுஸரிக்கும் ஸ்வபாவம் ஸௌந்தரியிடம் அணுவளவுகூடக் காணப்படவில்லை; அவளிடம் எதிர்பார்ப்பதுகூடத் தவறுதான். ஆயினும் தானே இடம் கொடுத்து அழைத்தவளிடம் தானே குனிந்து கொடுத்து வணங்கி இன்னும் அதிக இடம் கொடுக்கச் செல்லத்திற்குத்தான் மனசு வருமா? இவ்விதம் நிலைமை இருக்கையில் எங்ஙனம் ஒத்துப்போவது? எதில் அனுசரிப்பது? யார் அனுசரிப்பது? நன்றாக யோசித்துப் பார்க்கையில் தவறு முழுவதும் செல்லத்திடம்தான் என்பது நிதர்சனமாய் விட்டது. ஆம்; தவறு செய்தவள் செல்லம் தான்! இந்தத் தர்மசங்கடத்திற்கெல்லாம் மூலகர்த்தா அவளே தானே?............

இந்த லக்ஷணத்தில் எந்த ஓர் ஆசைக்காக அவள் பலவருஷங்கள் தவங்கிடந்து, ஏங்கி, எதிர்பாராத காரியத்தை எல்லாம்கூட, ஒரு பைத்தியத்தைப் போலே, செய்ய ஆரம்பித்தாளோ, அந்த ஆசை, அத்தனை வருஷங்களுக்குப் பிறகு, அவளிடமே பலித்திருப்பதாகவும் தோன்றியது. எந்த ஒரு வரத்திற்காகத் தெய்வத்திடம் அல்லும், பகலும், மனமுருகி, மன்றாடிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாளோ, அந்த அரிய பெரிய வரத்தை, காலம் கடந்து, சமயம் தவறி, சந்தர்ப்பமும் தவறிய பிற்பாடு, பகவான் மனமுவந்து, அவளுக்கு அளிக்கமுன்வந்திருப்பதாகத் தோன்றியது............

செல்லம் ஐந்தாறு மாதங்களாகவே 'ஸ்நானம்' செய்யாமல் இருந்தாள்! ஸௌந்தரி அவனுக்கு வாழ்க்கைப் படுவதற்குச் சில நாட்கள் முன்னதாகத்தான், 'தான்' கர்ப்பம் தரித்திருக்கவேண்டுமென்பதை உணர்ந்துகொண்டாள், செல்லம்!

ஈச்வரா! இதென்ன சோதனை! என்ன தர்ம சங்கடம்! என்ன கஷ்டகாலம்! இதன் முடிவு எப்படியாகுமோ? 'காலம் தவறிய' பிறகு கர்ப்பவதியாகி இருக்கிறாளே!

சங்கதியை அறிந்த சுப்புரத்னத்திற்கும் தூக்கிவாரிப்போட்டது. "பார்த்தாயா? ஆத்திரக்காரிக்குப் புத்திமட்டு! அப்போதே பேசாமல் இருந்துவிட்டால்? இப்போது வந்து சொல்ல வருகிறயே! அசுயையோ! மூஞ்சியைப்பார் மூஞ்சியை, தூ!" என்று செல்லத்தைத்தான் கடிந்துகொண்டான்.

செல்லத்திற்குச் சொல்லமுடியாத துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்தது. "இதற்காக இப்போது உங்களை ஒன்றும் செய்யச் சொல்லவில்லை நான், விஷயத்தைத்தான் சொல்லவந்தேன்; அவ்வளவுதான். நானும், என் வயிற்றில் இருக்கும் சிசுவும் எப்படியாவது போகிறோம். அந்தக் கவலை உங்களுக்கு வேண்டவே வேண்டாம்!" என்று அழுதாள்.

சுந்தரிக்கும், செல்லத்திற்கும் இடையே மனக்கசப்பு பெருகிக்கொண்டே வந்தது.

— 6 —

அன்று சுந்தரி பக்கத்து வீட்டுக்காரியுடன் சினிமாவுக்குப் போயிருந்தாள். சுப்புரத்னம் வெளியில் ஏதோ ஒரு கேஸைக் கவனித்துவிட்டுக் களைப்புடன் வீடுவந்து சேர்ந்தான்.

சமயம் பார்த்துச் செல்லம் பேச்சை ஆரம்பித்தாள்.

"எனக்கும், இவளுக்கும் இனிமேல் கொஞ்சம்கூடச் சரிப்பட்டு வராதென்று நினைக்கிறேன்" என்று தொடங்கினாள்.

"எதிர்பார்த்ததுதானே?" என்றான் சுப்புரத்னம் அஸ்வாரஸ்யமாக.

"இரண்டு பேரும் ஒத்துக் குடித்தனம் செய்யலாமென்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன்; வெறும் மனப்பால்தான் போலிருக்கிறது. ஒன்று—அவள் வெளியேறவேண்டும்; அல்லது—நான் போகவேண்டும்."

சுப்புரத்னம் மௌனமாகச் செல்லத்தை நோக்கினான். அவள்தான் தொடர்ந்தாள்: "அவள் போகிறதென்பது இனி நடக்காத காரியம்; நான் அதை எதிர்பார்க்கவுமில்லை; விரும்பவுமில்லை. இந்த வீட்டில்—இந்தக்


# இந்தியன் பாங்கு லிமிடெட்

"இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட் திருவல்லிக்கேணி மயிலாப்பூர்
மவுண்ட் ரோடு தியாகராயநகர் புரசைவாக்கம்

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ... | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் .... ... | ரூ. 33,66,622 |
| ரிஸர்வ் நிதி ... ... ... | ரூ. 35,00,000 |
| டிபாஸிட்டுகள் ... ... | ரூ. 12½-கோடிக்குமேல் |

எல்லாவித பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்

N. கோபால அய்யர்,
செக்ரடரி.

குடும்பத்தில்—வந்திருக்க நானே அவளுக்கு முதன்முதலில் இடம் கொடுத்தேன். உங்கள் உடலிலும் சரி பாதியைப் பிரித்துக் கொடுத்ததாக நினைத்துக்கொண்டேன்; அதன்மூலம், மற்றப்பெண்மணிகள் செய்யக் கனவிலும் விரும்பாத, பெரியதொரு தியாகத்தை நான் செய்துவிட்டதாகவெண்ணிப் பூரித்துப்போனேன். பிரதிபலனாக அவள் உங்கள் உள்ளம் முழுவதையுமே கவர்ந்து கொண்டுவிட்டாள். போகிறதென்று விட்டு விட்டேன். உங்கள் முகதரிசனம்கூட எனக்குக் கிடைக்கக் கூடாதென்று இப்போது சதி செய்துகொண்டிருக்கிறாள். உங்களை விட்டேன்; உங்கள் உள்ளத்தைவிட்டேன்; அதிகாரத்தையும் பாதி விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கிறேன்; ஆனாலும் அதிக ஆசைப்படுகிறாள்! எனது ஸர்வத்தையுமே பிடுங்கிக்கொள்ள ஆவல் உள்ளவளாய் இருக்கிறாள். எனக்கும் விட்டுக்கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. கொஞ்சம் கொஞ்சமாகப் பறிகொடுத்துக்கொண்டிருப்பதைவிட, நானே ஓரேயடியாக, எல்லாவற்றையுமே ஒழித்துக் கொடுத்துவிட்டுப் போகத் தீர்மானித்துவிட்டேன். போய் வருகிறேன்" என்றாள்.

அவளுக்கு ஆறுதலாக ஒரு வார்த்தை சொல்லவில்லை ஸுப்புரத்னம்; அவளிடம் பிரியமாக ஒரு பேச்சுப் பேசவில்லை. அன்புடன் கூடிய ஒரு பார்வையைக்கூட வீசவில்லை அவள்பக்கம்." 'எங்கே போவாய்?" என்று மொட்டையாக அவளைப் பார்த்துக் கேட்டான்,

"வேறெங்கேதான் போகப்போகிறேன்? சாக்கடைக்குப் போக்கிடம்? போயும் போயும்பிறந்த வீடுதான்"என்று சொல்லிச் சிரித்தாள். உணர்ச்சியற்ற வறண்ட சிரிப்பாக இருந்தது.

"எல்லாம் உன்னால் வந்ததுதான்!" என்றான் ஸுப்புரத்னம் "நான் அப்போதே சொன்னேனே, கேட்டாயா?......... 'எல்லாம் எனக்குத் தெரியும், நான் எதையும் சமாளித்துக்கொள்வேன்' என்றெல்லாம் அப்போது உளறினாயே?"

"ஆமாம், ஸமாளிக்கும் சக்தியிருப்பதாகத்தான் எண்ணினேன்; முடியவில்லை. இப்போதுகூட, அதற்காக நான் உங்களை ஒன்றுமே குற்றம் சொல்லவில்லை. ஆனால் என் தலையெழுத்தை அனுபவிக்கத் துணிந்துவிட்டேன்."

"உன் முட்டாள்தனத்தை — நீ செய்த முட்டாள்தனத்தின் பலனை — என்று சொல்; பாவம்!" என்று திருத்தினான் ஸுப்புரத்னம். "நான் இப்போது ஒன்றுமே சொல்லவும் முடியாத — செய்யவும் முடியாத ஒரு நிலையில் இருக்கிறேன் என்பதை அறிவாயல்லவா?"

கோவில் கட்டிவைத்துக் கும்பிடத்தகுந்த அவளுக்கு அவன் செய்யும் பிரதியுபகாரம் இவ்வளவுதானா? உலக இயல்பு எப்பேர்ப்பட்ட மனத்தையும் உருக்கக்கூடிய சமய சந்தர்ப்பங்களில்கூட இத்தனை கேவலமாகத்தான் போகுமா? அந்தத் தெய்வத்திற்குக் கூடவா கண் இல்லை? உலகத்திற்குத்தான் கண் அவிந்துவிட்டதென்றாலும் தெய்வத்தின் கண்கூடவா அவிந்துவிட்டது?

செல்லத்தின் மனம் கசந்து போயிற்று. கண்களில் நீர் மல்கிப் பார்வையை மறைத்தது. "உங்களிடம் யாதொருவிதமான உபகாரத்தையும் எதிர்பார்த்துக்கொண்டு நான் இப்போது இங்கு ஏங்கி நிற்கவில்லை. விஷயத்தைத் தெளிவுபடுத்தியதற்காக ரொம்ப வந்தனம். நான் போய் வருகிறேன். குழந்தை பிறந்து ஆயுஸோடு இருந்தால் கடிதம் எழுதுகிறேன். நமஸ்காரம்" என்று சொல்லிக் கைக்கூப்பினாள்.

— 7 —

மனசு மிகவும் நைந்துபோய்ப் பிறந்தகம் வந்து சேர்ந்த செல்லத்தை உலகம் அதன் பங்கிற்கு மேலும் துன்புறுத்தியது. "புருஷன் வேண்டாமென்று இவளைத் தள்ளி வைத்துவிட்டு வேறு விவாஹம் செய்துகொண்டுவிட்டானாம்" என்றது. "பின்னே? குழந்தை பெறாதவளைக் கட்டிக்கொண்டு எத்தனை காலம்தான் அழுவது? அதுதான் மலட்டுப் பிணம் வேண்டாமென்று ஒதுக்கி விட்டான்; நியாயம்தானே?" என்றது. "அவன் பேசாமல் இருந்தவரையில் இதுவும் பேசாமலே இருந்துவந்தது; அவன் மறு கல்யாணம் செய்துகொண்டதும் இதுவும் வயிற்றைத் துருத்திக்கொண்டு விட்டதாமே" என்று சிரித்தது. "என்ன கர்மமோ? தரித்திரப்பிடை! நடத்தை சரியில்லையோ, என்ன இழவோ?" என்று அபாண்டமாய்ப் பழி சுமத்தியது.

செல்லத்திற்கு ஏற்கனவே புண்பட்ட உள்ளம்; அத்துடன் இத்தகைய ஊர்வம்பு அவள் நெஞ்சை மேலும் மேலும் 'செல்' அரிப்பதுபோல் அரித்தது. "இப்படி அநியாயமாய்ப் பேசுகிறவர்கள் வாயெல்லாம் புழுத்து நெளியாதா?" என்று உள்ளூற வெதும்பினாள். செல்லத்திற்காகப் பச்சாத்தாபப்படுகிறவர்கள் ஒருவருமே இல்லை.

தெய்வமே இரங்கவில்லையே; குரூர உலகமா இரங்கப்போகிறது?.........

பாழும் உலகில் செல்லம் இன்னும் ஏன் உயிர் வாழவேண்டும்? பொல்லாத உலகில் அவள் இன்னும் எதற்காகக் காத்திருக்க வேண்டும்? சாரமற்ற வாழ்க்கை அவளுக்கு இதைவிடக் கொடூரமாகக் கொடுக்க வேறென்ன வைத்திருக்கப் போகிறது? சொற்ப காலத்திற்குள் வாழ்க்கையின் சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் உணர்ந்து விட்டாள்; நன்றாக அனுபவித்தும் விட்டாள்......... இனி?.........

இனி, செல்லம் சாவை எதிர்பார்க்கவேண்டியதுதான்; பயங்கரங்கள் நிறைந்த பேயுலகத்தை விடுத்து, பூரண மன நிம்மதியைக் கொடுக்கக்கூடிய வேறொரு சாந்திலோகத்தை நாடவேண்டியதுதான்.

செல்லமும் அதற்குத்தான் ஆசைப்பட்டாள். அநேகமாக அந்த முயற்சியிலாவது முன்கூட்டியே வெற்றியைக் காணலாமென்று கனவு கண்டாள்.

காரணம்: கணவனின் ஜாதகத்தில் இருப்பதாக நம்பப்பட்ட களத்திர தோஷம் தான்! அது உண்மையானால் செல்லம் சாவதும் உண்மையே! — அதாவது சாகப் போவதும் நிஜமே.

சாவு எப்படி ஊர்ஜிதமாகும்? சாவை எவ்விதம் நம்புவது? ஆம்; வாஸ்தவம்! ஆனால் அதற்கும் சரியான காரணம் கையிலேயே இருக்கிறது! அதாவது:

செல்லம் அப்போது பூரண கர்ப்பிணி! ஸ்திரீகளுக்குப் பெற்றுப் பிழைப்பது என்பது புனர் ஜன்மம்தானே? செல்லமோ பிரசவிக்க இருக்கிறாள்? கணவனுக்குக் களத்திரம் உண்டென்பது உண்மையாக இருக்கும்பக்ஷத்தில் 'அது' கட்டாயம் அவளை அடித்துவிடுமே? ஆம்; அடித்துத் தான்விடும், அடித்தேவிடும்;.........

ஜோஸ்யனே 'களத்திர தோஷம் உண்டு' என்பதை ஸர்வ நிச்சயமாய்ச் சொல்லியிருக்கிறான்; ஆகவே அவள் இறப்பதும் ஸர்வ நிச்சயம்தான்!

அவள் மரிப்பதற்கு முன்பு அவளாகவே பார்த்து அவனுக்கு இன்னொரு கல்யாணத்தையும் செய்துவைத்துவிட்டாள்; அந்தப் பெருமை கட்டாயம் அவளையே சாரும்; இப்போது சொல்லாவிட்டாலும் அவளைப் பற்றி வாயில் வந்தபடி பேசியபோதிலும் அப்புறம் அவள் இறந்தபிறகு, அதைப் பற்றிக் கட்டாயம் புகழ்ச்சியாகத்தான் பேசிக்கொள்வார்கள். அவள் சாவிற்காக மனப்பூர்வமாகத் துக்கிப்பார்கள். கணவனும் வருந்துவான்; அவளது பெருந்தன்மைக் குணத்தைக்கண்டு மயிர்சிலிர்ப்பான். அப்போது குழந்தை குட்டிகளும் ஏராளமாகப் பிறந்திருக்கும் அவனுக்கு. இப்போது 'இவளு'க்கே பிறக்கப் போகிறதே! 'அவளு'க்குப் பிறக்கக் கேட்பானேன்? அப்புறம்...... ஸௌந்தரி உள்பட செல்லத்தை யாவரும் தெய்வமாகவே மதித்துப் போற்றுவார்கள். இப்போது கிடைக்காதது, அப்புறமாய் இவள் காலமானபிறகு, இரட்டிப்பு மடங்காகக் கிடைத்துத்தான் என்ன? கிடைக்காமற்போனாலே யென்ன? அதனால் அவளுக்கென்ன பிரயோஜனம்? இருக்கும் வரையில் சிந்துவார் இல்லை; அவள் பக்கம் பிரியமாய்த் திரும்பிப் பார்ப்பவர் இல்லை; அவளுக்காக ஒரு பெருமூச்சு விடுபவர்கூட இல்லையே?.........

ஆகவே...... இப்போது அவளுக்கு வேண்டியது என்ன? அவள் வேண்டுவது யாது?... சாவு! மரணம்!...... சாவுதான்!... மரணம் தான்!...... ஓ! சாவே! வரமாட்டாயா?...... பகவானே! வேறொன்றையும்தான் காலத்தில் கொடுக்கமாட்டேனென்று மறுத்துவிட்டாய்? மரணத்தையாவது கொடேன்!...,.. ஆனால்...... இப்போது செத்தால்கூட...... அதுவும்தான்...... 'அகால மரணம்' என்று சொல்லப்படுமோ, என்னவோ!....... ஈசுவரா!...... தெய்வமே!......... அவள் படும் கஷ்டத்தை—அவஸ்தையை — கண் திறந்து பார்க்கமாட்டாயா?......

இப்படி என்னென்ன வெல்லாமோ இடைவிடாமல் யோசித்தபடியே, கொல்லைப்புறமிருந்த கிணற்றடியில், துணி துவைக்கும் கல்லின்மீது உட்கார்ந்து கொண்டு, வானவெளியை அண்ணாந்து பார்த்துக்கொண்டேயிருந்தாள் செல்லம்.

நன்றாக இருட்டிவிட்டது. ஆகாய வீதியிலே கோடிக்கணக்கான தாராகணங்கள் ஏககாலத்தில் பைத்தியம் பிடித்ததுபோலே கண்ணைத் திறந்து திறந்து மூடிக்கொண்டிருந்தன. அவற்றின் நடுவே யிருந்து, செல்லம் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஒரு நக்ஷத்திரம் திடீரென்று, இடம் விட்டுப் பெயர்ந்துவிழுந்தது. பூமியை நோக்கிப் பாய்ந்துகொண்டு அதிவேகமாகத் தலைகுப்புற விழவிழ அதன் ஒளி அதிகப்பிரகாசமாய் மாறிக்கொண்டே வந்து, கடைசியில் கண்களைப்பறிக்கும் ஜ்வலிப்புடன் ஒரு க்ஷணம்

சுடர்விட்டுப் பிரகாசித்து, 'படுக்'கென்று அணைந்து மறைந்தது.

செல்லத்தின் தலை சுழன்றது; கண்கள் மங்கின; உடம்பெல்லாம் திடீரென்று வெல வெலத்து வந்தது; அவளுக்கு மயக்கம் வருவதுபோல் உணர்ந்தாள்............ மறு க்ஷணம் அப்படியே மல்லாந்து சாய்ந்துவிட்டாள். அவள் கையும், காலும் ஒரு பக்கமாய் வலித்து வலித்து இழுத்தது; மறு க்ஷணம் அதுவும் அடங்கிவிட்டது.

அவளைத் தேடிக்கொண்டே, கூவியழைத்தபடி கொல்லைப்புறத்தில் வந்து பார்த்த அவள் தாயார், கிணற்றடியில் தன் பெண் கிடந்த அலங்கோலமான நிலையைக் கண்டு, உடல் பதறி, 'குய்யோ, முறையோ' வென்று அலறியழுதாள்.

— 8 —

செல்லத்திற்கு 'ஹிஸ்டீரியா' என்று சொல்லிக்கொண்டனர். ஆரம்பத்திலேயே நசுக்கிவிடுவதுதான் உத்தமம் என்று பேசிக்கொண்டனர். பெற்றோர் ஏதோ கொஞ்சம் சுமாரான செல்வம் படைத்தவர்களாகையால் செல்லத்தையும் கூடியவரையில் நன்றாகவே கவனித்துவந்தனர். டாக்டர் வந்து 'ஊசி மருந்து' போட்டுக்கொண்டிருந்தார்.

மிகுந்த பலவீனமான நிலையிலே செல்லம் பிரசவிக்க இருந்தாள். பெற்றோர் வயிற்றில் நெருப்பைத்தான் கட்டிக்கொண்டிருந்தனர். வேண்டா வெறுப்பாக ஸப்புரத்னத்திற்கு தந்தி கொடுக்கப்பட்டது; விவரமான கடிதம் ஒன்றும் எழுதப்பட்டது.

ஒன்றுக்கும் அவனிடமிருந்து பதிலே இல்லை; அவன் புறப்பட்டு வருவதாகவும் காணோம். அவன்மீது யாவருக்குமே வெறுப்பு விஷமென ஏறியது.

செல்லம் பிரசவித்தாள். குழந்தை செத்துத்தான் பிறக்குமென்றே எல்லோரும் எதிர்பார்த்தார்கள்; வயிற்றிலேயே சிசு மரித்திருக்குமென்று எண்ணினார்கள். ஆனால் யார் செய்த பூஜாபலனோ குழந்தை உயிருடன் ஜனித்தது; பார்வைக்கு நன்றாகவும் இருந்தது; ஆண் குழந்தையாகவும் விளங்கியது.

டாக்டர், நர்ஸ் உள்பட எல்லாருக்குமே ரொம்ப சந்தோஷமாய்விட்டது; அதியாச்சர்யமாகவுங்கூடத் தோன்றியது. யாவரும்


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷங்காலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு

ஒருமுகமாக, "எல்லாம் தெய்வானுகூலம்" என்று சொல்லி ஆனந்தமடைந்தார்கள்.

ஆனால் செல்லம்தான் பிரேதம்போல் ஆய் விட்டாள். உயிர் இருக்கிறதோ, இல்லையோ வென்றுகூட ஸந்தேகப்படும்படி ஆகிவிட்டது அவள் உடல்நிலை. 'குழந்தைக்கு உயிரைக் கொடுத்த தெய்வம் தாயின் உயிரை எங்கே பறித்துக்கொண்டுவிடுமோ'வென்று கூட எல்லாரும் பயந்துபோனார்கள்.

மெல்லிய இழைபோல் மூச்சு ஓடிக்கொண்டிருந்தது அவளுக்கு. எந்த நிமிஷம் அதுவும் நின்றுவிடுமோ என்று கதி கலங்கியபடி இருந்தார்கள். என்ன இருந்தாலும் பெற்ற பாசம் விடுமா? ரத்தக் கலப்பல்லவா? அதிக ஜாக்ரதையுடனே கவனித்து வந்தார்கள்; தெய்வத்தை நோக்கிப் பிரார்த்தனைகள் பல பண்ணிக்கொண்டார்கள்.

செல்லம் மிகவும் கஷ்டப்பட்டாள்; தாங்கமுடியாத அவஸ்தை அடைந்தாள்; ஜன்னி கண்டது; இரவு பகலாக, "களத்திரம், களத்திரம்" என்று என்னவோ பிதற்றினாள்; யமனுடன் வாதாடினாள்; மரணத்துடன் போராடினாள்; தெய்வத்திடம் மன்றாடினாள். அவள் நிலைமைகாணச் சஹிக்க முடியாதது; கேட்கப் பொறுக்கமுடியாதது.

கவலையும், கஷ்டமும் மிகுந்த நாட்கள் ஒன்று ஒன்றாக வந்துவந்து போய்க்கொண்டேயிருந்தன. வேதனையும், விசனமும் நிறைந்த நாட்கள் பல நிற்காமல் ஓடிக்கொண்டே போயின.........

மூன்று மாதங்கள் வாழ்க்கையின் வழியிலே மிதந்து சென்றன. செல்லத்தின் கவலைக்கிடமான நிலை சற்றே மாறியது. இனி அபாயம் இல்லையென்றாலும் அசதி இருக்கத்தான் செய்தது. உடல் நலிவு அப்படியேதான் இருந்தது. மரணத்தின் வாசலைக் கடந்துவிட்டாளென்றாலும் மன வலிவை இன்னும் அடையவில்லை. கஷ்டங்களைக் கணக்கில்லாமல் அனுபவிக்கும் அவள் தலையிலே பிரமன் ஆயுளைமட்டும் கெட்டியாக எழுதிவிட்டானே!

"குற்றாலம் போயிருங்கள் கொஞ்சகாலம். அப்படிச் செய்தால்தான் உங்கள் பெண்ணின் உடல் நலம் திரும்பும்; மன அதிர்ச்சியும் நீங்கித் தென்பு உண்டாகும்; குழந்தையும் பிழைக்கும். இல்லையோ—அப்புறம் என்னைக் குற்றம் சொல்லக்கூடாது!" என்று கடைசியாக ஒருநாள் தீர்மானமாகச் சொல்லிவிட்டார் குடும்ப டாக்டர். கடைசியிலே எச்சரிக்கையும் கொடுத்திருக்கும் போது, செல்லத்தின் பெற்றோர்களால் எப்படிச் சும்மா இருக்கமுடியும்?

செல்லத்தையும் அழைத்துக்கொண்டு குற்றாலம் போய்ச் சேர்ந்தார்கள்.

— 9 —

உண்மையாகவே குற்றாலத்தின் குளுகுளுப்பு மனதிற்கு ரம்யமாக இருந்தது. அகண்டமான அந்த நீர்வீழ்ச்சி எப்படிப்பட்ட அலை பாயும் உள்ளத்தைக்கூட அடங்கச் செய்துவிடும். அடுக்கு அடுக்கான மலை வரிசைகளும், எங்கும் தவழும் பசுமைக் காட்சிகளும் கொந்தளிக்கும் மனதிற்கும் அருமருந்தாகி அளவற்ற அமைதியை அளித்துவிடும். மலை வாழ்வில் மனசு அடையும் ஆனந்தம்—நிறைந்த சாந்தி—எப்படிப்பட்ட 'ஸ்வர்க்கானுபவ'த்திலும் கிடைக்காத அரிய பொக்கிஷம். மனம் அமைதியடைந்து ஆரோக்யம் பெற்றால் உடல் ஆரோக்யத்திற்கு வேறு தனி மருந்து வேண்டுமா?

செல்லத்தின் நொந்த மனம் மலைக் காட்சிகளினால் களிக்க ஆரம்பித்தது. புண்பட்ட அந்த நெஞ்சை, அந்தப் பெரிய நீர்வீழ்ச்சியும், சுற்றிலும் தவழும் பற்பல விதமான இயற்கைக் காட்சிகளும், ஆற்றும் அருமருந்தாகி, அவள் கவலையையும் போக்கடித்தன. அவள் கவலையற்று இருக்கலானாள். அடிபட்ட நெஞ்சமும் அமைதியை அடைந்தது. பின்னர் இயற்கையுடன் வளர்ச்சிபெற ஆரம்பித்தது. அத்துடன் செல்லத்தின் உடலும் உருவாகத் தொடங்கியது. வாடிக்கிடந்த வதனத்திலே ஒரு பிரகாசமும், பொலிவும்கூட உதித்தது. முன்னர் காணப்படாத ஒரு பளபளப்பும், ஜ்வலிப்பும் அவளது 'நகசிகை' பரியந்தம் சுடர் தெறித்தது.........

வெகு சீக்கிரத்திலேயே செல்லம் உருமாறிவிட்டாள். அரம்பையோவென்று சந்தேகிக்கத்தக்க அற்புத அழகுடன் திகழ்ந்தாள்.........

எப்போதாவது ஒரு தடவை அவள் உள்ளத்தின் ஆழத்திலே பழைய சிந்தனை அலைகள் மோதுவதுண்டுதான். ஆயினும் உடனேயே சிதறித் துளித்துளியாகத் தெறித்து, மறைந்துவிடும். அபூர்வமாக ஒருதரம் அவள் எதைப்பற்றியோ ஆழ்ந்து யோசிப்பது உண்மைதான்...ஆனாலும் வெகு சீக்கிரத்திலேயே அலக்ஷியம் செய்வதுபோல் எழுந்து நடந்துவிடுவாள். கிரஹண கால சந்திரிகையைப்போலே ஒருசமயம் அவளது மதிவதனம் இருள் மூடிப்போவதென்னவோ வாஸ்தவமே; ஆனாலும் உடனேயே பாம்பின்

வாயிலிருந்து விடுபட்ட திங்களைப் போலே முகத்தில் மந்தஹாஸம் தவழும்; அற்புதமான ஒரு அமர ஒளி சுடர் தெறிக்கும்......

அன்றொரு நாள் அப்படித்தான் என்னென்னவோ பற்பல யோசனைகள் செய்வது போலே, மதிமுகம் சுருங்கிக் கிடக்க, அவள், தனியாக நீர்வீழ்ச்சிக்கு அருகிலே மெதுவாய் உலாவிக் கொண்டிருந்தாள்...... அகஸ்மாத்தாக அவள் தலைதூக்கிப் பார்த்தபோது, அவளுக்கு எதிரே, சற்றுத்தூரத்திலே,.........என்ன?.........அது யார்?...... அங்கு நின்றுகொண்டு அவளையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பது யார்?...........

கண்களை நன்ருகக் கசக்கிவிட்டுக்கொண்டு கவனித்தாள் செல்லம்: அது......அது...? ......அவன் தான்!......சந்தேகமில்லை!......... அவனே!...ஸௌப்பு ரத்னம்!...... ஸௌப்பு ரத்னம்!

அவள் தன்னை அறிந்துகொண்டு விட்டதைத் தெரிந்துகொண்டான் ஸௌப்புரத்னம்.

கீழே விழுந்து விடுபவளைப் போலே ஆடிக்கொண்டிருந்த செல்லத்தை, ஓடிப்போய், தாமதிக்காமல் தாங்கிக் கொண்டான்.

— 10 —

ஸௌப்பு ரத்னத்தின் மடியில் படுத்து, அவன் மார்பில் தலை சாய்த்தபடியே செல்லம் அவன் முகத்தைப் பார்த்தாள்.

"செல்லம்! நீ தெய்வப் பிறவி; என்னை மன்னிப்பாயா?" என்று கெஞ்சிய குரலில் கேட்டான் ஸௌப்புரத்னம். "உன்னை உயிருடன் மறுபடி இந்த ஜன்மத்தில் காணக் கொடுத்து வைத்திருப்பேனே வென்ருகி விட்டது எனக்கு!" என்ருன்.

செல்லத்தின் கண்கள் சொல்லமுடியாத ஆச்சர்யத்தினுல் அகல விரிந்தன. அவள் என்னவோ பேச முயன்ருள். ஆனுல் முடியவில்லை.

ஸௌப்பு ரத்னம் தொடர்ந்தான்.

"வேண்டாம்!...நீ பேசாமல் இரு; நானே சொல்கிறேன், கேள். நீ என்னை விட்டுப் பிரிந்தது முதலே எனக்கு உள்ளமும், உடலும் ஒரு நிலையில் இல்லை; என்னவோ—கிடந்து தவித்தேன். ஸௌந்தரியும் என்னத்தையோ சொல்லி என் மனசைக் கலைத்து விட்டாள். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் விழித்துக்கொண்டுதான் இருந்தேன். நாளடைவில் அவளும் கர்ப்பவதியாக இருப்பதை உணர்ந்தேன். உனக்குப் பிரஸவ சமயத்தில் மயக்கம் போட்டு விழுந்து நீ மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதாகத் தந்தியும், கடிதமும் வந்த பொழுது, அங்கே ஸௌந்தரிக்கும் 'அபார்ஷன்' ஆகி, அவள் தேக நிலைமையும் ரொம்பக் கவலைக்கிடமான ஸ்திதியில் இருந்தது! ஈசுவர சோதனையைப் பார்த்தயா, செல்லா? நான் என்ன செய்வேன்? செய்வதறியாமல் தடுமாறித் தத்தளித்தேன். பைத்தியம் பிடித்தது போலாகி விட்டது எனக்கு. யாரைக் கைவிட்டு யாரைக் கவனிப்பது? நீயே சொல்லு! தர்மஸங்கடம் என்பது இதை விட வேறெப்படியிருக்கும்? 'இருதலைக் கொள்ளி எறும்பு' என்று சொல்வதன் தாத்பர்யத்தை அந்தச் சமயத்திலே தான் உணர்ந்தேன். எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உனக்குப் பிரஸவமாகி விட்டது என்று எனக்குத் தெரிந்த சமயம் ஸௌந்தரி சுயப் பிரக்ஞையின்றி யமனுடைய பாசத்தில் உயிரை விட்டுக்கொண்டிருந்தாள்! அவள் காலமும் முடிந்தது; பத்துநாளைய ஈமக்கிரியைகளைச் செய்து முடித்தபிறகு தான் அவள் பந்தம் என்னை விட்டது. அப்புறமாவது உன்னைப் பார்க்க—உன் நிலையைக் கண்டறிய, வரலாமென்ருல்......அப்போது என் மனச்சாக்ஷியே என்னை இடிக்க ஆரம்பித்துவிட்டது.........ரொம்ப நாளாகி விட்டதே யென்று மலைத்தேன்; அபாயமென்றபோது எட்டிக்கூடப் பார்க்காமல் இருந்துவிட்டு அப்புறம் எந்த மூஞ்சியை வைத்துக்கொண்டு உன்னிடம் நிற்பது—என்று திகைத்தேன். நீ என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பாயோ வென்று எண்ணி மனம் புழுங்கினேன்; திடீரென்று என்னைப் பார்த்தபிறகு உன் நெஞ்சு என்ன நினைக்குமோ—என்னை என்ன ஏசுவாயோ-என்றெல்லாம் நினைக்கவே பயந்து நடுங்கினேன். நரகானுபவத்தை அடைந்துவிட்டேன்; பிறகு உன்னைப் பற்றிய தகவலே தெரியாமல் தவித்தேன்; நீ என்ன ஆனுயோவென்று துடித்தேன். வெகுநாட்கள் இரவு பகலாக மனசுடன் போராடிய பிறகு துணிந்தேன். உன்னைப் பார்க்கப் புறப்பட்டேன். உங்கள் வீடு பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்ததும் என் நெஞ்சிற்கு எப்படி இருந்திருக்கும்? நீயே ஊஹித்துக்கொள். 'திகீர்' என்றது. அந்த ஒரு நிமிஷத்திற்குள் எண்ணுததெல்லாம் எண்ணிவிட்டேன். அக்கம்பக்கத்தில் விசாரித்தபொழுது நீ தேக நலத்திற்காகக் குற்ருலம் போயிருப்பதாக அறிந்தேன்,

உயிரோடுதான் இருக்கிருயென்று தெரிந்ததும் வயிற்றில் பாலை வார்த்ததுபோல் இருந்தது. உன்னைக்கண்டு, உன் காலில் விழுந்து கெஞ்சி, எப்படியாவது உன் மன்னிப்பை வாயளவிலாவது, பெறுவது என்ற தீர்மானத்துடன், இங்கே ஓடோடியும் வந்தேன். கடைசியில் கடவுள் அருளால் உன்னைக் காணும் பாக்யத்தை மறுபடியும் பெற்றேன். செல்லா! என்னை — மகா பாபியாகிய என்னை —மன்னிப்பாயா, செல்லா?" என்று சொல்லி, செல்லத்தின் முகாரவிந்தத்தைப் பார்த்தான்.

கண்கள் சந்தித்தன. செல்லத்தின் விழிகளிலிருந்து நீர் அருவியாகப் பிரவகித்துக் கொண்டிருந்தது. ஸ்வப்புரத்னம் தெரிந்து கொண்டான். அவனுக்கு இன்னும் ஒரேயொரு சந்தேகம்; கேட்கத் துணிந்துவிட்டான்.

"செல்லா! நம் குழந்தை?... சௌக்கியந் தானு செல்லா?"

"ஆஹா! வீட்டில் தூங்குகிறது; வாருங்கள், போய்ப் பார்ப்போம்!" என்று சொல்லிக்கொண்டே குதூஹலத்தில் குதித்தெழுந்தாள். இருவரும் கைகோத்தபடி செல்லம் தங்கியிருந்த விடுதியை நோக்கி நடந்தார்கள். பின்னுல் பிரும்மாண்டமான நீர் வீழ்ச்சி 'ஹோ' வென்று சந்தோஷச் சிரிப்புடன் குதித்துக் கும்மாளம் போட்டது.

செல்லத்தின் மனம் சொல்லியது.

'உண்மையில் யாருக்குக் கண்ணில்லை? தெய்வத்திற்கா? நமக்கா? நமக்குத்தான் இல்லை; உலகத்திற்குத்தான் இல்லை. ஆனுல் பின்னுல் வரப்போவது முன்னதாகவே நமக்கும் தெரிந்துவிட்டால் — அதாவது நமக்கும் 'கண்' இருந்துவிட்டால் — அப்புறம் வாழ்க்கையில் 'பிடிப்பு' இருக்குமா? 'பாசம்' உண்டாகுமா? வாழ்வில்தான் கொஞ்சமாவது 'ரஸனை' இருக்குமா? சந்தேகமில்லை — தெய்வம் கருணை சமுத்திரந்தான்.'


# S. K. R. & CO.

PERFUMERS

Arunachala Asari St. :: Jothy Building

SALEM TOWN




எஸ். கே. ஆர்.

& கம்பெனியாரால்

தயாரிக்கப்பட்ட மைசூர் சக்தி ஊது பத்திகள், ஹேர் ஆயில், பேஸ் பவுடர் முதலிய வாசனை திரவியங்களை வாங்கி ஆனந்தியுங்கள்.

எஸ். கே. ஆர். & கோ.

பார்ப்யூமர்ஸ்

அருணுசல ஆசாரி தெரு, சேலம் டவுன்

ஏஜண்டுகள் தேவை.

முன் தொடர்ச்சி

# ஆடிப் பாவை

எம். அனந்தநாராயணன் I. C. S.

III

எங்கள் கிராமத்தில் குற்றாலலிங்கம் பிள்ளை என்றொருவர் இருந்தார். இவர் சிலகாலம் கலியாணராமையர் "ஹைஸ்கூலில்" தமிழ்ப் பண்டிதராக இருந்தவர். அந்தப் பள்ளியின் தர்மகர்த்தாக்களுக்கும் இவருக்கும் சில விஷயங்களில் மனவேற்றுமை ஏற்பட்டதால் வேலையிலிருந்து விலகிக்கொண்டு தமக்குச் சொல்ப பூஸ்திதியுள்ள குன்றியூரில் குடிபுகுந்தார். இவருக்கு மனைவியிறந்து விட்டனள், மக்களுமில்லை. ஏகாங்கியானாலும், துறவியைப்போலொழுகாமல், பிறர் சுகதுக்கங்களில் ஊக்கமாய் ஈடுபட்டு வாழ்ந்தார். தமிழில் நல்ல பாண்டித்யமுள்ளவர். யாப்பிலக்கணமும் நன்கறிந்தவர் இவர் இயற்றிய "உமாமஹேச்வரர் வெண்பாமாலை' என்ற நூல் அச்சேறியும், இப்பொழுது பிரதிகள் கிடைப்பதில்லை. இவர்தான் முதன்முதல் எனக்குத் தமிழில் சுவையும் சிற்றறிவும் உண்டுபண்ணியவர். நளவெண்பா, நாலடியார், நீதிநெறி விளக்கம், நான்மணிக்கடிகை முதலிய நூல்களினின்றும் எளிய வெண்பாக்களைப் பாடம் சொல்லிவைத்தார். இலக்கண முறைகளையும் மனம் தளர்ச்சி எய்தாமல், விளையாட்டாகவே புகட்டினார். சில துதிப்பாக்களையும் தனிப்பாடல்களையும் இவரிடம் கற்றேன். இவற்றிலொன்று இப்பொழுது ஞாபகத்துக்கு வருகிறது —

*"அஞ்சு முகந் தோன்றில் ஆறுமுகம்*
*தோன்றும்*
*வெஞ்சமரில் அஞ்சலெனவேல் தோன்றும்*
*—நெஞ்சில்*
*ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்*
*முருகாவென் றோதுவார் முன்."*

நான் என்றும் நுனிப்புல் மேயும் குணமுள்ளவன். எதிலும் என் மனம் எளிதில் அழகுகண்டு ஈடுறும். ஆயின் ஊன்றி நிற்காமல் எளிதில் விலகும். பிற்காலத்தில் ஆங்கிலக் காவியங்களிலும் சரித்திரப் படிப்பிலும் கவனம் செலுத்தித் தமிழில் அறிவு குன்றிவிட்டேன். தமிழ்ப் பெருங்காவியங்கள் ஒன்றையாவது நான் முடிவாய்ப் படித்ததில்லை. சங்கத் தமிழ் நூல்களில் மிகச்சில பகுதிகள், கம்பராமாயணத்தில் சில பாக்கள், தேவாரம், திருவாசகம், திவ்யப்ரபந்தம், இவற்றுள் அங்கங்கே சில சுவை நிறைந்த தொடர்கள் இவ்வாறு பழக்கமுண்டு. இருந்தபோதிலும் குற்றாலலிங்கம்பிள்ளையின் நட்பினால் நான் பெரும் பயனடைந்ததாகவே கருதுகிறேன். இந்த உறவினால்தான் தமிழின் ஓசையின்பத்தை நான் முதலிலறிந்தேன். இந்த இன்பம் மிக நுட்பமானது, இத்தகையதென்று பண்டிதராலும் அளவிட்டு வகுக்கமுடியாதது. இதுபற்றியே குமரகுருபர சுவாமிகளும் நாதப்ரம்மத்தின் சக்தியான ஸ்ரீ மீனாக்ஷி தேவியை "துறைத்தீந்தமிழின் ஒழுகு நறும் சுவையே" என்று விளித்துப் பாடுகிறார்.

ஒரு நாள் பிற்பகல் என் தகப்பனார் போஜன மருந்திவிட்டுத் திண்ணையில் விசிறியுடன் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது பிள்ளையவர்கள் பட்டை பட்டையாய் விபூதியிட்டுக்கொண்டு அங்கே வந்தார். இருவருக்கும் பின்வருமாறு சம்பாஷணை உண்டாயிற்று. இது நான் கதவு மறைவில் நின்று கேட்டது.

தகப்பனார்: உட்காருங்கள், பிள்ளையவாள், என்ன விசேஷமாய் வந்தீர்கள்?

பிள்ளை: நமது நாணுவையரைப்பற்றித்தான். (எனக்கிட்ட பெயர் லக்ஷ்மிநாராயணன். நாணுவென்பது வழக்கக் குறுகல்.) உங்கள் மகனுக்குத் தமிழில் நல்ல சுவை யிருக்கிறது. தினம்தினம் முறையாய் என்னிடம் ஓரிரண்டு மணிநேரம் கற்றால், தெளிவான தமிழறிவு பெறலாம்,

தகப்பனார்: உங்களுக்குப் பையனிடத்தில் இவ்வளவு அன்பிருப்பது என்னைக் குறித்த மட்டில் பரம சந்தோஷம். ஆனால்

நீங்கள் அறியாத விஷயமல்ல. அவனைக் கூடிய சீக்கிரத்தில் ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பவேண்டும். வடமொழியும் கற்க ஏற்பாடு செய்தல் அவசியம். சம்ஸ்கிருதமே எனக்கு ஜீவாமிருதமாயிருந்து வருகிறது. நமது மதம், பூர்வ நாகரிகம், கலைகள் இவையெல்லாம் சம்ஸ்கிருதத்தையே தாய் வீடாகக் கொண்டு வளர்ந்தன என்பதை மறைக்கக்கூடாது.

பிள்ளை: அதை நான் மறுக்கவில்லையே? ஆனால் அம்ருதமானாலும் தாய்ப்பாலுக்கு நிகரா? தாய்மொழி அறியாமல் வேறொன்றிலும் வடிவம் விளங்காது. உடல் போஷணைக்கு எவ்வகையான உணவு கொண்டாலும் படைத்த சோறில்லாமல் உள் புகுந்து புஷ்டி ஏற்படாது.

நகப்பனூர்: பையன் சிறு வயசு. பல மொழிகளைக் கற்க அவனால் சாத்தியமாகாது. ஆங்கிலமோ புருஷார்த்தமாய்ப் படித்தே தீரவேண்டும். தங்களிடத்தில் தமிழ் கற்று இதுவரை ஓர் அஸ்திவாரமாய்விட்டது. இனி பிரயத்தனத்தால் அவன் தமிழில் அறிவை விருத்தி செய்து கொள்ளலாம்.

பிள்ளை: அவ்வாறில்லை, இன்னும் சில காலமாவது அவனுக்குத் தமிழில் வழி காண்பித்தல் அவசியம். இல்லாவிட்டால் இதுவரை தேங்கிய அறிவும் வற்றிச் சுண்டி விடும். நீங்களென்னவோ தமிழை இரண்டாம் தரமாகக் கருதுகிறீர்கள். மெய்யில்லை அதுவல்ல. தாய்ப்பாஷையில் தான் சொல்வன்மை ஏற்படும். பிறபாஷையில் அதைப் பின்பற்றுவது பகல் கனா,

நகப்பனூர்: நீங்கள் கூறுவதெல்லாம் நியாயமென்றே படுகிறது. இருந்தபோதிலும் பையனைச் சிவமங்கலம் "போர்ட் ஸ்கூலுக்கு" அனுப்புவதை இன்னும் தாமதிப்பது உசிதமில்லை. நல்ல 'வில்' வண்டி ஏற்பாடு செய்திருக்கிறேன். "ஸ்கூல் ஹெட் மாஸ்டர்" கோபாலராயரும் எனக்கு ஆப்த சினேகிதர். பையனுக்குச் சிறிது ஓய்வே ஏற்படும். சம்ஸ்கிருதத்தில் அவன் இன்னும் "பால போதினி" படிக்கவேண்டும். உங்களிடத்தில் வாரத்தில் ஓரிரண்டுமுறை தமிழை அபிவிருத்தி செய்யலாம்.

பிள்ளை: ஏன், வடமொழியைச் சில ஆண்டுகளுக்குப் பின்னர் எளிதில் கற்கலாமே? உயிருடன் விளங்கும் தாய்ப் பாஷையின் உறவின்பம் தனித்ததல்லவா? தன் நாட்டை மதிப்பவன் பிற நாட்டாரால் மதிக்கப்படுகிறான், தன் சொல்லை வசம் புரிந்தவன் பிற சொல்லில் திறமை பெறலாம்.

நகப்பனூர்: பிள்ளையவாள், இது தர்க்க விஷயமில்லை. உணர்ச்சியைப் பொறுத்தது. எனக்கென்னவோ வால்மீகி ராமாயணம், சாகுந்தலம், குமாரசம்பவம், பகவத் கீதை, இவைபோன்ற நூல்கள் ஒரு மொழியிலும் இதுவரை தோன்றியதில்லை. இனிமேல் தோன்றுதலும் அஸாத்யம் என்று திட நம்பிக்கை. காளிதாஸரைக் காட்டிலும் உபமானத்தில் மிஞ்சிய கவியுமுண்டா? வால்மீகியைப் போல் மனுஷ்ய ஸ்வபாவத்தின் ஸூக்ஷ்மத்தை "ஷேக்ஸ்பியர்" 'கெதே' எவனும் அறிந்ததில்லை.

பிள்ளை: நீங்கள் திருக்குறளை ஊன்றிப் படித்திருக்கிறீர்களா? இந்தச் சிறு நூலில் எடுத்தாண்ட மனோநுட்பங்களை யார் தாம் அளவிடவல்லார்? சிறு உதாரணம் கூறுகிறேன். 'விருந்து' என்ற சொல் 'விருந்தாளி' யென்று பொருள் படும். முதற்பொருள் புதுமையென்பதே. நமக்கு முன்னறிவின்றித் தானும் இடமறியாமல் பசித்து, ஊண் விரும்பி அணுகுபவன் "விருந்து". அனிச்சம் என்ற மலர் மோந்தால் வாடுமாம். மற்றொரு மலர் அணுகாமல் கடுத்த முகத்துடன் நோக்கலுமே வாடுகிறது. அதுவே 'விருந்தின்' முக மலர்—

"மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" என்றார்—

ஆ, என்ன நுட்பம், என்ன வாக்கின் வன்மை!

இவ்வாறு சிறிது காலம் பேச்சு நீடித்தது. பிறகு வாரத்திலிரண்டு முறை நான் குற்றாலலிங்கம் பிள்ளையிடம் இரவு ஏழு மணிக்குத் தமிழ் கற்றுக்கொள்வதென்று ஏற்பாடாயிற்று. அதே மாதத்தில் சிவமங்கலம் "போர்ட் ஸ்கூலில்" இரண்டாம் வகுப்பில் ("பாரம்") சேர்ந்

# TIMES HAVE CHANGED!

**1754**





Thomas Mudge

ஆங்கர் எஸ்கேப்மெண்ட் தாமஸ் மட்ஜால் கண்டு பிடிக்கப்பட்டது. 19 ஆவது நூற்ருண்டிற்குமுன் கடிகாரங்களுக்கு அது உபயோகிக்கப்படவில்லை.

**1945**



''காம்பெடிஷன்''
16" திறந்தமுகம்
14-காரட் தங்கம், உட்புற மெட்டல் டோமுடன் ரூ. 195

## காலம் மாறிவிட்டது!

200 ஆண்டுகளுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்ட அதே எஸ்கேப்மெண்ட்தான் இன்று கடிகாரங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. சரியான மணி காட்டுவதற்கு மற்றெல்லாவற்றையும்விட இந்தச் சக்கரம் அவசியம் என்பது உண்மை, இன்னும் பல சிறந்த அம்சங்கள்கொண்ட நுண்ணிய பாகங்கள் நல்ல கடிகாரங்களில் உள்ளன. இவை ''வெஸ்ட் எண்ட்'' மாடல்களில் திறம்பட அமைக்கப்பட்டிருப்பதை எமது இலவச காட்லாக்கில் காணலாம்.

கப்பல் வசதிகள் சரிவர இல்லாததால் விளம்பரத்திற்கண்டுள்ள எல்லா ரகங்களையும் சப்ளைசெய்ய முடியாமலிருக்கலாம். எனினும் கையிருப்புக்கேற்ப ஆர்டர்களை அனுப்பச் சகல முயற்சிகளும் செய்யப்படும்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனி
பம்பாய் & கல்கத்தா

# WEST END WATCH Co.

*Bombay & Calcutta*

தேன். வடமொழியும் கற்க ஆரம்பித்தேன்.

நான் பிள்ளையவர்களிடம் படித்தது சில மாதங்களே. குறளில் சில அத்தியாயங்களும் நைடதமும். அவர் பாடம் கற்பித்துவரும்பொழுது, முதுகில் ராஜபிளவை ஏற்பட்டுப் பாயும் மருந்துமாகப் படுத்துவிட்டார். என் தகப்பனாருக்கு அவரிடம் உள்ளாக அளவற்ற மதிப்பு. என் தகப்பனாரின் வற்புறுத்தலின்மேல் கும்பகோணத்திலிருந்து ஆங்கில வைத்திய நிபுணர் ஒருவரையும் வரவழைத்துச் சிகிச்சை செய்தார்கள். ஆனால் பிள்ளையவர்களின் காலம் முற்றிவிட்டது. இரண்டு நாள் தம்மறிவில்லாமல் "ஜன்னியில்" கிடந்து, பிறகு தேகவியோகமானார். அவர் வேண்டுகோளின்மேல், அவரிடமிருந்த சில தமிழ்ப் புத்தகங்களை நான் பத்திரப்படுத்தி வந்தேன். பல வருஷங்களுக்குப்பின் அவர் ஞாபகார்த்தமாய், கல்யாணராமையர் "ஹைஸ்கூல்" தமிழ்ச் சங்கத்துக்கு இவை அளிக்கப்பட்டன. பிள்ளையவர்கள் கறுப்பு நிறம், பெருந்தொந்தி யுடையவர். எக்காலத்திலும் விபூதி, ருத்ராக்ஷம் தரித்திருப்பார். மூக்கில் பொடியேற்றும் வழக்கமுண்டு. சில வேளைகளில் விடுகதைப் பாக்கள், சித்திரக்கவி யிவை ஓதுவார், அல்லது, மிக வேடிக்கையாகப் பேசுவார். வசன நூலொன்றைப் படிக்கும்போதே வாசகங்களை எளிய வெண்பாக்களாக அமைக்கும் திறமை அவரிடமுண்டு. அவரிடம் நான் கேட்ட தனிப்பாடல்கள் அளவற்றன. அவற்றுள் திருநெல்வேலியில் எழுந்தருளிய வடிவம்மையின்மேல் இயற்றிய கட்டளைக் கலித்துறைப் பாவொன்று —

*"ஆய் முத்துப் பந்தரில் மெல்லணைமீதுன்*
*னருகிருந்து*
*நீ முத்தம் தா வென்றவர் கொஞ்சும் வேளை*
*யில் நித்த நித்தம்*
*வேய் முத்தரோடென் துறைகளெல்லாம்*
*மெல்ல மெல்லச் சொன்னால்*
*வாய் முத்தம் சிந்திவிடுமோ நெல்வேலி*
*வடிவம்மையே."*

"கொங்குதேர் வாழ்க்கை அம் சிறைத்தும்பி" என்ற இறையனார் பாவையெடுத்தாண்டு, "காமம் செப்பாது கண்டது மொழிமோ" என்ற தொடரைக் குறித்து அவர் அரைமணி நேரம் பிரசங்கித்ததைக் கேட்டிருக்கிறேன். அப் பாவில் "காமம்" என்ற சொல்லின் பொருள் தனியென்று விரித்து,

*"மலரினும் மெல்லிது காமம்: சிலரதன்*
*செவ்வி தலைப்படுவார்"*

என்ற குறளோதிப் பல் மேற் கோள்களை எடுத்துக் கூறி, முற்கால வாழ்வு தூய வாழ்வென்றும், அந்த வாழ்வில் காதலின் பத்தை மிகச் சிறப்பாகக் கருதினரென்றும், தன்னலமற்ற அதன் நுட்பத்தை 'மலரின் மெல்லிது' என்றாரெனவும், பிற்காலத்தில் அகத்தூய்மைகெட காமமென்ற சொல் பொருள் மாட்சியினின்று இழிந்ததெனவும் மிக அழகாகச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் தமிழ்ப் பாட்டுக்களைப் படிப்பது, சங்கீதமாயில்லாவிட்டாலும், ஓசை கூடியதாய் இனிமையாயிருக்கும்.

பிற்காலத்தில் முன் கூறியவாறே தமிழ்ப் பயிற்சியை நான் கைவிட்டிருந்தபோதிலும், தமிழ்ச்சுவையை என்றும் புறக்கணித்தவனல்ல. வெண்பாவிலும் கட்டளைக் கலித்துறைப்பாவிலும் எனக்கு மோகமதிகம். இன்றும் திருவாசகத்தில் "நீத்தல் விண்ணப்பத்தில்" மிளிரும் சில சொல் தொடர்கள் என் மனதை வசப்படுத்திவிடுகின்றன.

*"செழுகின்ற தீப்புகுவிட்டிலில் சின்மொழி*
*யாரிற் பன்னாள்*
*விழுகின்ற வென்னை விடுதிகண்டாய்"*
*"பொய்யவனேனைப் பொருளென வாண்*
*டொன்று பொத்திக்கொண்ட*
*மெய்யவனே விட்டிடுதி கண்டாய்"*
*"களிவந்த சிந்தையொடுன்கழல் கண்டுங்*
*கலந்தருள*
*வெளிவந்திலேனை விடுதிகண்டாய்"*
*"பொருளே தமியன் புகலிடமே நின்*
*புகழிகழ்வார்*
*வெருளே யெனை விட்டிடுதிகண்டாய்"*
*"எறும்பிடை நாங்கூழெனப்புலனா*
*லரிப்புண்டலந்த*
*வெறும் தமியேனை விடுதிகண்டாய்"*

தமிழில் மிகச்சில கட்டுரைகளும் சிறு கதைகளும், "காமப்பிறை" என்ற வெண்பாத்தொடரொன்றும் எழுதியிருக்கிறேன். இவை அநேகமாய்ப் பிரசுரமாக வில்லை. என் குழந்தை கமலாவின் எட்டாவது பிறந்தநாளன்று சிறுவர்க்கேற்ற புத்தகங்கள் தமிழில் கிடைக்காததால் எளிய நடையில் சில கட்டுரைகளையும் பாட்டுக்களையும் சேர்த்து, 'பிறந்த நாள் புத்தகம்' ஒன்று எழுதிமுடித்தேன். இதுவும் நான் வரைந்த படங்களுடன் கூடிக் கறுப்புமையில் கை எழுத்துப் பிரதியாகவே யிருந்து வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் சில காலத்திற்குமுன் என் முப்பத்தாருவது ஆண்டு நிறைவேறின நாளன்று நான் பாடின வெண்பாக்கள் இரண்டை இங்கெழுதி நிறுத்துகிறேன். இவை அனுபவ விவேகத்தால் ஆத்ம ஞானமொன்றையே வாழ்வின் கனியாக நான் தற்காலம் நினைப்பதையும், 'பைரன்' என்ற ஆங்கிலக் கவிஞரைப் போல் முப்பத்தாரும் ஆண்டினின்றும் மனப்பான்மை சற்று மாறியதாக உணர்வதையும் ஒருங்கே விளக்குவன —

(1) ஆண்டாண்டு தோறு மழுதே னவல முற்றேன்
மாண்டே னெனச்சரிதை வாய்த்திடுமா— நீண்டியுனைக்
கட்டினேன் காமரசங் கண்டேன் கண வனநாள்
எட்டினே னென்னுமலே.

(2) நரைதோன்று முன்னர் நவிலவொணு ஞானத்
துரைதோன்ற வுள்ள முநகாய் —துரைய்ய யுன்
வேலுக்த மீண்ட விதியுண்டே ரவுண்டோ விக்
காலுக்த மீண்ட கடல்.

(காலுக்கு மீண்ட கடல் — காற்றில் அசைவுருத கடல்)

மேதாஸ்

# மஸ்தானு மாத்திரைகள்

## சிறந்த டானிக்

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

**பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு, தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல், காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்**

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்

**இன்றே ஆரம்பியுங்கள்**

கிடைக்குமிடம்:—

## K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

**250, சைனு பஜார் (மாடி), சென்னை**

# ஹெலென் கெல்லெர்

## (Helon Keller)

யோகி சுத்தானந்த பாரதியார்

நம்புவீர்களா? ஒரு குருடி, செவிடி— பி. ஏ. பட்டம் பெற்று அரிய நூல்கள் எழுதுகிறாள். உலகம் அவளை 'அற்புதப் பெண்மணி,' அதிசயக் குருடி, ஆச்சரியமான செவிடி' என்று வியக்கிறது. "அட எப்படித்தான் இந்தக் குருடி பேனா ஓட்டுகிறாள்" என்று எல்லோரும் மூக்கில் விரல் வைக்கிறார்கள். நாம் பேசினால் உதட்டைத் தொட்டுப் பார்த்துப் பேச்சை அறிந்துகொள்ளுகிறாள்.

ஒருதரம் இந்தக் குருட்டுச் செவிடி கவி ரவீந்திரநாதரைக் கண்டாள். "கவி மன்னரே, உமது கீதாஞ்சலியில் ஒன்று சொல்லும்" என்றாள். "நான் சொல்வதை இந்தப்பெண் புரிந்துகொள்ள முடியுமா?" என்று ரவீந்திரர் பக்கத்திலிருப்பவரைக் கேட்டார். அவர் உதட்டில் கை வைத்து, "ஆஹா நன்றாகப் புரிந்துகொள்வேன்" என்றாள். கவிராயர் வியப்பிற்கு அளவில்லை. உடனே ஒரு பாட்டை ஒப்பித்தார்; அவர் உதட்டிலும் தொண்டையிலும் கைவைத்துப் பார்த்து "இந்தப் பாட்டு எனக்குத் தெரியுமே. இதோ கீதாஞ்சலி இத்தனையாவதுபாட்டு" என்று எடுத்துக்காட்டினாள். கவி ரவீந்திரருக்குத் தூக்கிவாரிப் போட்டது. "அம்மா நீ குருடியன்று. உன்னுள் ஒளிக்கண் உள்ளது; நீ செவிடியன்று; உன்னுள் ஒரு நுட்பமான செவியிருக்கிறது" என்றார்.

கவியும் குருடியும் இப்படி அளவளாவிய காட்சியைப் படம் பிடித்திருக்கிறார்கள். அந்தப்படம் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பிரசித்தமானது. அத்தப் படத்தைக் கண்டவர் கண்ணுள்ள குருடி பண்ணுள்ள கவியுடன் பேசுகிறாள் என்பர். இந்த அமெரிக்கப் பெண்ணே ஹெலென் கெல்லெர். (Helon Keller) டாக்டர் கெல்லெர் என்றால் உலகெல்லாம் தெரியும்.

கெல்லெர் 1880-ஆம் ஆண்டு அலபாமாவிலுள்ள டஸ்கம்பியாவில் (Tus cambia) பிறந்தாள். அவள் தந்தை காப்டன் கெல்லெர் சிறந்த அறிவாளர். தாயார் அன்பும் கருணையும் மிக்கவள்.

ஹெலென் அழகான குழந்தை; சிரித்த முகமும், கூரிய விழிகளும் கொண்டவள். ஒன்றரை வயதிலேயே "மம்மா, பப்பா" என்ற மழலை பேசினாள். திடீரென்று இக்குழந்தைக்குச் சந்நிபாத ஜ்வரம் கண்டது; இரண்டொரு மாதங்கள் சாவுடன் போராடிய பிறகு மெல்ல மெல்ல உயிர் வந்தது; உடல் தெளிந்தது; ஆனால் கண் போய்விட்டது; காது அடைத்துப் போனது; நாக்கு உள்ளே இழுத்துக் கொண்டது; பேச்சு உளறியது; அறிவு மட்டும் மூளையில் துடித்துக்கொண்டிருந்தது; அன்பும் பாசமும் நெஞ்சில் பதறிக் கொண்டிருந்தன. ஆனால் கண் காணவில்லை; காது கேட்கவில்லை; குழந்தை சில நாட்கள் அழுது சோர்ந்தது. பிறகு அழுகையில்லை; துயரமில்லை; சிரிப்பும் விளையாட்டுமானது குழந்தை; அதனுள் எத்தனையோ உணர்ச்சிகள் அலைமோதும்; அவற்றையெல்லாம் கைச்சாடையால் காட்டும்; சத்தம்போடும். தாயார் உதட்டையும் கைகளையும் தடவித்தடவி அவள் பேசுவதை அறிந்துகொள்ளும். இந்த அழகான பெண் குழந்தைக்கு இப்படிக் குறை வந்ததே என்று பெற்றோர் மனம் புழுங்கி அங்குமிங்கும் பரபரப்புடன் வழிதேடினர். சார்லெஸ் டிகென்ஸ் எழுதிய அமெரிக்கன் நோட்ஸ் என்ற நூலைத் தந்தை கெல்லெர் பார்த்தார். அவர் அதில் டாக்டர் ஹௌ (Howe) என்பவர் பிறவியில் செவிட்டுக் குருடான லோரா ப்ரிட்ஜ்மான் (Laura Bridgeman) என்ற குழந்தைக்குப் பேச்சறிவித்து, எடுத்த புத்தகம் படிக்கும்படி செய்ததாகக் கண்டார். உடனே டாக்டர் ஹௌவைத் தேடிச் சென்றார். அவர் செவிடு குருடுகளுக்காகவே போஸ்டனில் ஒரு நிலையம் கண்டு, அதில் பல குழந்தைகளைப் பேச்சறியச் செய்த புண்ணியவாளர். ஆனால் அவர் இறந்து போனார்.

காப்டன் கெல்லெர் நிலையத்தலைவரிடம் தம் குறைகளைச் சொன்னார். அப்போது அங்கே ஒரு வசீகரமான பெண்மணி வந்து, "ஐயா, நான் தங்கள் குழந்தைக்குப் பேச்சுப் பழக்குவேன்" என்றாள். இப்பெண்மணியே ஆன் ஸல்லிவன் (Anne Sullevan) என்பவள். இவளும் ஒரு காலம் குருடாயிருந்து டாக்டர் ஹெள சிகிச்சையால் கண் பெற்றாள். இவள் அறிவும் அன்பும் பொறுமையும் நிறைந்த உத்தமி. குழந்தைகளின் சேவைக்கே தன்னை அர்ப்பணித்தவள். டாக்டர் ஹெள கண்ட போதனை முறையில் முதன்மை பெற்றவள். டாக்டர் கெல்லெர் இப்பெண்மணியை வரவேற்றுத் தம் குழந்தை ஹெலெனை அவளிடம் ஒப்பித்தார்.

1887 ஆம் ஆண்டு, ஹெலெனுக்கு ஏழாம் வயது பிறந்தபோது வந்த ஸல்லிவன், அவளுடைய பிரியாத் துணையானாள். இச் சமயம் ஹெலென் கெல்லெர் படுதுஷ்டத்தனங்கள் செய்தாள். தட்டுமுட்டுச் சாமான்களை யெல்லாம் உருட்டுவது, விநோதமாகக் கூச்சலிடுவது, ஆட்களை உள்ளே அடைத்துக் கதவைப் பூட்டுவது, உள்ளே காணும் கனவுகளுக்கேற்றபடி கைகால் வீசி ஊமைச் சாடைகளுடன் நாடகமாடுவது ஆகிய சேட்டைகள் நாள் எல்லாம் நடக்கும். அவள் யாரையாவது பற்றிக்கொண்டால் உடும்புப் பிடிதான்; திமிர முடியாது. இந்தக்குழந்தை ஸல்லிவன் வந்ததும் "பு பு பு பு" என்று என்னவோ பிதற்றி ஒரே மோதாக மோதிக் கட்டிக்கொண்டது. ஸல்லிவன் குழந்தையை அன்புடன் எடுத்து முத்தமிட்டு மடிமேல் வைத்துக்கொண்டு, தன் கடிகாரத்தை அதன் கையில் தந்து, கையில் "கடிகாரம்" என்று எழுதியறிவித்தாள்; தந்தை ஸல்லிவனுக்கும் ஹெலெனுக்கும் தனியாக வீடு ஏற்பாடு செய்தார். அங்கே சென்றதும் குழந்தைக்குப் பொம்மை தந்து, கையில் 'பொம்மை" என்றெழுதி அறிவித்தாள். பிறகு பிஸ்கோத்து தந்து அது நீ சாப்பிடும் உணவு என்றெழுதிக் காட்டினாள்; இப்படியே பல பொருள்களைத் தொட்டுப் பார்க்கச்சொல்லி, கையில் பெயரை எழுதினாள்.

ஹெலென் நுண்ணறிவால் உடனே வார்த்தைகளைப் புரிந்துகொண்டு தத்துப்பித்தென்று உளறுவாள். அவள் துறுதுறுத்த குழந்தை; ஒரு நொடி சும்மா இருக்கமாட்டாள். அசாத்திய விஷமம் செய்வாள்; ஸல்லிவனைப் படாதபாடு படுத்துவாள்; சாமான்களை உடைப்பாள். ஸல்லிவன் அவளுடைய துறுதுறுப்புக்குத் தக்கபடி வேலை தந்து, படிமானத்திற்குக் கொண்டு வந்தாள். ஆசிரியை ஹெலெனை அடிக்கடி தோட்டத்திற்கு அழைத்துச் சென்று விளையாட்டாகப் பல பொருள்களின் பெயர்களையும், செயல்களின் பெயர்களையும் கற்பித்தாள். "என் உலகம் இருளுலகம்; என் ஆசிரியை பொழுது விடிந்தது, பறவைகள் பாடுகின்றன" என்றெல்லாம் என் உள்ளங் கையில் எழுதிக் காட்டுவாள். அப்போது உலகில் காலை புலர்ந்தது; ஒளி உதித்தது; என்னுள் ஒளி வரவில்லையே; காலையின் அழகை நான் காண் பதற்கில்லையே என்று வருந்தி அழுவேன். அந்த விசனப் பெருக்கில் ஓர் ஒளி பிறக்கும்; காலை, அழகான மலர்கள், இனிய புட்கள், மந்தமாருதம் என்பவற்றை ஊகிப்பேன்.

சுறுசுறுப்பாக உலகம் எழுந்து வேலை செய்கிறது.—என்றெல்லாம் மனச் சித்திரம் வரைந்து பார்ப்பேன். இப்படியே இயற்கைக் காட்சிகளெல்லாம் என் ஊகத் திரையில் விளையாடும். நான் தொட்டுத் தொட்டுப் பொருள்களை அறிந்து இந்தச் சாமான் இப்படி என்று மனத்தில் படம் வரைந்துகொள்வேன். என் ஆசிரியை பொறுமையாக என் கையில் எழுதி, உச்சரிக்கச் சொல்லி நான் ஒவ்வொன்றையும் நன்றாக உணருமட்டும் சிரமப்படுவாள். சரியாகச் சொன்னதும் "நீ மிகவும் புத்திசாலி" என்று முத்தமிட்டுக் கொஞ்சுவாள். அப்போது என் இருட்டுலகில் இன்பவொளி புகும்." இவ்வாறு ஹெலென் தன் கதையைச் சொல்லுகிறாள். குச்சிகள் விதைகள், அட்டைகள், கற்கள், மணல், நூல்கள், காகிதம் முதலியவற்றால் பல பொருள்களை அமைக்க ஹெலென் கற்றுக் கொண்டாள். வீடு கட்டுதல், பறவைக் கூடு கட்டுதல், கப்பல், வண்டி, தொட்டி தொப்பி முதலியன செய்தல்—இப்படிப் பட்ட ஆடல்களால் ஹெலென் விரைவாகப் பேச்சுப் பழகினாள், எழுதப் பழகினாள், இப்போது அவளுக்கு 500 வார்த்தைகள் தெரியும். அவற்றைக்கொண்டு தன் உள்

ளக் கனவுகளை யெல்லாம் அழகான வாக்கியங்களாகப் பின்னினாள். இக் குழந்தையின் அற்புதமான அறிவும் கற்பனைத் திறமும் பலரைக் கவர்ந்தன. வருகிறவர்களுடன் அவள் இனிய மொழிகளைப் பேசினாள்; அவர்கள் உதட்டசைவைக் கையால் உணர்ந்து பேச்சை உணர்ந்தாள். அவளுக்கு நல்ல நண்பர் கிடைத்தனர். அவர்களுக்கு அவள் கடிதம் எழுதத் தொடங்கினாள். பதினோராம் வயதில் அவள் பிஷப் ப்ரூக்ஸிற்கு எழுதிய கடிதத்தின் சாரம் இதுவே :—

“நான் சிலைகளையும், பொருள்களையும் தொட்டுத்தொட்டு உருவின் அழகை அறிகிறேன். சிலர் ஏசுநாதரின் திருவுருவப் படத்தை நீ பார்ப்பதற்கில்லையே; இயற்கையில் எத்தனையோ அழகான காட்சிகள் உள்ளன; நீ காணக் கொடுத்து வைக்கவில்லையே என்கிறார்கள். என் கண்கள் புறத்திலுள்ள சித்திர விநோதங்களைக் காணமுடியவில்லை; ஆனாலும் என் அகத்தின் இருளில் மின்னிப்பறக்கும் ஊகச்சித்திரங்களின் அற்புத சௌந்தரியம் வெளியே காணும் பொருள்களுக்கு வருமா என்பது சந்தேகம். ஏசுநாதரை என் உள்ளத்தில் தேஜோன்மயமாக நான் காண்கிறேன். அழகு என்பதைப் புறக்கண் காண்பதரிது; அகக்கண் காண்பதே அழகு. புறக்கண் மேலழகும் தோலழகுமே காணும்; அகக்கண் உள்ளழகை, உயிரழகைக் காணும். அகக்கண்ணால் உருவை மட்டுமன்று, உயிர்த்துடிப்பையும் நான் காண்கிறேன். உயிருக்குயிரான பரமபிதாவையும் உணர்கிறேன்; பிஷப் ஐயா, என் இருளுலகில் ஆனந்த மின்னலைப் போல் என் ஊகம் மின்னிப் பறந்து விளையாடுகிறது. இனி எனக்குக் கண்ணில்லாத் துயரமில்லை. இறைவன் அகக்கண்ணை திறந்துவிட்டான்......”

ஹெலன் நல்ல கவிதைகளை ஊன்றிக் கற்றாள். கவிதையை உள்ளத்தால் அனுபவித்தாள். “கவியின் உள்ளம் என்னுள்ளத்தில் துடிக்கவேண்டும்; அப்படிப்பட்ட இனிய கவியே கவி” என்றாள். இந்த மேதாவிப் பெண்ணைப் பெரிய அறிவாளரும் கண்டு வியந்தனர். அவருள் மிஸ்டர் ஆனகோஸ் (Anogos) ஒருவர்.

ஆனகோஸ் போஸ்டனில் குருடர் பள்ளிக்கூடம் நடத்தினார். ஒருநாள் ஹெலென் கெல்லெர் ஸல்லிவனுடன் அங்கே சென்று குழந்தைகளுக்கு ஒரு கதை சொன்னாள். அதை எல்லாரும் மெச்சி ரசித்தனர். ஆனகோஸ், “ஹெலென் நீ என் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு கதை எழுதித் தா” என்றார். “ஆஹா” என்று ஹெலென் ஒப்புக்கொண்டாள்.

இரவு பகலாகப் பொறுமையுடன் வரி வரியாகத் தடவித்தடவி எழுதி, ஹெலென் ஓர் இனிய கதையை அமைத்தாள்; அதைக் கண்ட பெற்றோர் வியந்தனர். அதற்குப் “பனியரசன்” என்று பெயரிட்டனர். மிஸ்டர் ஆனகோஸ் அதை வியந்து குழந்தைகளுக்கும் சொல்லித்தந்து ஒரு பத்திரிகையிலும் வெளியிட்டார்.

எழுத்துலகின் பொறாமை இந்தக் குருட்டுக் குழந்தைமேல் பாய்ந்தது. “ஹூம்


நரையை ஒழியுங்கள்!



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலைன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: அப்பா & கோ., கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

**கேடரைன்**



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவிர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ 2/-

ஏஜண்ட்ஸ்: அப்பா & கோ., கெமிஸ்ட்ஸ்.
286, சைனா பஜார் ரோட், மதராஸ்,

ஹெலென் கெல்லெர் காப்பி யடித்துவிட்டாள். இது சுயமான கதையில்லை. மார்கரெட் காம்பி (Margeret Cambe) எழுதிய பனித்தேவதைகள் (Frost Fairies) என்ற கதையின் தழுவல். இப்படிக் காப்பி யடிக்கிற எழுத்தாளரை உதைக்க வேண்டும்... விலக்கவேண்டும்" என்று கூச்சலிட்டனர் சிலர்... ஒருவர் மார்கரெட் காம்பியைத் தூண்டிவிட்டுப் பிராது போடச் செய்தார். விஷயம் விசாரணைக்கு வந்தது. ஹெலென் காம்பியின் கதையைப் படித்ததே இல்லை என்றாள். அறிவாளர் பனியரசனைப் படித்தனர். ஒத்துப் பார்த்தனர். ஹெலென் காப்பி யடிக்கவில்லை; அவள் கதை யமைப்பே அலாதி...என்று தீர்மானித்தனர். பிறகு காம்பியே ஹெலெனை மெச்சினாள்.

இந்தப் பழிதூற்றல் ஹெலென் மனத்தைச் சங்கடப்படுத்தியது. அன்றுமுதல் அவள் கதை எழுதுவதை விட்டுவிட்டாள்.

ஒருநாள் ஹெலென் சிகாகோ காட்சித் திருவிழாவிற்குச் சென்றாள். அமெரிக்கத் தலைவர் இந்தக் குழந்தையின் அறிவும் திருவுங் கண்டு, அவள் விருப்பப்படி காட்சிச் சாலையைக் கானாச் சீட்டளித்தார். ஹெதலன்ஸல்லிவனுடன் சுற்றிப்பார்த்து, எல்லாம் உணர்ந்து "ஆ, உலகில் எவ்வளவு அதிசயமான வஸ்துக்கள் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் என் மனக்கண்ணால் கண்டு, எழுத்தோவியமாகத் திட்ட வேண்டும்" என்று உறுதிகொண்டாள். ஹெலென் தனியேயிருந்து தன் எண்ணங்களை எல்லாம் எழுதிவைத்தாள். இருப்பினும் தன் மனதை வாய்விட்டுச் சொல்லத் துடித்தாள். நாய் குரைக்கும்போது கழுத்தைப்பிடித்துப் பார்ப்பாள். பூனை மியா என்னும் போது வாயைத் தடவிப்பார்ப்பாள்; தாயும், ஆசிரியையும் பேசும்போது உதட்டையும், தொண்டையையும் தடவித் தானும் பேசிப் பார்ப்பாள். விநோதமான கூச்சலிடுவாள். இவள் ஆர்வத்தைக் கண்டாள்; மிஸ் ஸாரா புல்லர் (Sarah Fuller) என்னும் பெண்மணி. இவள் பல செவிட்டுக் குருடரைப் பேசவைத்தவள். இவள் பெரு முயற்சிகொண்டு, நாக்கு வணங்கி ஹெலென் தெளிவாகப் பேசும்படி செய்துவிட்டாள். ஒருநாள் "அம்மா, என் ஆன்மா சுதந்தரம் பெற்றது. கட்டொழிந்தது...என் உள்ளம் இனிச்சொல்லருவியாகப் பெருகிவரும்" என்றாள்; தாயார் களிதுள்ளி "அம்மா ஹெலென்! பேசு, குழந்தாய் பேசு" என்று கட்டியணைத்து முத்தமிட்டு இன்பக்கண்ணீர் வடித்தாள். தந்தை பொங்கி மகிழ்ந்தார். ஹெலென் பேச்சுடன் நிற்கவில்லை; "அம்மா, நான் வீராங்கனை; பார் என் தைரியத்தை என்று ஏரியில் நீந்தினாள்; குதிரைச்சவாரி செய்தாள்; படகோட்டினாள்; பந்தும் விளையாடினாள்! அடி பெண்ணே, இதெல்லாம் நீ செய்யமுடியாதடீ என்றால், "நான் மனம் வைத்ததைச் செய்தே முடிப்பேன்" என்று தாவுவாள் ஹெலென்.

ஒருநாள் ஹெலென் தெருவில் நடக்கும் போது, "குருடனம்மா, ஒரு காசு கொடு" என்றொரு குழந்தை அவள் கையைப்பிடித்தது. ஹெலென் குழந்தையை வாரியெடுத்து அணைத்து-வீட்டிற்குக் கொண்டுவந்தாள். குழந்தையின் விபரமெல்லாம் கேட்டறிந்தாள்; அவன் பெயர் டாமி; அனாதை; கண் தெரியாது, பஞ்சை.

ஹெலன் "டாமி, நானும் குருடிதான்; என் பிள்ளைபோல் உன்னை வளர்ப்பேன்" என்றாள்; அவனுக்குப் பேசப் படிக்கச் சொல்லித்தந்தாள். அவன் ஓராண்டில் எழுதவும் பேசவும் நன்றாகப் பயின்றான். ஹெலென், அவன்படத்துடன் பிஷப் ப்ரூக்ஸுக்கு ஒரு கடிதம் எழுதினாள்; அவர் ஹெரால்டில் அப்படத்தையும் கடிதத்தையும் வெளியிட்டு ஹெலென் கெல்லரைப் பற்றிக் கட்டுரையும் எழுதினார். சில செல்வர் ஹெலெனுக்குப் பணம் அனுப்பினர். அதைக்கொண்டு அவள் குழந்தைத்தோட்டம் (Kinter-garten) ஒன்று ஏற்படுத்தி, அனாதைக் குழந்தைகளைத் தாய் போலப் பிரியமாக வளர்த்தாள். அவளுக்குப் புத்தகம் படிப்பதில் பிரியம்; தன் ஊரில் புத்தகசாலை யில்லை; ஹெலென் "நான் என் சொந்த ஊரில் அறிவு பரவ ஒரு நூலகம் காணப்போகிறேன்; எல்லோரும் இயன்றதைச் செய்யுங்கள்." என்று பத்திரிகைகளில் அறிவித்தாள். ஒரு வாரத்தில் பணம் வந்து குவிந்தது. ஒரு கனவான் நிலந்தந்தார். மறுவருஷமே நூலகம் கட்டிமுடிந்து ஏராளமான நூல்களும் அதில் இடம்பெற்றன. ஹெலென் ஏராளமான நூல்களைப் படித்தாள். ஆங்கிலத்

துடன், பிரஞ்சு, லத்தின், ஜெர்மன் முதலிய பாஷைகளையும், தத்துவம், சரித்திரம், கணக்கு முதலிய கலைகளையும் கற்றாள். அவளுக்குச் சர்வகலாசாலைப் பட்டம் பெறத்தோன்றியது. ராட்க்ளிப் கல்லூரியில் (Radcliff college) சேர்ந்து சிரமப்பட்டுப் படித்து இந்தக் குருடி கணக்கில் முதன்மையாக, பி.ஏ. பட்டமும் பெற்றாள். ஆங்கில உலகம் முழுதும் இச்சம்பவத்தை 'அதிசயம் அதிசயம்' என்று போற்றியது. அமெரிக்கத் தலைவர் டாக்டர் பட்டமளித்தார்.

ஹெலென் டாக்டர் கெல்லெரானாள். பட்டம் பெற்றதுடன் நிற்கவில்லை; "படிப்பும் பட்டமும் சமுதாயத்தில் எனக்கு ஓர் இடமளித்தன; அந்த இடத்தில் ஊன்றிக்கொண்டு என்போன்ற ஏழைக் கபோதிகளுக்கு நான் தொண்டுசெய்வேன்" என்று டாக்டர் கெல்லெர் எழுந்தாள். உலகில் உள்ள குருடர் செவிடர் பள்ளிக்கூடங்களைச் சுற்றிப்பார்த்தாள்; குழந்தைகளுக்குக் கதை சொன்னாள். லண்டனில் அவள் குருட்டுக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டிச் சிலகாலம் உதவினாள். அமெரிக்காவில் செவிடு குருடு என்று எந்தக் குழந்தையிருந்தாலும், டாக்டர் கெல்லெருக்கெழுதினால் உடனே உதவி கிடைக்கும். கெல்லெர் நாடெங்கும் செவிடு குருடு பள்ளிக்கூடங்கள் நிறுத்தித், தக்க ஆசிரியைகளைப் பயிற்றி, ஆயிரக்கணக்கான ஏழைக் குழந்தைகளின் குறையைத் தீர்த்தாள்.

அவள் முதலில் இருபது லக்ஷம் டாலர் வசூலித்து ஏழைக் குழந்தைகளுக்கே செலவிட்டாள். பிறகு கோடிக் கணக்கான பணம் வந்து குவிந்தது. அத்தனையும் குறைவுபட்ட குழந்தைகளின் உபயோகத்திற்கே சென்றது.

இன்றுலகம் டாக்டர் கெல்லெரை "மஹா பரோபகாரி; அற்புத மேதாவி" என்று கொண்டாடுகிறது. டாக்டர் கெல்லெர் நிலையம் உலகெங்கும் புகழ்பெற்றது.

நமதுநாட்டில் "கண்ணில்லாக் கபோதி தாயே" என்று வரும் ஏழைகளைக் காக்க ஒரு ஹெலென்கெல்லெர் உதிக்கவேண்டும்.


# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனா பஜார், மாம்பலம், மயிலாப்பூர்,
— திருவல்லிக்கேணி, பெரியமேட் —

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | சாலூர் | திருச்சிராப்பள்ளி |
| அனகாபள்ளி | மதுரை | சீயாழி | திலாறு (சிகாகோல்) |
| சிதம்பரம் | மருடேரு | தாடபள்ளிக்கூடம் | வேலூர் |
| சித்தூர் (கொச்சி) | பாலக்காடு | தஞ்சாவூர் | விஜயபுரம் (திருவாரூர்) |
| காஞ்சீவரம் | பார்வதிபுரம் | திருநெல்வேலி ஜங்ஷன் | விருதுநகர் |
| ஈரோடு | புதுக்கோட்டை | திருநெல்வேலி டவுன் | விஜயநகரம் |
| காரைக்குடி | | | |

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் நடத்தப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

# அழகாயி

"புனர்ஜன்மி"

தஞ்சை ஜில்லா முன்ஸிப் வாஞ்சிநாத அய்யருடைய வீட்டுப் புழக்கடையில் தான் நம் கதை ஆரம்பமாகிறது. ஏனெனில் இக் கதையின் கதாநாயகியான அழகாயி என்றவளும் கதாநாயகனான தோளப்பன் என்றவனும் தமக்குரிய வெவ்வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்த இடம் மேற்சொன்ன புழக்கடைதான்.

அன்று வெள்ளிக்கிழமை காலை மணி எட்டு இருக்கும். கையில் வைக்கோல் சுருணையைப் பிடித்துக்கொண்டு மாட்டுத் தொழுவத்தில் கட்டியிருந்த வெள்ளைப் பசுமாட்டின் உடலை இழுத்து இழுத்துத் தேய்த்துக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தான்தோளப்பன். மாட்டுக்கொட்டிலுக்குச் சில அடி தூரத்தில் இருந்த கிணற்றங்கரையில் ஒரு கூடை பத்துப் பாத்திரங்களைப் பரப்பிக்கொண்டு புளியும் சாம்பலும் போட்டு அவைகளைத் துலக்கிக்கொண்டிருந்தாள் அழகாயி.

அழகாயிக்குப் பதினெட்டு வயதிருக்கும். நல்ல கறுப்பு—தொட்டால் ஒட்டிக்கொள்ளும்படி அவ்வளவு கறுப்பு. ஆனால் களையுடன்கூடிய குறுகுறுப்பான முகம். அலட்சியமாய் அள்ளிச் சொருக்குப்போடப்பட்டிருக்கும் அவளது சுருள் சுருளான கருங்கூந்தலின் பாரத்தைத் தாங்கப் போதிய சக்தி இல்லாமல்தானோ என்னவோ அவள் தலை எப்போதும் ஒருபுறம் சாய்ந்தபடி இருக்கும். அவளுடைய ஆரோக்கியமான சரீரத்தின் ஒவ்வொரு பாகத்திலும் யௌவனத்தின் சோபை பொங்கிப் பூரித்து நர்த்தனமாடியது.

மாட்டுக்கொட்டிலில் மாடு குளிப்பாட்டிக் கொண்டிருந்த தனது அன்பன் தோளப்பனை அடிக்கடி கடைக்கண்ணால் கடாக்ஷித்தபடி கழுத்துவரைக்கும் கரி ஏறியிருந்த வெண்கலப் பானையை உருட்டி உருட்டித் தேய்த்து அதை வெளுக்கடிக்க வெகுவாய்ச் சிரம்பட்டுக்கொண்டிருந்தாள் அவள். இல்லாவிட்டால் வீட்டுப் பெரியம்மா அவளைக் கொத்திப்பிடுங்கிவிட மாட்டாங்களா?

அழகாயியின் கடைக்கண் வீச்சு தோளப்பனைச் சும்மா இருக்கவிடவில்லை. பரிகசிக்கும் குரலில், "இந்தா! ஏ புள்ளே! ஒன்னத்தானே? இண்ணைக்கு அந்த வெங்கலப் பானையை ஓட்டையாக்கிட தீர்மானம் செஞ்சுப்புட்டியா? நானும்தான் அப்போ பிடிச்சு கவனிச்சுக்கிட்டிருக்கேன்! அந்த ஒரு பாத்திரத்தையே வச்சுக்கிட்டு உருட்டி பெரட்டி, கவுத்து நிமிர்த்து, தட்டி கொட்டி, கொலைபண்ணுறயே! அதுக்கு மாத்திரம் வாயிருந்தால் அது ஒரு குரல் அழுவும் தெரியுமா? உனக்குப் புத்திகித்தி பெசகிடுச்சான்னு கேக்கறேன்!" என்று தோளப்பன் அழகாயியின் வாயைக் கிண்டினான்.

தோளப்பனைப்பற்றி வர்ணிக்க அதிகமாக ஏதுமில்லை. திடகாத்திரமான தேகத்தையுடையவன். வயது இருபத்தைந்துக்குள்ளாகவே இருக்கலாம். அழகாயியைவிட நிறத்தில் வெளுப்பாக இருந்தாலும் கூட அவன் முகத்தில் கவர்ச்சியோ கம்பீரமோ மருந்துக்குக்கூட கிடையாது எனலாம். மேல் உதடே சற்றுத் தடித்துத் தூக்கலாக அமைந்திருந்தபடியால் அவனுடைய நீண்ட முன்பற்கள் இரண்டும் சதா வெளியே எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும். இப்பேர்ப்பட்டவன் அழகாயியின் கண்களுக்கு மன்மதனாகத் தோன்றினான் என்றால் அது காதலின் கூத்துத்தானே?

தன்னை வலுச்சண்டைக்கு இழுத்து விளையாட்டுக்கு அஸ்திவாரம் நாட்டிய தோளப்பனை ஒய்யாரமாய் நிமிர்ந்து பார்த்தாள் அழகாயி. முத்துப் போன்ற தன் பல் வரிசைகளைக்காட்டி, கலகலவென நகைத்தபடி "ஓஹோ! என்னைச் சொல்ல வந்தூட்டயாக்கும்! நானும்தான் சிரிப்பை அடக்கிக்கிட்டு இந்நேரமா பார்த்துக்கிட்டே இருக்கேன்! அந்த ஒரு மாட்டையே பிடிச்சுக்கிட்டு, தோல் உறிஞ்சு போறாப்பலே, முக்கி முக்கி தேச்சு, போதைக் களிக்கிறாயே? அப்பறம் அந்த செனெப்பசுவை எப்போதேச்சு குளுப்பாட்டறது? ரெண்டு கண்ணுக்குட்டி வேறே குளுப்பாட்டியாவணும்! நீ வேலை செய்யற ஒழுங்குக்கு என்னைப் பழிக்க வந்துட்டியே! வெக்கமா இல்லே ஒனக்கு?" என்று சுடச்சுடத் தோளப்பனுக்குப் பதில் சவால் கொடுத்துவிட்டு மறுபடியும் குனிந்து பாக்கிப் பாத்திரங்களைப் பரபரவென்று துலக்கத் தொடங்கினாள்.

அழகாயியின் மிடுக்கான பேச்சிலும், ஓய்யாரப் பார்வை வீச்சிலும் அகப்பட்டு மயங்கித் திக்கு முக்காடினான் தோளப்பன். அவன் உடம்பெல்லாம் புல்லரித்தது. தன் கைவேலையை அப்படியே நிறுத்திவிட்டு, மாட்டின்மீது உல்லாஸமாய்ச் சாய்ந்தபடி நின்றுகொண்டு, தன் ஆருயிர்க் காதலியை உற்றுப் பார்த்துக்கொண்டே, சில வினாடிகள் மெய்மறந்து போனான். பிறகு சுற்று முற்றும் பார்த்துவிட்டு, யாரும் அருகில் இல்லை என்று எண்ணி, தைரியமாய், "உச்! அளகு, இப்படி பாரு என்னை! இன்னொரு வாட்டி முன்னெபோல கண்ணெ உருட்டிப் பாரு! என் தங்கமில்லையா?" என்று தணிந்த குரலில் கொஞ்ச ஆரம்பித்து விட்டான்.

இப்பேர்ப்பட்ட ரசமான காதல் நாடகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது தானா வீட்டு பெரியம்மா—முன்ஸிப்பின் தாயார்—சுத்த அசந்தர்ப்பக் குடுக்கையாய் அங்கு வந்து தொலையவேண்டும்? அவளுடைய பாம்புச் செவியும் கழுகுப் பார்வையும் நமது வேலைக்காரக் காதலர்களுக்கு எவ்வளவு சங்கடத்தை உண்டாக்கி விட்டன என்பதை இதற்குள் வாசகர்களே ஒரு விதமாய் ஊகித்திருப்பார்கள்.

"ஏண்டீ தட்டுவாணி! எத்தனை நாழியா பத்துத் தேக்கிறதடீ? உன் குலுக்கும் மினுக்கும், கண் சிமிட்டலும் நாளுக்கு நாள் அதிகமாயிண்டுன்னாவறது! அந்த தடிக் கட்டேலே போறவன்–தோளப்பன்-ஒன்னை'யே சுத்திச் சுத்தி வட்டமிட்டுண்டு, வரவர வீட்டு வேலையில் துளிக்கூட சிரத்தை வைக்கிறதில்லை! என்ன அநியாயம் இது! ஏண்டா தடியா! ஏழு மணிக்கே மாடு குளுப்பாட்டறேன்னு சொல்லி இந்தப் பக்கம் வந்தவன் மாட்டுக் கொட்டாயிலேயே இப்படி வேரோடிப் போய்ட்டாயே! நீ நாசமாப் போக! இனிமே நீ எப்போ மார்க்கெட்டுக்குப்போய் கறிகாய் வாங்கிண்டு வந்து, நான் எப்போ சமைக்கிறது? சீ கழுதை! வெட்கமா யில்லை? பல்லை இளிக்கிறயே? இந்த மினுக்கியைத் தொலைச்சாதான் நீ உருப்புடுவே! இந்தாடீ அழகாயி! ஊம், ஊம்! சுருக்கப் பாத்திரங்களைக் கழுவி இப்படி கொண்டுவந்து வை, அலம்பி வெச்சுட்டு நான் ஸ்னானம் பண்ணனும்" என்று சரமாரியாகக் கூச்சல் போட்டுவிட்டு, கிணற்றி விருந்து ஜலம் இழுக்கத் தொடங்கினாள் முன்ஸிப்பின் தாயார்.

இதற்குள் அவள் கோபம் கொஞ்சம் சாந்தி அடைந்துவிட்டபடியால் தோளப்பனைப் பார்த்து "டேய் தோளா, சீக்கிரம் மார்க்கெட்டுக்குப் போய், கறிகாய் வாங்கிண்டு ஓடி வரணும் தெரிஞ்சுதா? சின்னம்மாளைக் கேட்டு சில்லறை வாங்கிண்டு புறப்படு சுருக்க. மசமசன்னு நிற்காதே. பட்டணத்துலேருந்து சம்மந்திப் புள்ளை—சின்னம்மாவின் அண்ணா—ஏதோ கோர்ட் அலுவலா வந்திருக்கு. இப்போதான் காலை ரயிலிலே வந்துது. சீக்கிரம் சமையல் ஆகணுமாம்" என்று தோளப்பனை மாட்டுக் கொட்டிலைவிட்டுக் கிளம்பச் செய்தாள்.

சூடு விழுந்ததும் தோளப்பனின் உடம்பிலும் சுரணை வந்தது. பரபரக்க இன்னொரு பசுமாடு கன்றுகள் இவைகளையும் தேய்த்துக் குளிப்பாட்டிவிட்டு, எல்லாவற்றிற்கும் லக்ஷணமாய் மஞ்சள் குங்குமம் இட்டுவிட்டு, ஒருவழியாய் மாட்டுக் கொட்டிலைவிட்டுப் பெயர்ந்து வீட்டின் உட்புறம் வந்தான். இரண்டாம்கட்டின் தாழ்வாரத்துத் தூணில் மாட்டியிருந்த கைப்பையை எடுத்துக் கொண்டு, எதிர்ப்புறத் தாழ்வாரத்துத் தூண் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு குழந்தைக்குக் கிண்டியினால் எதையோ போட்டிக் கொண்டிருந்த வீட்டுச் சின்னம்மாவிடம்—முன்ஸிப் மனைவியிடம்—வந்தான்.

"சின்னம்மா, சில்லறை தாரீங்களா? மார்க்கெட்டுக்கு போய் வறேன்" என்றான் தோளப்பன் பையை ஆட்டிக்கொண்டே.

"சித்தே இருடா தறேன். பாலாடை இல்லாமல் எத்தனை கஷ்டமா இருக்கு? கிண்டியினால் விளக்கெண்ணை போட்டினால் அதைக் குடிக்க இந்த துஷ்டு என்ன பாடு படுத்துறது! இன்று என் பட்டுப் புடவை எல்லாம் விளக்கெண்ணை அபிஷேகம்தான் போ!" என்று புலம்பிக்கொண்டே குழந்தையோடு மல்யுத்தம் செய்து எண்ணெய் புகட்டிக் கொண்டிருந்தாள் தாயார்க்காரி.

சற்று முன்னால்தான் ஊரிலிருந்து வந்து இறங்கிய முன்ஸிப்பின் மைத்துனன்–போலீஸ் இன்ஸ்பெக்டர் பூதலிங்கம்-அந்தச் சமயத்தில் அங்குத் தோன்றி, தன் தங்கையைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே "இதென்னடீ பட்டம்மா! புதுமாதிரியாக இருக்கிறதே நீ குழந்தைக்கு எண்ணெய் போட்டுகிறது? கிண்டியினால் போட்டுகிறாயே? ஏன் பாலாடை கிடையாதா? இல்லாவிட்டால், இந்தக்காலத்துப் பலவித பாஷன்களில் (Fashion) கிண்டியினால் எண்ணெய் போட்டுவதும் ஒரு பாஷனோ?" என்று கேட்டான்.

"போ அண்ணா! உனக்கு எதுக்கெடுத்தாலும் கேலிதான். பாஷனும் இல்லை மண்ணாங்கட்டியும் இல்லை! கல்லாட்டமா இருந்த வெள்ளிப் பாலாடை ஏழெட்டு நாள்களுக்கு முந்தி எப்படியோ மாயமாய் மறைந்து போய்விட்டது! இதே மாதிரிதான் அன்றைக்கும் குறட்டோரத்தில் உட்கார்ந்துகொண்டு குழந்தைக்கு எண்ணெய் போட்டுவிட்டு, பாலாடையை இப்படிதான் அருகில் வைத்துவிட்டு, ஏதோ அவசர ஜோலியாய் எழுந்து உள்ளே போய்விட்டேன். பிறகு ஒரு மணிநேரம் கழித்து, குளிக்கப் போகும் பொழுது பாலாடையைப் பார்த்தேன். வைத்தவிடத்தில் காணவில்லை. வீடு பூராவும் தேடியாகிவிட்டது, ஒன்றும் பிரயோசனம் இல்லை. பாலாடை போனது போனதுதான். மறுபடியும் வேறொன்று புதுசாய் வாங்கவோ பண்ணவோ லேசில் கைவருகிறதா?" என்று அங்கலாய்த்துப் பெருமூச்சு விட்டாள்.

இதற்குள் "சின்னம்மா, துட்டு தர்ரீங்களா? நேரமாவுதே. அப்புறம் பெரியம்மா என்னையல்ல திட்டுவாங்க!" என்று காலைத் தேய்த்துக்கொண்டு நின்ற இடத்தில் நிலைகொள்ளாமல் பறந்தான் தோளப்பன்.

போலீஸ் பூதலிங்கம் ஓரக் கண்ணால் தோளப்பனைக் கவனித்தபடி மனதிற்குள்ளேயே ஏதோ முடிவுகட்டிக்கொண்டு ஒரு மாதிரியாகச் சிரித்தான்.

ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டு "அப்படியா சேதி? பாலாடையைப் பறிகொடுத்துவிட்டு நீங்கள் பாட்டில் தூங்குகிறீர்களாக்கும்! பட்டு, அந்தப் பாலாடையைத் திருடின ஆசாமி தன் வாயினாலே தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்யாவிட்டால் என் பெயர் பூதலிங்கம் இல்லை! இன்று தோளப்பன் மார்க்கெட்டுக்குப் போகவேண்டாம்! தெரிஞ்சுதா? எனக்குப் பத்து மணிக்குள் ஒரு வற்றல் குழம்பு சாதமும் சுட்டப்பளாமும் தயாராகிவிட்டால் போதும். உன் மாமியாரிடம் இப்போதே சொல்லிவிடு. மாப்பிள்ளை கூடத்தான் ஊரில் இல்லை." என்று கூறிவிட்டு விறைப்பாய்த் தோளப்பன் பக்கம் திரும்பி அவனை ஒரு பார்வை பார்த்தான் பூதலிங்கம்.

அப்பாவி தோளப்பன் வெலவெலத்துப் போனான். குபீரென்று அவன் தேகமாத்யந்தம் வியர்வை வெள்ளம் எடுத்தது. காரணம் கண்டுபிடிக்க முடியாத ஒரு பீதி அவனைப்

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!
நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்
புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்
M. N. நாகேந்திரம் ஸன்ஸ்
ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.
(மலைவாசல் உள்மண்டபம்)
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.
N. B.—உயர்ந்த பனரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

பற்றிக்கொண்டது. தன்னைக் கொடூரமாய் விழித்துப்பார்த்த பட்டணத்துப் போலீஸ் ஐயாவின் கண்களை நேரடியாய்ப் பார்க்கக் கூசித் தலைகுனிந்து கொண்டான்.

"டேய் தோளப்பா, இப்படி வாடா!" என்று கர்ஜித்தான் பூதலிங்கம்.

உண்மையில் அவன் தங்கை பட்டம்மா கூட அந்த அதிகாரக் குரலில் ஒலித்த பயங்கரத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு நடுங்கிப் போனாள்.

"அண்ணா, தோளப்பன்மேல் சந்தேகப் படாதே. அவன் நல்லவன். மானி!" என்று மெதுவாய்க் குறுக்கிட்டாள்.

"இதோபார் பட்டு! உனக்கு உலகவிஷயம் தெரியாது. எண்ணெய் போட்டியாயிற்று என்றால் குழந்தையை எடுத்துக்கொண்டு உள்ளே போ நீ" என்று அவளையும் அதிகாரம் செய்து உள்ளே அனுப்பிவிட்டு மறுபடியும் தோளப்பன் பக்கம் திரும்பி "ஏண்டா குறவன் மாதிரி முழித்துக்கொண்டு அங்கேயே நிற்கிறாய்? இப்படி வந்து என் எதிரில் நில்லுடா என்கிறேன்"! என்று அதட்டினான்.

குளிர் ஜ்வரம் வந்தவன்போல் வெடவெடவென நடுங்கிக்கொண்டே பூதலிங்கத்தின் எதிரில் வந்து நின்றான் தோளப்பன்.

"எங்கே? அந்த வேலைக்காரக் கிழவி ஒருத்தி உண்டே! அவளையும் கூப்பிடு இப்படி!" என்று மற்றுமோர் இடி இடித்தான் பூதலிங்கம்.

விவரிக்க முடியாத கலவரமும் பயமும் அடைந்த தோளப்பன் கைகளைப் பிசைந்தான். நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டு விட்டது. பேச முடியவில்லை. வாய் குளறியபடி "இஇஇ...இஇப்பொ அந்தக் கெ...கெ... கௌவி இல்லிங்க. ஒரு பொ...பொ...பொ பொண்ணுதான் வேலை செய்யுதுங்க" என்று ஒரு வழியாய்த் திக்கி முடித்தான்.

"சரிதான்! அவளையும் இங்கே கூப்பிடு." தோளப்பன் அழகாயியைக் கூப்பிடுவதற்காக நகருவதற்குள் அவளே துடைப்பமும் கையுமாய், வீடு கூட்டும் நோக்கத்துடன் அந்தப் பக்கம்வந்து சேர்ந்தாள்.

"இவள்தானா அந்தப் 'பொண்ணு'? ஏ பிள்ளே! இப்படி வந்து நில்" என்று அவளைப் பார்த்து ஒரு அதட்டல் போட்டான் பூதலிங்கம்.

விஷயம் என்னவென்று விளங்காமல் அகல விழித்த கண்களுடன் தோளப்பனையும் பூதலிங்கத்தையும் மாறிமாறிப் பார்த்தபடி அவர்கள் எதிரில் பிரமித்து நின்றாள் அழகாயி.

"போனவாரம் இந்த வூட்டுலே ஒரு வெள்ளிப் பாலாடை காணாமல் போயிடுச்சே; அந்த விஷயம் தெரியுமா உனக்கு?" என்று சர்வ சாதாரணமாய் விசாரணையை ஆரம்பித்தான் பூதலிங்கம்.

"நல்லாத் தெரியுங்களே! அதான் வீடு பூரா அண்ணிக்கெல்லாம் தேடினோமே. எந்தப் பாவியோ கொண்டு போயிட்டாங்களே! பண்டம் ஆப்படவேல்லியே!" என்று வருத்தப்பட்டாள் அழகாயி.

"அந்தப் 'பாவி' நீதான்! உன்மேல்தான் எனக்குச் சந்தேகம்? எடுத்ததை மரியாதையாய்க் கொண்டுவந்து கொடுத்துவிடு. இல்லாவிட்டால் உன்னை ஜெயிலுக்கு இழுத்துப்போகச் சொல்லி உதைக்கச் சொல்வேன்" என்று மிரட்டினான் பூதலிங்கம்.

"ஐயோ சாமி! சத்தியமாய்ச் சொல்றேன். நான் அதை எடுக்கவே இல்லீங்க!" என்று ஓரே அலறலாய் அலறினாள் அழகாயி.

பூதலிங்கம், போலீஸ் டிபார்ட்மெண்டில் இவ்வளவு வருஷங்களாகத்தான் வேலைபார்த்து வந்ததினால் தனக்கு ஏற்பட்டிருந்த அனுபவ ரீதிகளை எல்லாம்—தண்டப் பிரயோகம் நீங்கலாக—கையாண்டு வெகு சாமர்த்தியமாய் அழகாயியையும் தோளப்பனையும் கேள்விகேட்டு விசாரணை செய்தான். ஒன்றும் பலன் இல்லை. அவர்கள் இருவரும் கண்ணீர்விட்டுக் கதறி அழுது, தங்கள் குலதெய்வத்தின்மீது ஆணையிட்டு, பாலாடையைத் தாங்கள் எடுக்கவே இல்லையென்று பிடிவாதமாய்ச் சாதித்தனர்.

தனது தோல்வியை ஒப்புக்கொள்ள விரும்பாத பூதலிங்கம் வெகுண்டு பொறுமையை இழந்தான். தனது இடுப்பில் கட்டியிருந்த தோல் பெல்ட்டை அவிழ்த்து, தோளப்பனின் வெறும் முதுகின்மீது சொடேர் சொடேர் என்று நான்கு வீறு வீறிவிட்டான். தோளப்பன் வலி பொறுக்கமாட்டாமல் குதியாய்க் குதித்துக்கொண்டு "ஐயோ சாமி, நான் ஒரு பாவத்தையும் அறியேனே! என்னைப் போட்டுக் கொல்றீங்களே! பெரியம்மா! சின்னம்மா! இங்கே வந்து என்னைக் காப்பாத்துங்களேன்! ஒங்களுக்குக்கூட என்மேலே இரக்கம் இல்லையா?" என்று நெஞ்சுருகக் கதறினான்.

தோளப்பன் அபயப் பிரதானம் வேண்டிய பெரியம்மா சின்னம்மாவின் உள்ளங்கள் அவனுக்காக இரங்கிற்றே இல்லையோ! ஆனால் அருகே நின்றிருந்த அழகாயியின் உள்ளம் பதை பதைத்தது. தோளப்பன் முதுகின்மேல் விழுந்த ஒவ்வொரு அடியும் அவள் இதயத்தின்மீது சம்மட்டியால் இடிப்பதுபோல் தாக்கிற்று. முதல் விறல் அவனுடைய முதுகின்மீது விழுந்த உடனேயே அவள் அந்தக்கண்ணராவியைக் காணச் சஹியாமல் தனதிரு கைகளினாலும் கண்களை மூடிக்கொண்டாள். "ஐயோ சாமீ! சாமீ! அத்தெ விட்டுடுங்கோ! அடிக்க வேண்டாமுங்கோ! பாலாடையை எடுத்தவ நான் தானுங்க. என்னை வேணும்னு கொல்லுங்கோ!" என்று ஏதோ ஆவேசம் வந்தவள்போல் பெரிசாய்க் கூச்சல்போட்டாள். கண்களைவிட்டுக் கைகளை எடுக்காமலே கத்தினாள்.

"அப்படி வா வழிக்கு!" என்று தன் குரலில் வெற்றி த்வனிக்கக் கூறிவிட்டுப் பெல்ட்டை மறுபடியும் இடுப்பில் அணிந்துகொண்டான் பூதலிங்கம்.

சமையல் உள்ளே இருந்த முன்ஸிப்பின் தாயார், மனைவி மற்றும் வாசல் அறையில் படித்துக்கொண்டிருந்த பெண் லீலா இவர்கள் எல்லோரும் தத்தம் வேலைகளை அப்படியே போட்டுவிட்டு, கூடத்தில் என்ன ரகளை என்றறியும் ஆவலுடன் ஓடி வந்தனர்.

இப்பொழுது அழகாயி தனது கரங்களைக் கண்களிலிருந்து அகற்றியிருந்தாள். அவளுடைய நேத்திரங்களிலிருந்து முத்து முத்தாய் நீர் உதிர்ந்துகொண்டிருந்தது. பயத்தால் நடுங்கும் உடலுடன் தலைகுனிந்து பூமியைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தாள்.

தனது முகத்தில் அருவருப்பும் அலட்சியமும் தோன்ற அழகாயியையே வெறித்துப் பார்த்தவனாய், அருகில் நின்றுகொண்டிருந்தான் தோளப்பன். அடிபட்ட வேதனையினால் அவன் கண்களும் சிவந்து கலங்கிக் கிடந்தன.

முன்ஸிப்பின் தாயார் கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு, பூதலிங்கத்தைப்பார்த்து, "என்ன அமக்களமப்பா இது?" என்று வியப்புடன் வினவினாள்.

"ஒரு அமர்க்களமும் இல்லை மாமீ! வெள்ளிப் பாலாடையை 'லவுட்டி'யவள் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டாள். அவ்வளவு தான்." என்று சிரித்தான் பூதலிங்கம்.

அந்தச்சிரிப்பு அழகாயியின் மனதை அனல்போல் எரித்ததை அவன் என்ன கண்டான்?

பிறகு "ஊம், எங்கே அந்தப்பாலாடை? கொண்டுவா இப்பொழுதே!" என்று அழகாயியைப் பார்த்து உறுமினான் பூதலிங்கம்.

"இல்லிங்க.........அ...அ...அது இப்போ எங்கிட்ட இல்லிங்க" என்று தடுமாற்றத்துடன் விக்கினாள்" அழகாயி.

"எடுத்து யாரிடம் கொடுத்தாய்? உண்மையைச்சொல். இல்லாவிடில் உன் முதுகுத்தோல்போய்விடும்" என்று கடுமையாய் எச்சரித்தான் பூதலிங்கம்.

அழகாயியின் குரலில் சற்றுமுன்பு காணபட்ட பயமும் கலவரமும் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்துகொண்டேவந்தது. ஏதோ திடசங்கல்பம்கொண்டு பேசவிரும்புகிறவள் போல் பூதலிங்கம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தயங்காமல் பளிச்சென்று பதில் சொல்லிக்கொண்டே போனாள்.

"அதை நான் யாரிடமும் கொடுக்கவில்லிங்க. வெள்ளிச்சாமான் கடெலெ வித்துப் புட்டேனுங்க,"


மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

# மேதாவின்

# ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனாக இப் புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலைப்படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணிவிட்டது.

## கே. எஸ். மேதா & கோ.,

மதராஸ்

“அது எந்தக்கடை? காட்டுவா. நானும் பின்னோடு வருகிறேன். திருட்டுச் சாமான் வாங்குகிற அந்தக் கடைக்காரனையும் வம்பில் மாட்டி விடுகிறேன்.”

“இந்த ஊர்க்கடையில் விக்கிலிங்க சாமி. பாலாடையெ திருடின அண்ணிக்கு கும்மாணத்திலேந்து (கும்பகோணம்) எங்க அத்தை மவ வந்திருந்தா, பாலாடையை நல்லா தட்டி நசுக்கி வெள்ளிக்கட்டிக் கணக்கா செஞ்சு அவகிட்டேகுடுத்து அனுப்பிட்டேனுங்க, அதே எடைக்கு என் காலுக்கு ஒரு சோடி பட்டைகொலுசு வாங்கி அனுப்பும்படி சொல்லியிருந்தேனுங்க. அவளும் அப்படி செய்தாளுங்க. முந்தாநேத்து கும்மாணத்துலேந்து ஆளு யாரோ வத்திச்சுங்க. அதுங்கிட்ட ஒரு சோடி பட்டைகொலுசு வாங்கி அனுப்பிச்சிருக்கா எங்க அத்தை மவ.”

“எங்கே அந்த கொலுசு?”

“வீட்டிலே வச்சிருக்கேனுங்க.”

“ஓட்டமாய் ஓடிப்போய் அதை எடுத்துக்கிட்டுவா! ஆனால் ஒரேயடியாய் அப்படியே ஓடிப்போயிடலாம் என்று மாத்திரம் நினைக்காதே! தெரிஞ்சுதா?”

அழகாயி அங்கிருந்து நகர்ந்து வாசல்புறம் வந்து படியைவிட்டுக் கீழே இறங்கும்பரியந்தம், தன்னையறியாமல் அவளையே பின்தொடர்ந்து சென்ற முன்ஸிப்பின் பெண் லீலா, அவள் கீழே இறங்கியதும் அவளிடமிருந்த கிளம்பிய ஒரு விம்மலைக் கவனிக்காமல் இல்லை. லீலாவின் இளகிய மனம் அழகாயிக்காகப் பரிந்தது. உள்ளே திரும்பி வந்து மாமாவைப்பார்த்து ‘பாவர்! அழகாயி சுபாவமாய் நல்லவள் மாமா! அவள் அந்த வெள்ளிப் பாலாடையைத் திருடியிருப்பாள் என்று என்னால் நம்பவே முடியவில்லை! யாருடைய துர்ப்போதனையோ இருக்க வேண்டும்; அல்லது கொலுசு அணிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையினால் தூண்டப்பட்டு அவள் இப்பேர்ப்பட்ட தகாத காரியத்தைச் செய்திருக்கவேண்டும்’ என்று இரக்கமும் கனிவும் தோய்ந்த குரலில் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள்.

தோளப்பனின் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. ஆத்திரத்துடன் ‘லீலம்மா, நீங்க நல்லா சொல்றீங்களே. ஆசைப்பட்டுக்குனு எதை வேணும்னு சேஞ்சுடலாமா? இண்ணக்கி வெள்ளிக்கொலுசுக்கு ஆசைப்பட்டுக்குனு வெள்ளிப் பாலாடையை திருடின சிறுக்கி, நாளக்கி தங்கக் காப்புக்கு ஆசைப்பட்டு கொலைகூட பண்ண தயாரா இருப்பாளுங்க! என்ன நான் சொல்றது. மெய் அல்லிங்களா? அந்தப் படுபாவிமுண்டை பண்ணின அக்கிரமத்துக்கு நம்ப பட்டணத்து ஐயா என் முதுவுத்தோலை அல்ல உரிச்சிட்டாரு” என்று தன் முதுகைத் தடவிக்கொண்டான்.

“நாலு அடி வாங்கினதினால் உன்னுடையது என்னடா குறைந்துபோயிற்று இப்பொழுது? நீ நிரபராதியென்று ருசுவாயிற்றே! அதற்குச் சந்தோஷப்படு” என்றான் பூதலிங்கம்.

“ஏண்டா தோளப்பா, அழகாயி மேலே நீ வச்சிருந்த ஆசையை இனிமேல் விட்டு விடுவாயாடா? பாவம், அப்புறம் அவள்கதி என்னடா? என்று அக்கரையோடு விசாரித்தாள் பன்னிரண்டு வயது சிறுமி லீலா. அதைக்கேட்டு எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

“போங்க லீலம்மா, அதன் பேச்சை விட்டுத் தள்ளுங்க இன்னமே. என்னமோ புத்தியில்லாமே அது ரொம்ப நல்ல பொண்ணுன்னு நெனச்சுக்கிட்டு மோசம் போனேங்க. செத்தாலும் அதன் மூஞ்சிலே இன்னொருவாட்டி நான் முளிப்பேனுங்களா?” என்று தீராத வெறுப்புடன் பதில் அளித்தான்.

இதற்குள் கொலுசை எடுத்துவரத் தன் குடிசைக்குச் சென்றிருந்த அழகாயி கையில் ஒரு சிகப்புக் காகிதப் பொட்டணத்தை எடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாய்த் திரும்பிவந்தாள். தான் சற்றுமுன்னர் பிரதிக்ஞை செய்ததை நடைமுறையில் நடத்திக்காட்ட விரும்புகிறவன் போல் தோளப்பன் சரேலென்று அவ்விடத்தை விட்டு அகன்றான். நகருவதற்கு முன்பு அவன் ஒருதடவை வெறுப்பும் ஆத்திரமும் குடிகொண்ட ஒருவிதக் கொடூரப்பார்வையை அழகாயியின்மீது வீசிவிட்டே சென்றான். அந்தப் பார்வையின் தீக்ஷண்யத்தைச் சஹிக்கமாட்டாமல் தன் கண்களை வேறு புறம் திருப்பிக்கொண்டு தலை குனிந்தாள் அழகாயி. கையில் வைத்திருந்த காகிதப் பொட்டலத்தைப் பூதலிங்கத்தினிடம் கொடுத்துவிட்டுச் சற்றே ஒதுங்கினாற்போல் நின்றாள்.

பூதலிங்கம் அதைப் பெருமையுடன் பிரித்துப் புது மெருகுடன் பளபளவென்று மின்னிய ஒரு ஜதை வெள்ளிப் பட்டைக் கொலுசைத் தூக்கித் தன் தங்கையிடம் நீட்டி “இந்தா உள்ளேகொண்டுபோய் வை பட்டம்மா. வாலு போச்சு கத்திவந்தது! பாலாடை பட்டைகொலுசாகப் புனர்ஜன்

மம் எடுத்துவந்திருக்கிறது. இனி மேலே நடக்கவேண்டியதைக் கவனிக்கலாம். இவ ளைப்பற்றிப் போலீசுக்கு ரிபோர்ட் செய்ய வேண்டும்'' என்றான்.

"சாமீ! ஒங்க காலுலே விழுந்து கும்பிட றேனுங்க! இதுதான் நான் மொதமொத செய்த களவுங்க. கடைசீது இதுவேண்ணு வச்சுக்குங்கோ! போலீஸ் கிலீஸ்ண்ணு வம்புலே மாட்டவேண்டாமுங்க. ஒங்க ளுக்கு கோடிபுண்ணியம் உண்டுங்க. இந்த விசயம் எங்க குருட்டு அப்பன் காதுலே விளுந்தா அவரு அவுமானம் தாங்காமே அப்படியே உசிரை விட்டுடுவாருங்க''. என்று கல்லும் கரையும்படிக் கதறி அழுது நெடுஞ்சாங்கட்டையாக கிழே விழுந்து வேண்டிக்கொண்டாள் அழகாயி.

முன்ஸிப்பின் தாயார், மனைவி, பெண் எல்லோரும் ஓரே முகமாய் அழகாயியின் மேல் இரக்கம்கொண்டு அவளுக்காகப் பரிந்துகொண்டு வந்தபடியால் பூதலிங்க மும் சும்மா இருந்துவிட்டான். அன்றைக்கே அவள் முன்ஸிப் வீட்டினரால் வேலையி லிருந்து நீக்கப்பட்டாள்.

அவள் தன் முகத்தைப் புடவைத் தலைப் மூடிக்கொண்டு விசித்து விசித்து அழுதபடி அங்கிருந்து கிளம்பிச்சென்ற பரிதாபகர மான காட்சி எல்லோர் உள்ளத்தையும் ஒரு கலக்குக்கலக்கிவிட்டது என்றே சொல்ல லாம். முக்கியமாய் முன்ஸிப்பின் பெண் லீலாவின் மனம்தான் அத்யந்த வேதனையை அனுபவித்தது. சமயம் வாய்த்தபொழு தெல்லாம் அழகாயியின் வாயைக் கிண்டி, பண்டும் பரிகாசமுமாய் அவளோடு பேசி விளையாடும் வழக்கம் உள்ள லீலாவுக்கு இனிமேல் அந்தமாதிரி ஒருத்தி கிடைக்கப் போகிறாளா என்ற ஏக்கம் அப்பொழுதே பற்றிக்கொண்டுவிட்டது.

அழகாயி வேலையை விட்டுச்சென்ற— அல்ல—துரத்தப்பட்ட ஒரு மாதத்திற்கெல் லாம் தோளப்பனும் தானாகவே முன்ஸிப் வீட்டு வேலையிலிருந்து நின்றுகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. காரணம் இதுதான். தோளப்பனுடைய ஜனனபூமியாகிய பூங்குளம் என்ற கிராமத் தில் வசித்துக்கொண்டு, அங்கிருந்த அல்ப சொல்ப நிலபுலன்களைக் கவனித்துக்கொண் டிருந்த அவனுடைய கிழத்தாய் நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந் தாள். சாவை எதிர்பார்த்துக்கொண்டிருக் கும் தான் தன் மகனைப் பார்க்க ரொம்ப ஆவலோடு இருப்பதாகத் தனக்குவேண்டிய மனுஷர்கள்மூலம் தஞ்சாவூருக்குச் செய்தி அனுப்பியிருந்தாள், ஒரு தாய்க்கு ஒரு மகனான தோளப்பனுக்கு அன்னையின்மேல் வாஞ்சை அதிகம். செய்தியைக்கேட்டு விட்டு ஒரு மாதம் ரஜா வாங்கிக்கொண்டு, தன் தாயைக்காணப் பதறிக்கொண்டு பூங் குளம் வந்தான். பிணியினால் துன்புறும் தன் தாயாரை அக்கரையுடன் கவனித்து சிசுருஷைசெய்து வந்தான். கிழவிக்கு வந் திருந்தது பார்சுவாயு ஆனபடியால் அவள் உயிர் இருக்கவும்மாட்டாமல் போகவும் மாட்டாமல் ஊசலாடிக்கொண்டு கிட்டத் தட்ட இரண்டு வருஷகாலம் பரிதவித்தது. கடைசியில் ஒருவழியாய் மூச்சு நின்றதும் தான் தோளப்பனால் பூங்குளத்தைவிட்டு நகரமுடிந்தது. இதற்குள் தஞ்சாவூரிலிருந்து முன்ஸிப் வாஞ்சிநாத அய்யர் மாற்றலாகித் தெலுங்குச் சீமைக்குப் போய்விட்டதாக அவன் அறிந்தபடியால் மறுபடியும் அவன் தஞ்சாவூருக்குப் போகவே இல்லை.

அன்றைக்கு முன்ஸிப் வீட்டை விட்டுக் கிளம்பிய அழகாயி சில நாட்களுக்கெல் லாம் தன் கபோதித் தந்தையையும் அழைத் துக்கொண்டு வேறு ஊருக்குப் போய்விட்ட தாக அவள் குடிசைக்கு அக்கம்பக்கத்தில் வசித்தவர்கள் பேசிக்கொண்டார்கள். எந்த ஊருக்குப் போனாள் என்று மாத்திரம் ஒருவராலும் நிச்சயமாய்க் கூறமுடியவில்லை.

(அடுத்த இதழில் முடியும்.)


சேலத்தில்

கல்யாணப் பட்டு ஜவுளி ரகங்கள் வாங்க சிறந்த இடம்

**கோபால பத்ம விலாஸ்**

385, கடைவீதி, சேலம்.

*Proprietors :*

S. N. PATHMANABA CHETTIAR

P. R. JAYAGOPALA CHETTIAR

# கதாநாயகன் சொன்ன கதை

*பெரியகுளம் சிப்பாய்*

நான் இன்னும் ஒரு கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டேன். அவ்வளவு சிலுசிலுப்பு. ஆனால் தூக்கம் மட்டும் வந்தபாட்டைக் காணோம். நானும் இரவு 10-மணி முதல் என்னால் ஆனமட்டும் தூங்க, முயன்று பார்க்கிறேன். மனதில் அமைதி இருந்தால்தானே தூக்கம் வரும். கொசுவலைக்கு வெளியே கொசுக்கள் வேறு ரீங்காரமிட்டு மன அமைதியின்மைக்கு ஒத்துப் பாடுகின்றன. கூடாரத்திற்கு வெளியே மழைத்தூறல் போடும் சப்தம் என் மன அமைதியின்மைக்குத் தாளம் போடுவதுபோலிருக்கிறது. காற்று வேறு 'ஹோ' என்று சப்தமிட்டு மனப்புயலைக் கிளறிவிடுகிறது, இவ்வாறிருக்கும்போது நான் எப்படித் தூங்குவது?

மன அமைதியின்மைக்குக் காரணம்? என் நண்பன் நீலகண்டன் இரவு எட்டு மணிக்கே திரும்பி இருக்கவேண்டியவன் இன்னும் திரும்பி வராததே. காலை பத்து மணிக்கு ஜப்பானியரின் மாச்சி என்ற விமானதளத்தின் மீது குண்டுவீசி அதைத் தாக்கச்சென்ற இந்திய விமானப் படையுடன் சென்ற அவன் எட்டு மணிக்கே வந்துவிடலாம் என எதிர்பார்த்தோம். இப்போது மணி பன்னிரண்டு. இன்னும் திரும்பி வரவில்லை என்றால், என்ன என்று நினைப்பது? நாம் நல்லதை நினைக்க ஆசைப்பட்டாலும் மனது முதலில் கெட்டதைத் தானே நினைக்கிறது. "ஒருவேளை அவன் விமானம் எதிரிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டு அவன்—அல்லது கைதியாகிவிட்டானோ? சே, அப்படி இருக்காது. திரும்பி விடுவான். ஓர் ஆபத்தும் நேராது" இவ்வாறெல்லாம் கண்டபடி என் மனம் தன் போக்காகச் சென்றுகொண்டிருக்கும்போது மனஅமைதி எப்படி உண்டாகும்?

நீலகண்டன் திறமைவாய்ந்த "ஏர் கன்னர்." ஆகாய விமானத்திலிருந்து குண்டு போடுவதும், அதிலிருக்கும் பீரங்கிகளால் சுடுவதும் அவன் வேலை. எதிரிகளைத் தாக்கச்சென்று திணற அடித்த 'பாம்பர்' விமானங்களில் சென்று குண்டு வீசி, பிரக்யாதி பெற்றவன் அவன். என் நண்பன் அவன்.

பர்மாவில் ஒரு நடுக்காட்டின் மத்தியில் அமைக்கப்பட்டிருக்கிறது எங்கள் விமான நிலையம். அந்தக் கோரமான காட்டில் நாலா பக்கமும் அடர்ந்து, ஓங்கி, இருண்டு வளர்ந்திருக்கும் மரங்களின் மத்தியில்தான் எங்கள் கூடாரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கூடாரத்திலும் மூவர் இருப்போம். 'சார்பாய்' (கட்டில்)களில் படுத்துக்கொள்வோம். காட்டிலிருக்கும் பாம்பு, புலி நரி முதலிய மிருகங்கள் எங்கள் நண்பர்கள். எங்கள் எல்லோருக்குள்ளும், என்ன ஜாதி என்ன மதமாயிருந்தாலும் சரி, அண்ணன் தம்பி போன்ற ஓர் ஒற்றுமை மனோபாவம் உண்டு. அப்படிச் சகோதரனிலும் மேலாகப் பழகிய நண்பன் வரவில்லையென்றால் அந்தக் கோரமான அந்தகாரத்தில் மன அமைதி எப்படி உண்டாகும்?

வெகுதூரத்திலிருந்து "டாண்" என்று ஒரு மணி அடிக்கும் சப்தம் கேட்டது. தரைப்படை தளத்திலிருக்கும் 'கார்டு' மணியை அடித்திருக்கவேண்டும். நானும் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டேன். வெளியே மழைத் தூறலின் ஓசை சற்று அடங்கிற்று. காற்றும் இளைப்பாறிக்கொண்டது. தூரத்தில் பாம்பின் வாயிலிருந்து தப்பிக்க முயலும் தவளையின் அபயக்குரல் கேட்டது. அடர்ந்த மரங்களிலிருந்து கோட்டானும், ஆந்தையும் தங்களுக்கே பிரத்யேகமான குரலில் கூவிக்கொண்டிருந்தன. இடையே "விர்" என்று லேசாக ஒரு சப்தம் கேட்டது. நான் எழுந்து உட்கார்ந்து உற்றுக் கேட்டேன். ஆம், அது விமான சப்தம்தான். சமீபத்தில் வர வரச் சப்தம் அதிகமாயிற்று. என் மனதிலிருந்த ஒரு பாரம் நீங்கிற்று. ஏனெனில் சென்ற விமானங்கள் எல்லாம் பத்திரமாகத் திரும்பிவிட்டன. 'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டேன்.

சிறிது நேரத்தில் அந்தகாரத்தைப் பிளந்துகொண்டு கையில் 'டார்ச்' லைட்டுடன் வந்துசேர்ந்தான் நீலகண்டன். 'உஸ்' என்று சிரமம் தீரப் பெருமூச்சு விட்டுக்கொண்டு கட்டிலில் உட்கார்ந்தான்.

"ஏன் இன்று இவ்வளவு நேரம் நீலகண்டா?" என்று கேட்டேன் நான்.

"இன்றைக்கு வேலை ரொம்ப அதிகம். ஜப்பானியன் தளங்களையெல்லாம் தகர்த்து

விட்டோம். பருவகால மழை வேறு ஆரம்பித்துவிட்டதால் நேரமாகிவிட்டது" என்ருன்.

"எதிரி விமானங்கள் எதிர்க்கவில்லையா?"

"எதிர்த்து என்ன பயன்? அவர்கள் விமானங்கள் பூராவும் பலியாகி விட்டன. அபிமன்யுவைப் போல் அவர்கள் விமானக்கூட்டத்திடையே விமானத்தைச் செலுத்தி அவர்களைக் கலங்கச்செய்து விட்டோம்" என்ருன்.

"அப்படி அவ்வளவு தைர்யமாக விமானத்தைச் செலுத்திய விமானிகன் யார்?"

"வாழ்க்கையிலேயே வெறுப்படைந்தவன் அப்படித்தான் உயிரைத் திருணமாக மதித்து விமானத்தைச் செலுத்துவான். அவன் தான் பைலட் ஆபிஸர். ஐயராமன் தான் நான் சென்ற விமானத்தின் விமானிகன்."

"அவருக்கு என்னப்பா வாழ்க்கையில் வெறுப்பு?"

"அதை ஏன் கேட்கிருய். சொல்லப் போனல் பெரிய கதையாகி விடும்." என்று சொல்லிக்கொண்டே உடைகளைக்கழற்றி விட்டுப் படுத்துக் கொள்ளத் தயாராஞன்.

எனக்கு அவர் கதையைத் தெரிந்து கொள்ள ரொம்ப ஆவல் உண்டாகி விட்டது. "கதையைத்தான் சோல்லேன். — ஆனல் ரொம்ப களைத்துப்போய் வந்திருக்கிருய்— தூக்கம் வருகிறதோ?" என்று ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத வார்த்தைகளைச்சொல்லி அக்கதையைக் கேட்க எனக்கு இருக்கும் ஆவலை வெளிப்படுத்தினேன்,

"தூக்கம் என்ன?— உனக்குக்கேட்கப் பிரியமானல் கேள்" என்று தொடங்கினன்.

அவன் சொன்னகதையை அவன் சொன்னபடியே நான் இங்கு எழுதுகிறேன்.

நீலகண்டன்.

"நான் சொல்லப்போகிற விஷயங்கள் மூன்று நான்கு வருஷங்களுக்கு முன்பு நடந்தவை. அதாவது ஜப்பானியர்கள் ரங்கூனைப் பிடிப்பதற்கு முன்பு நடந்தவை. அப்போது ஜப்பானியர்கள் ஜாவா, சிங்கப்பூர் முதலிய இடங்களைக்கூடப் பிடித்து விட்டார்கள். கீழ் பர்மாவிலிருந்து ரங்கூனை நோக்கி வெகு துரிதமாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள். நாள் தவறினுலும் ரங்கூன்மீது அவர்கள் குண்டு வீசுவது தவருது. ஜனங்களும் ரொம்ப கஷ்டப்பட்டார்கள். அப்போது ஜப்பானியர்களை எதிர்த்து விரட்டுவதற்காக ஓர் ஆகாயப் படை இருந்தது. ஏரோடிரோம் (விமான நிலையம்) இப்போது இருக்கும் இதே இடத்தில்தான் இருந்தது. அப்பொழுதெல்லாம் வேலை ரொம்ப அதிகமாக இருக்கும். ஆதலால் ஓய்வு கிடைக்கும் நேரங்களில் கொஞ்சம் சந்தோஷமாகக் காலம்கழிக்க ரங்கூன் நகரத்திற்குச் செல்லுவோம்.

இப்படித்தான் ஒரு நாள் எங்களுக்கு ஓய்வு கிடைத்தது. முந்திய நாள் ஜப்பானிய விமானங்களை விரட்டியடிப்பதில் நானும் ஜயராமனும் முக்யமான பங்கெடுத்துக் கொண்டிருந்தபடியால் அன்று நாள் முழுவதும் எங்களுக்கு ஓய்வு. நாங்களிருவரும் ஒரு "ஜீப்"பை எடுத்துக்கொண்டு நகரத்திற்குச் சென்ருேம். பல ஹோட்டல்களுக்கும், பார்க்குகளுக்கும் சென்று குஷியாகக் காலம் கழித்தோம். புத்தர் 'பகோடா' (கோவில்)களுக்குச் சென்று மனேசாந்தி அடைந்தோம். எல்லா இடங்களுக்கும் சென்றுவிட்டு மாலை நான்கு மணிக்குக் குதூகலம் நிறைந்த பூரித்த மனதுடன் எங்கள் கூடாரங்களை நோக்கி, திரும்பி வந்துகொண்டிருந்தோம். சந்தோஷத்துடன் 'ஜீப்'பைச் செலுத்தினல் மனது வேகமாகத்தானே செலுத்தச் சொல்லும். ஜயராமன் சொன்னபடி கேட்டு அந்த 'ஜீப்'பும் 'விர்' என்று சப்தமிட்டுக்கொண்டு தெருக்களைப் பிளந்து கொண்டு சென்றது.

திடீரென்று விமான எதிர்ப்பை அறிவிக்கும் சங்கு 'ஓ' என அலறியது. ஜனங்கள் தங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள 'ஷெல்டரை' நோக்கி ஓடினர். தெருவில் ஒரே குழப்பம். ஜயராமன் ஜீப்பின் 'ஹாரனை' சப்தமிடச் செய்துகொண்டே ஓட்டினர், வேகத்தை மட்டும் குறைக்க வில்லை. அதை விமானம் என எண்ணிக் கொண்டார் போலும். நான் அங்மிங்கும் வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்றேன். 'ஜீப்' முதல் தெருவின் முனையில் திரும்பினதோ இல்லையோ "ஐயோ—" என்று சப்தம் கேட்டது, மறுகணம் ஜீப் 'டக்'கென்று நின்றது. தெருவில் ஓடிக் கொண்டிருந்தவர்கள் 'ஓ' என்றலறினர். எனக்கு விஷயம் விளங்க ஒருநிமிஷம் ஆயிற்று. 'ஜீப்' யார்பேரிலோ ஏறிவிட்டது.

இருவரும் ஜீப்பிலிருந்து கீழே தாவினேம். கீழே சென்று பார்த்தோம்; ஒரு கிழவர்

மயங்கிக் கிடந்தார். வயது சுமார் 55 இருக்கும். நல்லவேளை, ஜீப் அவர்மீது ஏறவில்லை, மோதித்தான் இருக்கிறது. காலில் நல்ல அடி. ரத்தம் பொங்கிக் கொண்டிருந்தது. கைப்பையில் அவர் வாங்கி வைத்திருந்த மஞ்சள் நிறம் வாய்ந்த எலுமிச்சம் பழங்களும், காய்கறிகளும் தெருப் பூராவும் சிதறிக் கிடந்தன. ஜயராமன் 'சட்'டென்று தம் கைக்குட்டையையும், சட்டையில் சில பாகத்தையும் கிழித்து அவர் உடலில் ரத்தம் கொட்டும் காயங்களில் கட்டினார். இருவரும் சேர்ந்து மயங்கிக்கிடந்த கிழவரைத் தூக்கி ஜீப்பில் வைத்தோம். ஜயராமன் ஜீப்பை நேராக ஆஸ்பத்திரிக்குச் செலுத்தினார்.

ஜயராமன் கொஞ்சம்கூட மனத்தளர்ச்சி அடையவில்லை. ஆனால் 'நாம் தப்பிதம் செய்துவிட்டோம்' என்ற பாவம் மட்டும் அவர் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

ஆஸ்பத்திரியில் கிழவரை டாக்டர் பரிசோதனை செய்தார். "கால் எலும்பு முறிந்திருக்கிறது. கஷ்டப்பட்டு ஒன்றுகூட வைத்துவிடலாம். வயதாகிவிட்டதால் குணமான பின்புகூட முன்போல் நேராக நடப்பது கஷ்டம்; கொஞ்சம் நொண்டித்தான் நடக்கவேண்டியிருக்கும்" என்றார் டாக்டர். ஜயராமன் அடைந்த வருத்தத்திற்கு அளவே இல்லை. தம்மைத் தாமே நொந்துகொண்டார். "சே, முட்டாள்தனமான காரியம் செய்துவிட்டேன். என் மகிழ்ச்சிக்கு ஒரு கிழவரின் காலைப் பலியாக்கி விட்டேன்" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே இருந்தார் ஜயராமன்.

"இவர் யார்? இவர் வீட்டாருக்கு விஷயம் தெரியுமா?—இல்லாவிடில் தெரியப்படுத்தவேண்டாமா?" என்று ஒரு பிரச்னையைக் கிளப்பினார். விலாசத்தை அறிய மூவரும் அவருடைய சட்டைப் பையிலிருந்த காகிதங்களைப் புரட்டினோம். அதில் கீழ்க் கண்ட விலாசம் கிடைத்தது.

எஸ். சுந்தரம். ரிடயர்டு ரயில்வே சூபிரண்டெண்டு 25, மொகல் தெரு ரங்கூன்.

இருவரும் அவ்வீட்டில் சென்று இந்த அசுபச் செய்தியைச் சொல்ல ஜீப்பில் எங்கள் பிரயாணத்தை மறுபடியும் தொடங்கினோம். ஜீப்பை மெதுவாகவே செலுத்திக்கொண்டு போனார். மேலே ஆகாசத்தில் விமானங்கள் கோர சப்தமிட்டுப் பறந்துகொண்டிருந்தன. கொஞ்சதூரத்தில் 'டம், டம்' என்று குண்டு போடும் சப்தம் காதைப் பிளந்துகொண்டிருந்தது. மொகல் தெருவினுள் நுழைந்தோம். தெருவில் ஒரு 'காக்காய் குஞ்சு'கூட இல்லை. ஒவ்வொரு வீட்டின் விலாசத்தையும் பார்த்துக்கொண்டே சென்று, கடைசியில் 25-ஆம் நம்பர் வீட்டையும் கண்டுபிடித்தோம்.

வீடு சிறியதாக இருந்தபோதிலும் பார்ப்பதற்கு அழகாகவும், கச்சிதமாகவும் இருந்தது. வீட்டின் தலைவாசல் கதவு சாத்தி, தாழிடப் பட்டிருந்தது. இருவரும் கதவின் முன்னால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு தயங்கி நின்றோம். இதற்குள் விமான எதிர்ப்பு நீக்கத்தை அறிவிக்கச் சங்கு அலறியது. நான் தைரியமாக "சார், சார்" என்று கதவைத் தட்டினேன்.

"யாரது?" என்று உள்ளிருந்து ஒரு குரல் வந்தது. குயிலினும், யாழினுமினிய அக்குரலைக் கேட்டதும் இருவரும் உண்மையிலேயே அசந்து போய்விட்டோம். ஏனெனில் அவ்வீட்டினுள்ளிருந்து ஓர் இளம் பெண்ணின் இனிய குரலை நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை.

மறு நிமிடம் பக்கத்திலிருந்த ஜன்னலிலிருந்து "யார் அங்கே?" என்று சற்று அதிகாரத்துடன் அக்குரல் வரவே இருவரும் ஜன்னல் பக்கம் திரும்பி ஓர் அடி எடுத்து வைத்தோம். ஜன்னலின் மேல்கதவு மாத்திரம் திறக்கப் பட்டிருந்ததால் அவளுடைய ஒளி வீசும் கண்களும், தலையும் மாத்திரம் தெரிந்தது. காக்கிச்சட்டை அணிந்த எங்களிருவரையும் கண்டதுமே அந்த வட்டக் கரிய விழிகள் வெறுப்பு ஜ்வாலையை வீசின. ஜயராமன் அந்தச் சுட்டும் விழிச்சுடர்களின் ஒளியில் மங்கிப்போய் அக்கண்களையே உற்று நோக்கிக்கொண்டிருந்தார். கிழிந்த காக்கிச்சட்டை அணிந்த ஜயராமன் தன்னையே நோக்குவதை அறிந்த அக்கண்களில் கோபக்கனல் வீசிற்று. "போங்களடா வேலையற்ற தடியன்களா!" என்று சொல்லிக்கொண்டு தடாலென்று ஜன்னல் கதவை அடித்துச் சாத்திக்கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

"தாய், தந்தை, சகோதர, சகோதரிகள் எல்லாரையும் பிரிந்து, உயிரையே பணயமிட்டு, தமிழ் நாட்டார் சேனைக்கு உபயோகமில்லை என்ற வார்த்தையைப் பொய்யாக்கி, தமிழ் நாட்டார் உலகிலுள்ள எந்த நாட்டின் வீரர்களுக்கும் இணையானவர்கள் மட்டுமல்ல, மேன்மையானவர்கள் என்று நிரூபித்த ஒருவீரனுக்கு, அவன் காக்கிச் சட்

டை அணிந்திருப்பதாலா இந்த அவமானம்? ஏதோ சில காக்கிச் சட்டை அணிந்த காலிகள் குற்றம் செய்துவிட்டால் எல்லோரும் குற்றவாளிகளா?—என என் மனம் நொந்தது ஜயராமனும் மனம் வெதும்பிப் போனார்.

'இந்த வீட்டில் இந்த யுவதியைத் தவிர வேறு ஒருவரும் இல்லை போலிருக்கிறதே? விஷயமோ முக்கியம்; அவசியம் சொல்லியாக வேண்டும். தெரிவிக்காமல் போனால் கடமையில் தவறியவர்களாவோம். இவ்வாறெல்லாம் யோசித்தோம். கடைசியில் அடுத்தவீட்டில் யாராவது ஆண்களிருந்தால் அவர்கள் மூலமாக விஷயத்தைத் தெரிவிக்கலாம் என்று அடுத்த வீட்டிற்குச் சென்றோம். அடுத்த வீட்டில் சுமார் 30 வயதுள்ள ஒரு பர்மியர் இருந்தார். அவர் தம் மனைவியின் மூலமாய் அப்பெண்ணுக்கு விஷயத்தைச் சொல்லியனுப்பினார்.

சுந்தரம் என்பவர் வெகுநாட்களாக ரங்கூனிலேயே இருக்கிறார் என்றும், ரயில்வேயில் வேலை பார்த்துவிட்டு இப்போது 'ரிடயர்' ஆகி இருக்கிறாரென்றும், அவருடைய நாற்பதாவது வயதிலேயே அவர் மனைவி இறந்துவிட்டாளென்றும், தம்முடைய ஒரே பெண்ணை ரொம்ப செல்வமாக அவர் வளர்த்து வருகிறாரென்றும் அந்தப் பர்மியர்மூலம் தெரிந்துகொண்டோம். அவருடைய வரலாற்றை அறிந்ததும் ஜயராமன் இன்னும் அதிக மனக்கிலேசமடைந்தார். முன்னாலேயே அவ்வளவு வெறுப்பும், கோபமும்கொண்ட அவள், தன் தந்தைக்குத் தீங்கிழைத்தவன் என அறிந்ததும் எவ்வளவு கோபமடைந்து ஏசுவாளோ என எண்ணி ஜயராமன் அடங்கி, ஒடுங்கிப் போயிருந்தார்.

தன் தந்தையைப் பற்றின விஷயத்தை அறிய அந்த யுவதி வெகு வேகமாக நாங்களிருந்த இடத்தை நோக்கி வந்தாள். வயது பதினெட்டிருக்கும்; மின்னும் பொன்னிறமான உடல்; கவர்ச்சியுள்ள முகம்; தங்கத் தகட்டை ஒத்த நெற்றி; நடுவில் குங்குமம்; தலையில் கட்டு மயிர்; சிலைபோன்று அங்கங்கள். அவளது ஒளிவீசும் கண்கள் அவள் தன் தந்தையைப்பற்றி அறிய இருக்கும் ஆவலைக் காட்டின. அவள் கருநீலப் பட்டுப்புடவை தரித்துக்கொண்டு எங்களை நோக்கி வந்தது, பொங்கிவரும் பெருநிலவைப்போல் இருந்தது. ஜயராமன் அவளையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

எங்களருகில் வந்ததுமே சற்றுத் தயங்கினாள். ஏனெனில் இவர்களைத் தகாத வார்த்தைகள் சொல்லி விரட்டிவிட்டோமே என்று அவள் மனதில் குத்தியிருக்க வேண்டும். அடுத்தவீட்டுப் பர்மியரின் மனைவியின் பக்கத்தில் வந்து ஒடுக்கத்துடனும், நாணத்துடனும் நின்றுகொண்டாள். அவள் கருவிழிகளை அவளது கண்கள் அவளையறியாமலே ஜயராமன்பால் இழுத்துச் சென்றன. இருவர் கண்களும் சந்தித்து வெருண்டன. ஏன் ?

அடுத்த வீட்டுக்காரர் பர்மிய பாஷையில் ஏதோ அவளிடம் சொன்னார். தந்தையின் மீது 'ஜீப்' ஏறிவிட்ட விஷயத்தைத்தான் சுருக்கமாகச் சொல்லி இருக்கவேண்டும். யுவதி எங்களிடமிருந்து விஷயத்தை அறிய எங்களை நோக்கினாள்.

"நாங்கள் வேகமாகப் போகும்போது முகல்தெரு முனையில் தவிர்க்க முடியாமல் எங்கள் கார் அவர்மீது மோதிவிட்டது. காலில் காயம் பட்டுவிட்டது. நாங்கள் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விட்டிருக்கிறோம். தங்களிடம் தகவல் கொடுப்பது எங்கள் கடமை என இங்கு வந்தோம். எங்களையே அறியாமல் தவறுதல் நடந்து விட்டது. நாங்கள் ரொம்ப வருந்துகிறோம். எங்களை மன்னிக்கவேண்டும் என மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்கள் அவரைப் பார்க்க விரும்பினால் இப்போதே போகலாம்" என்று அந்த யுவதியையும், பர்மியரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நாகரிகமாயும், பவ்யமாயும் சொன்னார் ஜயராமன்.

அவரது வார்த்தைகளைக் கேட்டவுடனேயே அவள் முகம் மாறிவிட்டது. சோகத்தின் நடுவில் பச்சாத்தாபம் படர்ந்தது. காக்கிச் சட்டை அணிந்தவன் இவ்வளவு சுஹிருதயமுள்ளவனாயிருப்பான் என அவள் எதிர்பார்க்கவே இல்லை. அவர்கள் எல்லோரும் முரடர்கள் என்று யாரோ செய்திருந்த பிரசாரம் அவள் மனதில் ஊறிப்போயிருந்தது. ஜயராமனைச் சந்தித்ததுமே அவள் எண்ணங்கள் யாவும் பறந்தோடி விட்டன என்பதை அவள் முகம் காட்டிற்று.

எல்லோரும் ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். கிழவரைப் பாாத்தோம். அதிகமாகச் சொல்லுவானேன், ஜயராமன் தினமும் ஆஸ்பத்திரிக்குச் செல்லுவார். சற்று நேரம் ஓய்வு கிடைத்தால்கூடக் கிழவரைப் பார்க்கச் சென்று விடுவார். பலவிதமான சிசுருஷைகள் செய்வார். தாம் செய்த பிசகிற்கு அதுவே பரிகாரம் என எண்ணினார் போலும். அவரது பணிவையும், நன்னடத்

கையாகச் சோதித்துக்கொண்டு சென்றோம்.

மூலையில் ஒரு படுக்கையில் கிழவர் சுந்தரம் பிள்ளை முனுகிக்கொண்டிருந்தார். அவரைக்கண்டதும் ஜயராமன் "சுந்தரம் பிள்ளைவாள்!" என்றார்.

கிழவர் கண்ணைத் திறந்து பார்த்தார். "ஜயராமனு! வா அப்பா; நீ கட்டாயம் வருவாய் என்று தெரியும்" என்றார்.

ஜயராமன் தாம் திடீரென்று போக நேர்ந்துவிட்ட வரலாற்றைச் சொன்னார். "நீங்கள் எப்படிக் காயம் அடைந்தீர்கள்? லலிதா எங்கே?" என்றார்.

"லலிதா!" என்றதுமே கிழவரின் கண்களில் நீர் மல்கியது. அவர் குரல் தழுதழுத்தது. அப்படியே படுக்கையில் சாய்ந்துவிட்டார். ஜயராமன் ஒன்றும் விளங்காமல் அப்படியே நின்றுவிட்டார்.

"குண்டுக்கு இரையாகி விட்டாள்" என்றார் கிழவர்.

ஜயராமன் மனம் துணுக்குற்றது. முகம் வெளிறிப்போய்விட்டது.

"ஒருநாள் ராத்திரி. தூங்கிக்கொண்டிருந்தோம். ஒருபாழும் பயல் குண்டுபோட்டுவிட்டான். வீடு தரைமட்டமாகிவிட்டது. அவளைப்பலியாக்கிவிட்டது. நானும் பிழைப்பது கஷ்டம் என்கிறார் டாக்டர். வைத்திய உதவி இல்லாமல்-வேறு ரொம்ப நாட்கள் கஷ்டப்பட்டேன்" என்றார் கிழவர்.

"வைத்திய உதவி கிடைக்க எத்தனைநாட்கள் ஆயின?" என்று கேட்டேன் நான்.

"ஏப்ரல் மாதம் 20-ஆம் தேதி இரவு பெரிய குண்டு வீச்சு......" என்று தொடங்கினார் கிழவர்.

"எப்போது?" என்று திடுக்கிட்டுக் கேட்டார் ஜயராமன்.

"ஏப்ரல் 20 ஆம் தேதியன்று திணறவடித்து விட்டான் அந்தப் பாவிப் பயல்" என்றார் கிழவர்.

"ஏப்ரல் இருபதாந் தேதியா?" என்று தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார் ஜயராமன்.

மறுநாள் எங்கள் படையில் ஒரு கூட்டம் நடந்தது. "ஏப்ரல் மாதம் 20-ஆம் தேதி முதல் பிரபல முன்னணியை உண்டாக்கி, ரங்கூன் வெற்றிக்குக் காரணமாயிருந்ததற்காக" என்று ஏர்-வைஸ்-மார்ஷல் ஜயராமனுக்கு ஓ. பி. ஈ. என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள்.

அதிகமாகக் கதையை வளர்ப்பானேன்? மணியும் ஒன்றாகப் போகிறது. உனக்கும் தூக்கம் வரும். மறுநாள் கிழவரும் மேலுலகம் சென்றார். உயிரினுமினிய காதலியும், அவளுடைய அன்பான தந்தையும் சாவதற்குக் காரணமாயிருந்தது ஏப்ரல் மாதம் 20-ஆம் தேதி முதல் தாம் நடத்திய குண்டு வீச்சே என அறிந்தது முதல் அவர் மனம் உடைந்துவிட்டது. அன்பர்கள் இறந்தபின் நாம் உயிர்வாழ்ந்து என்ன பயன் என்று வாழ்க்கையையே வெறுத்துவிட்டார். உயிரையே திருணமாகக் கருதிவிட்டார். ஆதலால்தான் விமானத்தை அன்றுமுதல் அபாயங்களைக்கூடப் பொருட்படுத்தாமல் அப்படிச் செலுத்துகிறார்."

என்று நீலகண்டன் சொல்லி முடித்தான்.

அடுத்த நிமிஷம் கூடாரத்திற்குள் 'பளிச்' சென்று 'டார்ச்' லைட்டின் வெளிச்சம் அடித்தது. இருவரும் திடுக்கிட்டுப் பார்க்கிறோம். அங்குப் பைலட் ஆபீஸர் ஜயராமனே நிற்கிறார்.

"நீலகண்டா, உன் கதை வெகு ஜோர். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதானிருந்தேன்" என்றார்.

நீலகண்டன் மௌனம் சாதித்தான்.

"சீனு, நீலகண்டன் சொன்ன கதை பூராவும் உண்மைதான்; ஆனால் ஒரே ஒரு சின்ன மாறுதல்மட்டும் செய்துகொள்ளவேண்டும். இல்லையா நீலகண்டா?" என்றார்.

நீலகண்டன் தலை குனிந்துகொண்டான். "மாறுதல் என்ன?" என்றேன் நான்.

"மாறுதலா? கதாநாயகன் பெயர் ஜயராமன் என்றிருக்கிறதல்லவா, அதற்குப் பதில் அந்த இடத்தில் நீலகண்டன் என்றும் நீலகண்டன் என்று இருக்குமிடத்தில் ஜயராமன் என்றும், மாற்றிக்கொள்ள வேண்டும். சரிதானே நீலகண்டா?" என்றார்,

நீலகண்டனின் முகம் மாறியது; ஆகாயத்தில் தனியாக மின்னிக்கொண்டிருந்த ஒரே நக்ஷத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஜயராமன் "நல்ல இரவு" என்று இங்கிலீஷில் சொல்லிவிட்டுச் சென்றார். நான் படுக்கையில் சாய்ந்தேன். தூரத்தில் இரு சாதகப் பக்ஷிகள் கூவிக் கொண்டிருந்தன.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

22558